REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 மே 10 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 தினகரன்

வரு. 92 இல. 111 | Friday 10, May, 2024 | 24 பக்கங்கள் | 50/-

## திருமணத்துக்கு முன் தலசீமியா பாதிப்பா? பரிசோதிப்பது அவசியம்

**நாட்டில் 2,000 குழந்தைகளுக்கு தலசீமியா நோய்**

நாட்டில் சுமார் 2,000 குழந்தைகள் (Beta thalassemia) பீட்டா தலசீமியா நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக தலசீமியா நோய் வைத்திய நிபுணர் டாக்டர் ஈ. எம் ரஞ்சனி எதிரிசூரிய தெரிவித்துள்ளார்.

சர்வதேச தலசீமியா தினத்தை முன்னிட்டு, கொழும்பு சுகாதார மேம்பாட்டு அலுவலகத்தில் நடைபெற்ற 06




# நாட்டின் முன்னேற்றத்துக்கு பொது உடன்பாடு அவசியம்

## பாராளுமன்றத்தில் நேற்று விசேட உரையில் ஜனாதிபதி தெரிவிப்பு



**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

ஒற்றுமை, பொது உடன்பாட்டுடன் முன்னோக்கிச் சென்றால், இலங்கையை உலகில் அபிவிருத்தியடைந்த நாடாக விரைவில் உயர்த்த முடியுமென, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். நாட்டுக்கான பொது உடன்பாட்டின் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

நாட்டின் எதிர்கால சந்ததியினருக்கு கிடைத்திருக்கும் வாய்ப்பை நழுவ விட வேண்டாமெனக் கேட்டுக்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்த இக்கட்டான நேரத்தில் நாட்டை விட்டு தனிப்பட்ட இலட்சியங்களைக் கருத்திற்கொண்டு செயல்படுவது, மாபெரும் அழிவின் ஆரம்பமாக அமையும் என்றும் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று (09) ஆற்றிய விசேட உரையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்திற்கு நேற்று வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் தற்போதைய நிலை, எதிர்கால செயற்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை உள்ளடக்கி விசேட உரையொன்றை ஆற்றினார்.

- ஒற்றுமை, பொது உடன்பாட்டுடன் முன்னோக்கிச் சென்றால், இலங்கையை உலகில் அபிவிருத்தியடைந்த நாடாக விரைவில் உயர்த்த முடியும்.
- நாட்டின் எதிர்கால சந்ததியினருக்கு கிடைத்திருக்கும் வாய்ப்பை நழுவ விடக்கூடாது.
- இன்று நாம் எவ்வாறு செயல்படுகிறோம் என்பதை வைத்தே எமது எதிர்காலம் தீர்மானிக்கப்படுகிறது.
- இக்கட்டான நேரத்தில் நாட்டை விட்டு தனிப்பட்ட இலக்குகளைக் கருத்தில் கொண்டு செயல்படுவது மாபெரும் அழிவின் ஆரம்பமாகும்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி:

இன்று நாம் எவ்வாறு செயல்படுகிறோம் என்பதைப் பொறுத்தே எமது எதிர்காலம் தீர்மானிக்கப்படுமென்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். தம்மை நாட்டுக்கு துரோகம் செய்தவர்களாக முத்திரை குத்திக்கொள்வதா அல்லது நாட்டின் மீது அன்பு கொண்டவர்கள் என்ற அடையாளத்தை பெறுவதா என்பதை தீர்மானிக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகள் மாத்திரமின்றி, மதத் தலைவர்கள், தொழிற்சங்கங்கள், வர்த்தக சமூகம், அரச சார்பற்ற அமைப்புகள், வெவ்வேறான சிந்தனைகளைக் கொண்ட தலைவர்கள், சமூகத்தில் தாக்கம் செலுத்தக்கூடியவர்கள் உள்ளிட்ட சகலரும் பொது உடன்பாட்டுடன் இணைந்துகொள்ள வேண்டியது அவசியம் என்பதையும் ஜனாதிபதி மேலும் வலியுறுத்தினார். தொலைநோக்குப் பார்வை இல்லாமல் 06

## தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் திருத்தச் சட்ட மூலம் இன்று சமர்ப்பிப்பு



தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான திருத்தப்பட்ட சட்டமூலம், 28 வருடங்களின் பின்னர் இன்று (10) பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென, தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

தேசிய சைபர் பாதுகாப்புச் சட்டத்தை இம்மாதம் தயாரிக்கத் திட்டமி ட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (09) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் இதனைத் தெரிவித்தார். 06

## ஜனாதிபதி தேர்தல் வாக்களிப்பு செப். 17 முதல் ஒக்.16 வரை

**தேர்தல் ஆணைக்குழு நேற்று அறிவிப்பு**




ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான காலப்பகுதி தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று அறிவித்துள்ளது.

தேர்தல் திணைக்களம் இது குறித்து நேற்று (09) விசேட அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு செப்டெம்பர் மாதம் 17ஆம் திகதி மற்றும் ஒக்டோபர் மாதம் 16ஆம் திகதிக்கு உட்பட்ட காலப்பகுதியில் நடத்துவதற்கு ஏற்ப வேட்பு மனுக்கள் ஏற்கப்படும் என, ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் சுமார் ஒரு கோடியே எழுபது இலட்சம் வாக்காளர்கள் 06

## தங்கத்தின் விலை குறைவு

**22 கரட் பவுண் ரூ.178,900**



உலக சந்தையில் தங்கத்தின் விலைகள் கடந்த சில தினங்களாக ஏற்ற இறக்கங்களுடன் பதிவாகி வருகின்றன. தங்கத்தின் விலை சற்று அதிகரித்திருந்த போதும் நேற்று (09) தங்கத்தின் விலை சற்று குறைவடைந்தது.

நேற்றைய நிலவரத்தின் படி, ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை 6,91,274 ரூபாவாக காணப்பட்டது.

24 கரட் தங்கம் கிராம் 24,390 ரூபாவாக பதிவாகியுள்ளது. அதேவேளை 24 கரட் தங்கப் பவுண் 1,95,100 ரூபாவாக பதிவாகியுள்ளது. அதேபோல 22 கரட் தங்கம் கிராம் 22,360 ரூபாவாக பதிவாகியுள்ளது. 22 கரட் தங்கப் பவுண் 178,900 ரூபாவாக பதிவாகியுள்ளது.

21 கரட் தங்கம் ஒரு கிராமின் விலை 21,350 ரூபாவாக பதிவாகியுள்ளதுடன் 21 கரட் தங்கப் பவுண் 170,750 ரூபாவாக பதிவாகியுள்ளது.

## ஜனாதிபதித் தேர்தல் கட்டுப்பணம் 24 இலட்சமாக அதிகரிக்கப்படலாம்

**தேர்தல்கள் ஆணைக்குழுவில் ஆராய்வு**

ஜனாதிபதி தேர்தலுக்கான கட்டுப்பண தொகையை மிக பாரிய அளவில் அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கட்டுப்பணத்தை அதிகரிப்பது தொடர்பான யோசனைகள் பெற்றுக்கொள்ளப்பட்டதாக, தேர்தல்கள் ஆணைக்குழுவின் பிரதானி ஏ.எல்.ரட்ணாயக்க தெரிவித்துள்ளார்.

பொது மற்றும் சிவில் அமைப்புக்களிடமிருந்து இது 06



03 **மதுபான உற்பத்தி 19 வீதமாக குறைவு**

## டயனா கமகேவுக்கு வெளிநாடு செல்ல தடை




முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவுக்கு வெளிநாடு செல்வதற்கு நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை (09) டயனா கமகேவுக்கான வெளிநாட்டு பயணத்தடையை விதித்தது.

இரட்டை பிரஜாவுரிமை தொடர்பான வழக்கில் மனுதாரர் தரப்பு சட்டத்தரணிகள் விடுத்த கோரிக்கையை பரிசீலித்த 06



**மாநகர சபை முதல்வர் வேட்பாளரான**

## முஜிபுர் ரஹ்மானை எவ்வாறு எம்.பியாக நியமிக்க முடியும்?

**லோரன்ஸ் செல்வநாயகம்**

டயனா கமகேயின் பாராளுமன்ற பதவி வெற்றிடத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் எம்.பி. முஜிபுர் ரஹ்மானை நியமிக்க முடியாது என மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி சபை இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

கொழும்பு மாநகரசபையின் முதல்வர் வேட்பாளராக வேட்புமனு தாக்கல் செய்துள்ள நிலையில் அவர் பாராளுமன்ற உறுப்பினராக எவ்வாறு பதவிப்பிரமாணம் 06

## தோட்ட தொழிலாளர் சம்பள அதிகரிப்பு மே 15இல், அரசு உறுதியான தீர்மானம்

**அமைச்சர் மனுஷ நாணயக்கார சபையில் தெரிவிப்பு**



**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினை தொடர்பில் அரசாங்கம் முக்கிய கவனம் செலுத்தியுள்ளதாகவும், எதிர்வரும் 15இல், இது தொடர்பான முடிவை அரசாங்கம் அறிவிக்கும் என்றும் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார பாராளுமன்றத்தில் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று எரான் விக்ரமரத்ன எம்.பி 06

**ஸ்ரீல.சு.க தலைவராக செயற்படல்**

## மைத்திரிக்கு எதிரான தடை 29 வரை நீடிப்பு



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக செயற்படுவதற்கு விதிக்கப்பட்ட தடை உத்தரவு, எதிர்வரும் (29) வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று (09) தடை உத்தரவை நீடித்து உத்தரவிட்டது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா 06

## டயனாவின் வெற்றிடத்துக்கு பெண் ஒருவரையே நியமிக்கவும்

**பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியம் கோரிக்கை**



இராஜாங்க அமைச்சர் டயனா கமகேயின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடத்துக்கு பொருத்தமான பெண் ஒருவரை நியமிக்குமாறு கோரி, பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்தின் தலைவர் வைத்திய கலாநிதி சுதர்ஷினி பெர்னாந்துபுள்ளே, ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும 06

## எம்.பி பதவியை நான் இழந்தாலும் அரசியல் பயணத்தை தடுக்க முடியாது

**எப்போதும் ஜனாதிபதிக்கே ஆதரவு வழங்குவேன்**



வெறுப்புப் பேச்சுக்களால் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை தாம் இழந்தாலும் எனது அரசியல் பயணத்தை யாராலும் தடுக்க முடியாதென முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தெரிவித்தார்.

டயனா கமகே பிரிட்டன் பிரஜையாக இருப்பதால் இலங்கை பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்க சட்டரீதியாக 06

## தாய்லாந்திலிருந்து 'குஷ்' போதையுடன் வந்தவர் கைது

**ரூ. 02 கோடி பெறுமதியான 05 கிலோ போதைப்பொருள் மீட்பு**



**சுமார் 02 கோடி ரூபாவுக்கும் அதிகமான "குஷ்" போதைப்பொருளை நாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்த நபர் ஒருவர், கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.**

**கட்டுநாயக்க விமான நிலைய போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின்** 06

# நகர்வலம்



## சர்வதேச கடன் மறுசீரமைப்பு ஜூலை மாதத்தில் நிறைவடையும்

# நாடு வங்குரோத்து நிலையிலிருந்து மீட்கப்படும் அறிவிப்பு உத்தியோகபூர்வமாக விடுக்கப்படும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சர்வதேச கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் எதிர்வரும் ஜூலை மாதத்துக்குள் நிறைவடையும் என்றும் அப்போது நாடு வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டு விட்டதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் எனவும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் நாடு பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு சர்வதேசத்தின் ஒத்துழைப்பு அத்தியாவசியமானது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற இராஜதந்திர சிறப்புரிமை சட்டத்தின் கீழ் 2348/48ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகள்,பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் 2340/02 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



சகல சர்வதேச நாடுகளுடனும் பிளவுபடாத வெளிவிவகார கொள்கையுடன் இணக்கப்பாட்டுடன் செயற்படுவதே அரசாங்கத்தில் எதிர்பார்ப்பாகும்.

தேசிய வளங்களைப் பாதுகாத்து, அதன் உச்ச பயனை பெற்றுக் கொள்வதற்கு பிளவடையாத வகையில் வெளிவிவகார கொள்கையை செயற்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஈரான் ஜனாதிபதி அண்மையில் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்தார். அந்த வகையில் அவரது வருகையின் பின்னர் இலங்கையின் வெளிவிவகார கொள்கை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிட வேண்டும்.

உமா ஓயா அபிவிருத்தி செயற்திட்டத்தை ஈரான் ஜனாதிபதி திறந்து வைத்ததுடன் அந்த திட்டத்தின் ஊடாக தேசிய மின்கட்டமைப்புக்கு 120 மெகாவோட் மின்சாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. நீர்மின் உற்பத்தி நடவடிக்கைகள் விரிவு படுத்தப்பட்டுள்ளதால் எதிர்வரும் ஜூலை மாதமளவில் மின்கட்டணத்தை மேலும் குறைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஈரான் நாட்டின் பெருமளவு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர். ஈரானுக்கும், இலங்கைக்கும் இடையிலான சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் வகையில் இலங்கைக்கு நேரடி விமான சேவைகளை முன்னெடுக்க ஈரானிய அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. அதனூடாக இலங்கையின் சுற்றுலாத்துறை கைத்தொழில் முன்னேற்றமடையும்.

சவூதி அரேபியாவில் இடம்பெற்ற 'உலக பொருளாதார பேரவை' மாநாட்டில் கலந்து கொள்ளும் வாய்ப்பு அண்மையில் கிடைத்தது. இலங்கையின் பொருளாதார நிலைமை தொடர்பில் அந்நாட்டின் வெளிவிவகாரம், முதலீடு மற்றும் பொருளாதாரத்துறை அமைச்சர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட முடிந்தது. இதன் பிரதிபலனாக சவூதி அரேபியாவுடன் 'முதலீட்டு மேம்பாட்டு ஒப்பந்தம்' ஒன்றை கைச்சாத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஜப்பானிய வெளிவிகா அமைச்சரின் இலங்கை விஜயத்தின் போது பல விடயங்கள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அந்த வகையில் கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் ஜப்பான் தலைமைத்துவம் வகிப்பது இலங்கைக்கு சாதகமாக காணப்படுகிறது.

கடன் மறுசீரமைப்புக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாக ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் எமக்கு உறுதியளித்துள்ளார். அத்துடன் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் நிறைவு பெற்றதன் பின்னர் இடைநிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்தி செயற்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என ஜப்பான் வலியுறுத்தியுள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.



கட்டார் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற அமெரிக்க TEXAS பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவில் அம்னா இப்பத் தாரிக் காசிம் பல விருதுகளுடன் தனது (CHEMICAL ENGINEER) பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். இவர் தாஹா காசிமின் பேத்தியும் மருதமுனை புலவர்மணி ஷரிபுத்தீனின் கொள்ளுப் பேத்தியுமாவார்.

# புத்தளம் முன்னாள் காதி நீதவானுக்கு 17வரை விளக்கமறியல் நீடிப்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**



புத்தளம் முன்னாள் காதி நீதிபதியை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியிலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்ற நீதிபதி உத்தர விட்டுள்ளார்.

இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டின் கீழ் இலஞ்ச ஊழல் தடுப்பு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தின் உத்தரவில் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர், கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது, சந்தேக நபர் சார்பில் பிணை கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

எனினும், குறித்த பிணை கோரிக்கையை நிராகரித்த நீதவான், எதிர்வரும் 17 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, புத்தளம் பதில் காதி நீதிமன்ற நீதிபதியாக நீர்கொழும்பு காதி நீதிமன்ற நீதிபதி அஷ்ஷெய்க் எம்.எம்.முஹாஜிரீன் (இஹ்ஸானி) நியமிக்கப்பட்டுள்ளார்.

# இந்திய தூதுவருடன் சதீஷ்குமார் சந்திப்பு



இலங்கைக்கான இந்தியத் தூதுவராக பதவியேற்றுள்ள சந்தோஷ் ஜாவுக்கு மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உப தலைவர் முனைவர் சதீஷ்குமார் சிவலிங்கம் சந்தித்து வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இந்தியத் தூதுவரை வரவேற்கும் முகமாக சர்வதேச கோபியோ அமைப்பின் ஏற்பாட்டில் வரவேற்பு நிகழ்வொன்று திங்கட்கிழமை (6) மாலை கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் நடைபெற்றது.

அமைச்சர் ஜீவன் தொண்டமான், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், கோபியோ இலங்கை கிளையின் தலைவர் குமார் நடேசன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# தோட்டத் தொழிலாளர்களின் நாள் சம்பளம் 1700 ரூபாவாக உயர்வு

## ஜனாதிபதிக்கு சதீக் முப்தி நன்றி தெரிவிப்பு



தோட்டத் தொழிலாளர்களின் நாள் சம்பளத்தை 1700 ரூபாவாக உயர்த்தியமைக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஸ்ரீலங்கா ஐக்கிய முன்னணி கட்சியின் தேசியத் தலைவர் அஷ்ஷெய்க் மௌலவி சதீக் முப்தி நன்றி தெரிவித்துள்ளார்.

மேலும் பல தசாப்த காலமாக லயன்களின் வாழும் தோட்டத் தொழிலாளர்கள் 700 ரூபா சம்பளத்தை பெற்று மிகவும் கஷ்டங்களுக்கு மத்தியில் தமது குடும்பத்தை வழிநடத்தி வந்தார்கள். அதேபோன்று ஐந்து வருடத்திற்கு ஒருமுறை நடைபெறுகின்ற பாராளுமன்ற தேர்தல் வேட்பாளர்கள் அங்கு வந்து 700 ரூபா சம்பளத்தை 1700 ரூபாவாக கூட்டித் தருகின்றோம் என்று போலி வாக்குறுதிகளை கொடுத்து அம்மக்களின் வாக்குப் பலன்களை பெற்று அரசியல் அதிகாரம் அடைந்ததும் அவர்கள் சுகபோகமாக வாழ்ந்து வருகின்றார்கள் என்றும் கடந்த காலங்களாக நாட்டை ஆட்சி செய்த ஆட்சியாளர்கள் அதிகாரம் இருந்தும் இதற்கு எந்த வித தீர்வும் பெற்றுக் கொடுக்கவில்லை என்றும் வெறுமனே வாக்குறுதிகளாக மட்டுமே இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் மலையகத்துக்கு சென்ற ஜனாதிபதி, தோட்டத் தொழிலாளர்களை நேரடியாக சந்தித்து அவர்களின் அன்றாட பிரச்சினைகளை கேட்டறிந்து சம்பள பிரச்சினைக்கு தீர்வு பெற்றுத் தருவதாக கூறி, உடனடியாக கொழும்புக்கு வந்து கம்பெனிகளுடன் கதைத்து அதற்குரிய தகுந்த தீர்வை பெற்றுக் கொடுத்த தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க காணப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கேரளா, ராஜகிரி சமூக அறிவியல் கல்லூரி ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலையுடன் ஒப்பந்தம்





**ருஸைக் பாரூக்**

இந்திய கேரளா கொச்சியில் அமைந்துள்ள ராஜகிரி சமூக அறிவியல் கல்லூரி மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் ஆகியவை இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை கைச்சாத்திட்டனர். இந்நிகழ்வு கடந்த 06ஆம் திகதி திங்கட்கிழமை, கொழும்பு ஹில்டன் ரெசிடென்சியில் ஹோட்டலில் இலங்கைக்கான பணிப்பாளர் சாஹிர் மர்சூக் தலைமையில் நடைபெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க, இராஜகிரி கல்லூரியின் அதிபர் சகோ. டாக்டர் சஜு, இந்திய வெளியுறவு சேவை வேணு ராஜாமோனி, இணை இயக்குனர் ராஜகிரி கல்லூரி டாக்டர் பினோய் ஜோசப் மற்றும் ராஜகிரி கல்லூரி மனித வளங்கள் பொறுப்பாளர் டாக்டர் மனோஜ் மேத்யூ ஆகியோர் கூட்டத்தில் உரையாற்றினர்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் மூத்த பேராசிரியர் பத்மலால் எம். மனோஜ் மற்றும் ராஜகிரி கல்லூரியின் அதிபர் சகோ. டாக்டர் சஜு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். பல்கலைக்கழக மானியங்கள் குழுவின் துணைத் தலைவர் மூத்த பேராசிரியர் சி.பி. உடவத்த, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வர்த்தக பீட பீடாதிபதி கலாநிதி துஷான் ஜயவர்தன, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சர்வதேச அலுவல்கள் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வர்த்தக பீடத்தின் பணிப்பாளர் கலாநிதி சண்டமாலி கல்டோலகே, தென்கிழக்கு பல்கலைக்கழக கணிதவியல் திணைக்களப் பேராசிரியர் ஏ.எம். ரஸ்மி, தென்கிழக்கு பல்கலைக்கழக திணைக்களப் பேராசிரியர் (சந்தைப் படுத்தல்) பேராசிரியர் எம்.ஐ.எம். ஹிலால் மற்றும் பாடசாலை அதிபர்கள் ரிஸ்வி மரிக்கார் (சாஹிரா கல்லூரி), மொஹமட் ரிஸ்கி (ஹமீட் அல் ஹுசைனி கல்லூரி), திருமதி. எப். சரூனா (அல் ஹிதாயா கல்லூரி), திருமதி. ஏ.எல். எஸ். நசீரா ஹசனார் (கைரியா பெண்கள் கல்லூரி) மற்றும் பிரதி அதிபர் பர்ஹானா அமீர்தீன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தமைக்கு இலங்கைக்கான பணிப்பாளர் சாஹிர் மர்சூக் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

## எனசல்கொல்ல மத்திய கல்லூரியில்

# பழைய மாணவர்களுக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டி





கண்டி மாவட்டம், தெல்தோட்டை எனசல்கொல்ல மத்திய கல்லூரியின் பழைய மாணவர்களை கல்லூரியின் அபிவிருத்தியின் பங்காளர்களாக மாற்றும் நோக்கில் மூன்றாவது முறையாகவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாபெரும் மென்பந்துக்கிரிக்கட் சுற்றுப்போட்டி எதிர்வரும் 23, 24 மற்றும் 25ஆம் திகதிகளில் மெதகெகில ஸ்ரேன்ஜர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

'ஒன்றிணைவோம் பலம்பெறுவோம்' எனும் தொனிப்பொருளின் கீழ் இடம்பெறும் இந்த மாபெரும் கிரிக்கட் சுற்றுப்போட்டியில் பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், ஊர் வாசிகள் என அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பழைய மாணவர் சங்கத்தினர் அழைப்பு விடுக்கின்றனர்.

# களுத்துறை மாவட்டத்தின் 13 பிரதேச செயலக பிரிவிலிருந்தும் 73 பேர் கிராம அதிகாரிகளாக நியமனம்

**(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)**

நாடளாவிய ரீதியில் பிரதேச செயலகப் பிரிவுகள் மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கிராம அதிகாரிகள் நியமனத்தில் இரண்டு சிறுபான்மையினர் உள்ளிட்ட எழுபத்து மூன்று பேர் களுத்துறை நிர்வாக மாவட்டத்தில் பதின்மூன்று பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்தும் கிராம அதிகாரிகளாக நியமனம் பெற்றுள்ளனர்.

களுத்துறை நிர்வாக மாவட்டத்தில் பேருவளை பிரதேச செயலகப் பிரிவிலிருந்து எட்டுப் பேர் கிராம அதிகாரி பதவிக்கு தெரிவாகியுள்ளதுடன் அதில் இரண்டு முஸ்லிம்கள் தெரிவாகியுள்ளமை விசேட அம்சமாகும். எம்.எச்.பாத்திமா ஹஸ்லா மற்றும் எம்.எச். பாத்திமா சுனா ஆகிய இருவருமே இவ்வாறு தெரிவாகியுள்ளனர்.

மேற்படி மாவட்டத்தின் பாணந்துறை5, பண்டாரகம3, ஹொரண4, இங்கிரிய1, புளத்சிங்கள4, மில்லனிய1, களுத்துறை26, பேருவளை8, தொடங்கொட 2, மதுகம6, பாலிந்தநுவர3, அகலவத்த3 மற்றும் வலல்லாவிட்ட7 என்றவாறு பிரதேச செயலகப் பிரிவுகளில் புதிய கிராம அதிகாரிகள் தெரிவாகியுள்ளனர்.

கிராம அதிகாரிகளை ஆட்சேர்ப்பதற்காக நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சையின் அடிப்படையில் மேற்படி நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

# கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் வயலின் இசை விருந்து

கொழும்பு, தமிழ்ச் சங்கத்தில் இன்று 1 0 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இலக்கியகளம் நிகழ்வு நடைபெறவுள்ளது. தமிழ்ச் சங்க பேரவை உறுப்பினர் திருமதி வசந்தி தயாபரன் தலைமையில் “வயலின் இசை விருந்து” நடைபெறவுள்ளது.

கலாவித்தகர் ஸ்ரீமதி மதுரா பாலச்சந்திரன் இசை அளிக்கையினை நிகழ்த்துவார். குயிலுவக் கலைஞர் மிருதங்கம் திரு. வை. வேனிலான் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

## 2023 க.பொ.த சா/த

# மீள் திருத்த பெறுபேறுகளின் படி நாச்சியாதீவு மாணவிக்கு '9A' சித்தி

**திறப்பனை தினகரன் நிருபர்**

கடந்த வருடம் நடைபெற்று முடிந்த க.பொ.த (சாதாரண) தர பெறுபேறுகளின் மீள் திருத்த பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின. இதன்படி அ / நாச்சியாதீவு முஸ்லிம் மகா வித்தியாலய மாணவி எம்.டி. இப்பத் சனா 09 ஏ சித்திகளை பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

இவர் அநுராதபுரம் சாஹிரா தேசிய பாடசாலையின் பிரதி அதிபர் தில்ஷாத் (நளீமி) மற்றும் அ/ நாச்சியாதீவு முஸ்லிம் மகா வித்தியாலய ஆசிரியை ஏ.எம்.எஸ்.பௌசியா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வியாவார். இப்பாடசாலையிலிருந்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுள் ஏற்கனவே ஒரு மாணவி மாத்திரமே 09 ஏ சித்திகளை பெற்றிருந்த நிலையில், குறிப்பிட்ட இம் மாணவியின் மீள் திருத்த பெறுபேறுகளின் பிரகாரம் இவர் 09 ஏ சித்திகளை பெற்று சாதனை படைத்தார். இவருடன் சேர்த்து இரண்டு மாணவிகள் இம்முறை 09 ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கும் சித்தியடைந்த ஏனைய மாணவர்களுக்கும் பாடசாலை சமூகம் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# தென்றல் எப்.எம். "மதுர கீதங்கள்" இசை நிகழ்ச்சி கொழும்பில்

## பிரதம அதிதியாக பொலிஸ் மாஅதிபர் பங்கேற்பு

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தென்றல் எப். எம். வழங்கும் 14 ஆவது "மதுர கீதங்கள்" விஷேட இசை நிகழ்ச்சி எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு ஆனந்த சமரக்கோன்கலையகத்தில்நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். ரட்ணம் ரட்ணதுரை இசைக்குழுவினரின் இசையில் புதிய இடைக்கால, பழைய பாடல்கள் இடம்பெறவுள்ளன. நம் நாட்டின் பிரபல பாடகர், பாடகிகளின் பாடல்கள் இலங்கை வானொலி தென்றல் எப்.எம். அலைவரிசையூடாக நேரலையாக ஒலிபரப்பாகவுள்ளது.

கலாபூஷணம் ஏ. மகேந்திரன் மாஸ்டரின் நெறியாள்கையில் 14ஆவது மதுரகீதங்கள் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. வருகை தருவோருக்கு அனுமதி இலவசமாக வழங்கப்படும்.



யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம் பெற்று பாரம்பரிய கலைகளுள் ஒன்றான சிலம்பு போட்டி நிகழ்வில் கலந்துகொண்ட இளைஞர் விவகாரங்கள் விளையாட்டுத் துறை இராஜாங்க அமைச்சர் ரோஹன திசாநாயக்க மற்றும் யாழ். மாவட்ட அரச அதிபர் மற்றும் சிலம்பு உலகத் தலைவர் மற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரி ஆரம்ப பாடசாலை அதிபர் ஆகியோருடன் யாழ். பிரதேச இராணுவ அதிகாரி, விசேட அதிரடிப்படை அதிகாரிகளுடன் கந்தசாமி கருணாகரனும் கலந்துகொண்டார்.

பிங்கிரிய தொழில் வலய உட்கட்டமைப்பு பணிகள்

# அபிவிருத்திகளை இவ்வருட இறுதிக்குள் நிறைவு செய்யுங்கள்

## அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்பு



பிங்கிரிய தொழில் வலயத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்திப் பணிகளை இவ்வருட இறுதிக்குள் நிறைவு செய்யுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

பிங்கிரிய தொழில் வலயத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் உட்பட ஏனைய கட்டுமானங்களின் முன்னேற்றம் தொடர்பில் ஆராய்வதற்காக, ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (08) நடைபெற்ற சந்திப்பிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு பணிப்புரை விடுத்தார்.

மூன்று கட்டங்களின்கீழ், பிங்கிரிய தொழில் வலயத்தின் அபிவிருத்திப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.இந் நிலையில், முதல் கட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் உட்கட்டமைப்பு வசதிகள் குறிப்பிடத்தக்க அளவில் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

இப்பணிகளை இவ்வருட இறுதிக்குள் நிறைவு செய்யுமாறு பணிப்புரை விடுத்துள்ள ஜனாதிபதி, எதிர்வரும் ஜூன் மாதம் பணிகளை மேற்பார்வைச் செய்ய எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜனாதிபதியின் பொருளாதார விவகாரங்களுக்கான சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர். எஸ். எச். சமர துங்க, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் செயலாளர் எம். எம். நஜூமுதீன், மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுலக்ஷன ஜயவர்தன, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் ரஞ்சித் ரூபசிங்க, முதலீட்டுச் சபையின் தலைவர் தினேஷ் வீரக்கொடி ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.

## சுற்றுலா விசாவில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு செல்ல வேண்டாம்

சுற்றுலா விசாவில் தொழில் வாய்ப்புக்காக ஒருபோதும் வெளிநாடுகளுக்கு செல்ல வேண்டாமென, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. இலங்கையிலிருந்து இளைஞர்களை ரஷ்ய இராணுவ சேவைக்கு அனுப்பும் முயற்சியில், ஆட்கடத்தல் கும்பல் ஒன்று செயற்பட்டு வருவதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார குறிப்பிட்டுள்ளார்.

சுற்றுலா விசா மூலம் ரஷ்ய இராணுவ சேவையில் இணைந்து கொண்டு பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியவர்களின் உறவினர்கள், அண்மையில் அமைச்சரை சந்தித்து அமைச்சரின் பணிப்புரைக்கமைய குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடுகளை சமர்ப்பித்தனர்.

இதற்காக ரஷ்ய இராணுவத்தில் அதிக சம்பளத்தில் தொழில் தருவதாக கூறி ஓய்வு பெற்ற இராணுவ வீரர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளமையும் தெரியவந்துள்ளது. பாதுகாப்பு கடமைகளுக்காக இவர்கள், ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும், பல மாதங்களாக தங்களுக்கு உரிய சம்பளம் கூட வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் அனுமதியின்றி எந்தவொரு நபரும், இராணுவ சேவைக்காக வெளிநாடுகளுக்கு அனுப்பப்படமாட்டார்கள் எனவும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு தொழில் வாய்ப்புக்காக செல்ல வேண்டாம்.

தொழில் நிமித்தம் சென்றால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க நேரிடும் எனவும் அமைச்சர் மனுஷ நாணயக்கார குறிப்பிட்டுள்ளார்.

06

தினகரன்
THINAKARAN
තිනකරන්

# 92

வருடங்களுக்கு முன்
## தினகரன்
இன்று 10 மே 1932


லிபரல் மகா நாட்டு வருட விழா
திரு. பிரான்சிஸ் டீ. சொய்ஸாவின் தலைமை ப்பேருரை
சுயாட்சியே லக்ஷியம்
காங்கிரஸ் தலைவருக்குக் கண்டனம்; யாழ்ப்பாண யுவர்களுக்குப் பாராட்டு

## லிபரல் மகா நாட்டு வருட விழா

"யுவர்களிடத்தும், வயது முதிர்ந்தவர்களிடத்தும், இலங்கை வாசிகளின் ஒவ்வொரு பிரிவினரிடத்தும், நாட்டின் ஒவ்வொரு பகுதியினரிடத்தும் உள்ள வளர்ச்சிக்கேதுவாகிய சக்திகளையெல்லாம் நாம் ஒருங்குதிரட்டி ஓர் பொதுஜன இயக்கத்தை உண்டுபடுத்தி இலங்கை தன் பிறப்புரிமையை பெறுவதற்கு முயற்சிசெய்து வரவேண்டும்" என்ற வார்த்தைகள் சென்ற சனிக்கிழமையன்று கூடிய லிபரல் மகாநாட்டில் நிகழ்த்தப் பெற்ற தலைமைப் பேருரையில் மிஸ்டர் பிரான்சிஸ், டீ.சொய்ஸாவால் கூறப்பட்டன.

(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)

# சவால்களை ஜனாதிபதி ஏற்றதாலேயே நாடு ஸ்திரம் அடைந்தது





நாடு பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்த போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சவால்களுக்குப் பயந்து ஓடாமல், அதனை வெற்றிகரமாக எதிர்கொண்டதால் இரண்டு வருடங்களின் பின்னர், நாட்டை ஸ்திரப்படுத்த முடிந்துள்ளதாக ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சரியான அரசியல் தலைமைத்துவத்தினால் நாட்டின் பொருளாதாரம் மீண்டும் ஸ்திரத்தன்மை அடைந்துள்ளதாகவும், எதிர்கால சவால்களுக்கு முகம் கொடுத்து நாட்டைப் பலப்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாகவும் சாகல ரத்நாயக்க குறிப்பிட்டார்.

ஒரு பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான முதலீட்டில் கடுவெல, மாபிம பிரதேசத்தில் நிறுவப்பட்ட லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் புதிய எரிவாயு நிரப்பு நிலையத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வு (08) நடைபெற்றது. இந்த நிகழ்வில் சாகல ரத்நாயக்க இதனைக் குறிப்பிட்டார். மேலும் கருத்துத் தெரிவித்த சாகல ரத்நாயக்க கூறியதாவது:

"நிலையான அபிவிருத்தி மற்றும் பொதுமக்களின் தேவைகளை அதிகரிக்கும் நோக்கில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பேரில், நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய இந்த எரிவாயு நிரப்பு நிலையத்தை லிட்ரோ நிறுவனம் நிர்மாணித்துள்ளது.இதன் மூலம் எரிவாயு சிலிண்டர் கொள்ளளவை 1,80 000 இனால் அதிகரிக்க நிறுவனம் எதிர்பார்த்துள்ளது. தினமும் 60,000 கேஸ் சிலிண்டர்களை விநியோகிக்க எதிர்பார்க்கப்படுகிறது.

லிட்ரோ நிறுவனத்தினால் இவ்வளவு நவீன தொழில்நுட்பத்துடனான நிலையமொன்றை உருவாக்க முடியும் என்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கற்பனை செய்து பார்க்க முடியாது. லிட்ரோ நிறுவனத்திற்கு ஒரு மோசமான காலகட்டம் இருந்தது. கேஸ் சிலிண்டர்கள் வெடித்து சிதறின. கேஸ் கொள்வனவு செய்வதற்கு மக்கள் வரிசையில் நின்றனர். அரசாங்கத்திடம் அந்நியச் செலாவணி இருக்கவில்லை. அரசிடம் பணமும் இருக்கவில்லை. இது போன்ற ஒரு கடினமான காலத்தையே நாம் கடந்து வந்திருக்கிறோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சரியான தலைமைத்துவத்தால் வெளிநாடுகளின் ஆதரவு கிடைத்தன .

06

# "வரலாறாகும் வேதாந்தி" விஷேட முத்திரை வெளியீடு

(ஏ.ஜீ.எம் . தௌபீக்)



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபக தவிசாளரும் முன்னாள் பிரதியமைச்சருமான ஷேகு இஸ்ஸடீனுக்கு முத்திரை வெளியிடும் விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (12) அக்கரைப்பற்றில் நடைபெறவுள்ளது.

ஷேகு இஸ்ஸடீனின் 80 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட "வரலாறாகும் வேதாந்தி" என்ற பாராட்டு விழாவில் இம்முத்திரை வெளியிடப்படும்.

வேதாந்தியின் விடுதலைபாடிகள் ஏற்பாடு செய்துள்ள அகவை 80 பாராட்டு விழாவில், அவரது பாசறையில் வளர்ந்த பல பிரபலங்கள் உரையாற்றவுள்ளனர்.

கவிதை,நாடகம்,பாட்டு எனப் பல்வகை கலை அம்சங்களுடன் இந்தப் பாராட்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகத் தலைவர் முன்னாள் அமைச்சர் மர்ஹூம் அஷ்ரபுடன் இணைந்து செயற்பட்ட காலத்து அரிய படங்கள் மற்றும் அரசியலில் அவரது தடயங்களை பிரதிபலிக்கும் காணொளிகளும் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

දේශීය ආදායම් දෙපාර්තමේන්තුව
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
Inland Revenue Department

வரிசெலுத்துநர்களே உங்கள் கவனத்திற்கு!

கீழ்வரும் வரி கொடுப்பனவுகளை 2024, மே 15 அன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தவும்

| வரி வகை | | வரி வகை குறியீடு | காலப் பகுதிக் குறியீடு | கொடுப்பனவு வகை |
|---|---|---|---|---|
| 4 ஆவது காலாண்டு தவணை | கூட்டிணைந்த வருமான வரி (CIT) | 02 | 23244 | S |
| | தனியாள் வருமான வரி (IIT) | 05 | 23244 | |
| | பங்குடமை வருமான வரி (PIT) | 09 | 23244 | |
| ஏப்ரல் மாதத்தில் நிறுத்தி வைக்கப்பட்டவை | வட்டி மீதான முற்பண வருமான வரி (AIT) / நிறுத்திவைத்தல் வரி (WHT) | 43 | 24040 | |
| | கட்டணங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் மீதான முற்பண வருமான வரி (AIT) / நிறுத்திவைத்தல் வரி (WHT) | 44 | 24040 | |
| | முற்பண தனியாள் வருமான வரி (APIT) | 03 | 24040 | |

கொடுப்பனவு நறுக்குகள் கிடைக்கும் வரை காத்திருக்க வேண்டாம்

கவனத்தில் கொள்ளவும்:

- 2024.04.04 ஆம் திகதிய 2378/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமான அறிவித்தலின் பிரகாரம் வரிக்கொடுப்பனவுகளானது, கீழ்வரும் முறைமைகளை மட்டும் பயன்படுத்தி உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.
  - பண வைப்பின் மூலம்
  - கொடுப்பனவு கட்டளை அல்லது வங்கி வரைவோலையினை வைப்பு செய்வதன் மூலம்
  - இணைய வழிக்கொடுப்பனவுத் தளத்தினை பயன்படுத்துவதன் மூலம்
  
  மேலதிக விபரங்களுக்கு https://www.ird.gov.lk/en/publications/SitePages/Online_Pay_OTP.aspx?menuid=141601 இனை பார்க்கவும்
- CIT, IIT, PIT & APIT கொடுப்பனவுகள் இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் செலுத்தலாம்.
- AIT & WHT க்கான கொடுப்பனவுகள் மக்கள் வங்கியின் எந்தவொரு கிளையிலும் செலுத்தலாம் மேலும் கொடுப்பனவு நறுக்குகளின் பின்பகுதியில் மேலதிக தகவல்கள் காணப்படுகின்றன.
- அச்சிடப்பட்ட கொடுப்பனவு நறுக்குகள் கிடைக்காதவிடத்து, கொடுப்பனவினை வங்கியில் (முக்கியமாக மக்கள் வங்கியில்), செலுத்தும் போது DIN (இலக்கம்) இனை https://eservices.ird.gov.lk/Payment/PayingInSlip/Index இனூடாக பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

வரியை செலுத்தாது விடுதல் அல்லது தாமதமாக செலுத்துதல் மீதான தண்டம் தள்ளுபடி செய்யவோ அல்லது குறைக்கப்படவோ மாட்டாது என்பதை அறிந்துகொள்ளவும்.

இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களுக்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வலைத்தளத்தைப் பார்வையிடவும்

உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்

IRD 1944

வரிகள் - வளமான எதிர்காலத்திற்காக

வலைத்தளம் : www.ird.gov.lk https:www.facebook.com/irdcolsl

தினகரன்
THINAKARAN
35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் சித்திரை மாதம் 27ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஷவ்வால் பிறை 32

## குறள் தரும் சிந்தனை



அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு

அன்பு இல்லாதவர், எல்லாம் தமக்கே என உரிமை கொண்டாடுவர்; அன்பு உடையவரோ தம் உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தும் பிறருக்கென எண்ணிடுவர்.

# பசளை மானியத்தினால் உணவு உற்பத்தி உயரும்

இலங்கை நாலாபுறமும் கடலால் சூழப்பட்டுள்ள நாடான போதிலும், ஆரம்ப காலம் முதல் விவசாயப் பொருளாதார நாடாகும். உணவு உற்பத்திப் பயிர்ச்செய்கைக்கு அவசியமான மண்வளத்தையும் சீதோஷண நிலையையும் இந்நாடு இயற்கையாகவே பெற்றுக் கொண்டுள்ளது.

குறிப்பாக நெற்செய்கைக்குத் தேவையான மண்வளமும் சீதோஷண நிலையும் இந்நாட்டில் தாராளமாகக் காணப்படுகின்றன. அதனால் நெற்செய்கையை பலப்படுத்திடவும் பரவலாக்கிடவும் ஆரம்ப காலம் முதல் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நெற்செய்கையானது தண்ணீரை அடிப்படையாகக் கொண்ட ஒன்றாகும். அதனால் இச்செய்கையை மேம்படுத்திடவென மன்னர்களது ஆட்சிக் காலம் முதல் நாட்டின் பல பிரதேசங்களிலும் நீர்ப்பாசனக் கட்டமைப்புக்கள், நீர்தேக்கங்கள், குளங்கள் என்பன அமைக்கப்பட்டன. இன்று பயன்பாட்டில் உள்ள பெரும்பாலான நீர்ப்பாசனக் கட்டமைப்புக்கள் இற்றைக்கு பல தசாப்தங்களுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்டவையாகும்.

இவ்வாறான பின்னணியில் ஒரு காலத்தில் தெற்காசியாவின் நெற்களஞ்சியமாக விளங்கிய இலங்கை, பல நாடுகளுக்கும் அரிசியை ஏற்றுமதி செய்யக் கூடியதாகவும் இருந்துள்ளது. இந்நாட்டின் பிரதான உணவு என்ற இடத்தையும் அரிசி அன்றே பெற்றுக் கொண்டது.

ஐரோப்பிய ஏகாதிபத்தியத்திற்கு உள்ளாகி இருந்த காலப்பகுதியில் இந்நாட்டின் நெற்செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டது. ஆனபோதிலும் சுதந்திரத்திற்கு பின் வந்த ஆட்சியாளர்கள் நெற்செய்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக பல்வேறு ஊக்குவிப்பு வேலைத் திட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.

அந்த வகையில் 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் கடும் பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளான இந்நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக ஆக்கபூர்வமான பல பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அத்திட்டங்களில் இரசாயனப் பசளையை விவசாயிகள் பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்து கொடுத்தமையும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

குறிப்பாக விவசாயிகள் இரசாயனப் பசளையை எவ்வித இடையூறுகளும் இன்றி பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்த அரசாங்கம் பசளையை மானியமாகப் பெற்றுக்கொடுக்கும் திட்டத்தையும் முன்னெடுத்தது. அதனைத் தொடர்ந்து பசளை மானியத்திட்டத்தின் கீழ் பசளையை கொள்வனவு செய்வதற்கான பணத்தை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வைப்பிடும் திட்டத்தையும் அரசாங்கம் அறிமுகப்படுத்தியது.

இத்திட்டங்கள் அனைத்தும் நெற்செய்கையில் தன்னிறைவு அடைவதை இலக்காக கொண்டவையாக அமைந்துள்ளன.

இதேவேளை இவ்வருடம் சில நாடுகளுக்கு அரசியை ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்பையும் இலங்கைக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. இவ்வாறான சூழலில் இந்நாட்டின் நெற்செய்கை மேலும் விரிஸ்தரிப்பதிலும் ஊக்குவிப்பதிலும் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளன.

அந்த அடிப்படையில் முன்னெடுக்கப்படும் திட்டங்களில் நெற்செய்கையாளர்களுக்கான பசளை மானியத் திட்டம் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இத்திட்டத்தின் கீழ் நெற்செய்கைக்கு அவசியமான எம்.ஒ.பி (Muriate of Potassium) பசளையை கொள்வனவு செய்து கொள்ளவென ரூ. 15 ஆயிரம் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் கடந்த 07 ஆம் திகதி முதல் விவசாயத் திணைக்களத்தினால் வைப்பிடப்பட்டுள்ளது.

இதனை நெற்செய்கையாளர்கள் பெரிதும் வரவேற்றுள்ளனர். அத்தோடு நம்பிக்கையோடு நெற்செய்கையில் ஈடுபடுவதிலும் அவர்கள் ஆர்வம் கொண்டவர்களாக செயற்படுகின்றனர்.

நெற்செய்கை வலுப்படுத்துவதற்கு எம்.ஒ.பி பசளை மிகவும் அவசியமானது. என்றாலும் கடந்த சில போகங்களில் இப்பசளைப் பயன்பாட்டில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. குறிப்பாக கடந்த போகத்தில் 08 இலட்சம் ஹெக்டெயர் பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும் 11 ஆயிரம் மெற்றிக் தொன் எம்.ஒ.பி பசளைதான் பயன்படுத்தப்பட்டுள்ளதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன. ஆனால் அரசாங்கத்திற்கு சொந்தமான இரண்டு பசளை நிறுவனங்களிலும் நாட்டுக்குத் தேவையான அளவு எம்.ஒ.பி. பசளை கையிருப்பில் இருப்பதாக தெரிவித்துள்ள விவசாய அமைச்சு, இவ்வருடம் சுமார் 15 ஆயிரம் மெற்றிக் தொன் எம்.ஒ.பி பசளையே தேவைப்படும் என்றுள்ளது. ஆனால் தற்போது 35 ஆயிரம் மெற்றிக் தொன் எம்.ஒ.பி பசளையை கையிருப்பில் உள்ளது. அவற்றில் 27 ஆயிரம் மெற்றிக் தொன் பசளை அரசுக்கு சொந்தமான பசளை நிறுவனங்களிடம் உள்ளன.

ஆகவே நெற்செய்கையை மேலும் மேம்படுத்தவும் பரவலாக்கவும் ஊக்குவிக்கவும் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கப்பட வேண்டும். அது நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு அளிக்கப்படும் பாரிய பங்களிப்பாக அமையும். அத்தோடு நாட்டின் உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்தவும் பக்கத்துணையாக அமையும்.

editor.tkn@lakehouse.lk

# பேருவளை தந்த தலைசிறந்த அரசியல்வாதி பாக்கீர் மாக்கார்

## நாளை மறுதினம் அன்னாரின் 107 ஆவது பிறந்ததினம்



'தோன்றின் புகழுடன் தோன்றுக' என்பதற்கொப்ப வாழ்ந்துகாட்டியவர் முன்னாள் சபாநாயகர் எம். ஏ. பாக்கீர் மாக்கார் அவர்கள் ஆவார். பேருவளை, மருதானை கிராமத்தில் பாரம்பரிய முறையில் நோயாளிகளுக்கு வைத்திய சேவையாற்றும் ஹக்கீம் குடும்பத்தில் 1917 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் திகதி அப்துல் பாக்கீர் மாக்கார் பிறந்தார்.

ஆரம்பக் கல்வியை தாம் பிறந்த கிராமத்துப் பாடசாலையில் அவர் பெற்றுக் கொண்டார். பின்பு கொழும்பு ஸாஹிரா கல்லூரியில் உயர்தரக் கல்வி கற்றார். அதே ஸாஹிரா கல்லூரியில் ஆசிரியராக தனது சேவையைத் தொடங்கினார். அப்போது ஸாஹிரா கல்லூரியில் அதிபராகப் பணியாற்றியவர் டி. பி. ஜாயா அவர்கள். அவரது மாணவனாகவும், அவரின் நேரடி வழிகாட்டலில் சக ஆசிரியனாகவும் இருக்கும் பாக்கியம் பாக்கீர் மாக்கார் அவர்களுக்குக் கிடைக்கிறது.

முஸ்லிம் சமூகம் முன்னேற வேண்டும் என்றால் அரசியல், கல்வி, பொருளாதார ரீதியாக முஸ்லிம்கள் தலைநிமிர்ந்து நிற்க வேண்டும் என்ற சிந்தனை கொண்டவராக பாக்கீர் மாக்கார் விளங்கினார்.

தனது அறிவையும், செல்வாக்கையும், செல்வத்தையும், அவசியமானபோது அரசியல் அதிகாரத்தையும் கல்வி வளர்ச்சிக்குப் பயன்படுத்தினார்.

சமூகத்தின் கல்வி வளர்ச்சியில் அதிக அக்கறை காட்டிய இளைஞர் பாக்கீர் மாக்கார், ஊரில் இளைஞர்களை ஒன்று திரட்டி சங்கங்கள் உருவாக்கி மக்கள்நலப் பணிகளை செய்து வந்தார். அதில் கல்வி சார்ந்த பணிகள் முதலிடம் பெற்றன.

ஊரவரின் வாசிப்புத்தேவைக்கு திண்ணை நூலகங்களை ஏற்பாடு செய்தார். அதில் அக்கால மாணவ, மாணவியர் பயனடைந்தனர். சமயம் சார்ந்த பணிகளும் இடம்பெற தவறவில்லை.

இளைஞர் பாக்கீர் மாக்காரின் சமூக சேவை ஆர்வத்தை கண்ட மருதானை கிராம மக்கள், அடுத்த நகரசபைத் தேர்தலில் அவரை வேட்பாளராக நிறுத்தினர். அவர் மருதானை தொகுதியின் அங்கத்தவராக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார். 1950 ஆம் ஆண்டு பாக்கீர் மாக்கார் வாழ்க்கையில் மறக்க முடியாத ஆண்டாக அமைந்தது. அதுதான் பாக்கீர் மாக்கார் அவர்கள் பேருவளை நகரசபை தலைவரானதும், களுத்துறை நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்ததுமாகும்.

பாக்கீர் மாக்காரின் புதிய பதவியும், தகுதியும் ஊரின் கல்வி வளர்ச்சிக்கு பயன்பட ஆரம்பித்தன. மக்களின் வாசிப்பு பழக்கத்தை மேம்படுத்த, நகரின் நூலகம் அபிவிருத்தி செய்யப்பட்டது. நகரசபை எல்லைக்குள் மின்சார வசதிகள் விரிவாக்கப்பட்டன.

பாக்கீர் மாக்கார் அவர்கள் தனது அரசியல் வாழ்க்கையில் படிப்படியாக உயர்ந்து கொண்டே சென்றார். 1960 இல் முதல் முறையாக பாராளுமன்ற உறுப்பினர், 1977 இல் பிரதி சபாநாயகர், 1978 இல் சபாநாயகர், 1983 இல் அமைச்சரவை அமைச்சர், 1988 இல் ஆளுநர் என்றவாறு பதவிகளை வகித்தார்.

அவர் சபாநாயகராக பதவி வகித்த காலத்தில் தர்ஹா நகர் ஸாஹிரா கல்லூரி, அளுத்கம்வீதிய முஸ்லிம் பெண்கள் கல்லூரி, அல்ஹுமைஸரா மகாவித்தியாலயம், அல்பாஸியத்துல் நஸ்ரியா பெண்கள் பாடசாலை, ஐ.எல்.எம்.சம்சுதீன் பாடசாலை, அல் ஹஸனியா பாடசாலை ஆகியன பல வளங்களை பெற்றுக் கொண்டன.

சபாநாயகராக இருந்த போது மன்னார் பகுதியில் பாடசாலைக்கான கட்டடப் பணிக்காக தனது சொந்தப் பணத்தை வழங்கினார்.

1981 ஆம் ஆண்டு களுத்துறை கல்வித் திணைக்களம் தவணைப் பரீட்சைக்கு சிங்கள மொழி பாடசாலைகளுக்கு பொது வினாத்தாள் தயாரித்து வழங்கியது. ஆனால், நிதி பற்றாக்குறை, வளவாளர் பற்றாக்குறை காரணமாக தமிழ் மொழிமூல பாடசாலைகளுக்கு தவணை வினாப்பத்திரங்கள் வழங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது.

உடனடியாக தலையிட்ட பாக்கீர் மாக்கார், தனது சொந்த செலவில் வளவாளர்களைக் கொண்டு வினாப் பத்திரங்கள் தயாரித்து வலய தமிழ் மொழி பாடசாலைகளுக்கு வழங்கி வைத்தார்.

அவருடைய தீர்க்கதரிசனமான பார்வை, சிறந்த அணுகுமுறைகள், பிரச்சினை தீர்க்கும் வழிமுறைகள் பேருவளை தொகுதியின் கல்வி வளர்ச்சியில் பாரிய பங்களிப்புகளைச் செய்தன. எதிர்கால பரம்பரையினர் கல்வியில், சமய விழுமியங்களில், பொருளாதார வளர்ச்சியில் மிகச் சிறந்தவர்களாக மிளிர வேண்டும் என்று இறுதிவரை போராடிய பாக்கீர் மாக்கார் அவர்கள் 1993.05.12 ஆம் திகதி காலமானார். அவர் மறைந்தாலும் அவரின் சேவைகள், கல்வி வளர்ச்சியில் அவரின் பங்களிப்புகள் எக்காலத்திலும் மறந்துவிடக் கூடியதல்ல.

பேருவளை
பியெம் ஜாபிர்

# Toastmasters International நிறுவனத்தின் நூற்றாண்டு விழா இன்று ஆரம்பம்


பால்ராஜ் அருணாசலம்


Morag Mathieson


ஏ.கே.டபிள்யூ. ஜயவர்தன


ரமேஷ் ஷப்டர்

சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட தன்னார்வ தொண்டு நிறுவனமாக விளங்கும் Toastmasters International நிறுவனம் இந்த வருடத்தில் அதன் ஞாபகார்த்த நூற்றாண்டு விழாவை பெருமையுடன் கொண்டாடுகின்றது. வெலிசர Wave N' Lake மாநாட்டு மண்டபத்தில் இன்று 10 ஆம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதிவரை மூன்று தினங்கள் இதன் நூற்றாண்டுவிழா வெகு விமரிசையாக நடைபெறுகிறது.

தகவல் தொடர்பு மற்றும் தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக் கொள்வதற்கான சேவை வழங்கி வரும் நோக்கில் Toastmasters International நிறுவனம் விளங்குகின்றது.

இம்மாநாட்டில் பிரதம விருந்தினராக ஐக்கிய அமெரிக்காவின் Toastmasters International தலைவர் Morag Mathieson கலந்துகொண்டு விசேட உரை நிகழ்த்துகிறார். இதனைத் தொடர்ந்து சொற்பொழிவாளர்களின் விசேட உரைகளும் இம்மாநாட்டில் இடம்பெறுகின்றன.

பேராசிரியர் ஏ.கே.டபிள்யூ. ஜயவர்தன, மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் ரமேஷ் ஷப்டர், முகாமைத்துவப் பணிப்பாளர் பால்ராஜ் அருணாசலம் ஆகியோரின் உரைகளும் மாநாட்டில் இடம்பெறவுள்ளன.

இலங்கை, மாலைதீவுகள், பிரித்தானியா, இந்திய பெருங்கடல் பிராந்தியத்தைச் சேர்ந்த நாவன்மையாளர்கள் (Toastmasters), இந்த பெருமைமிக்க நூற்றாண்டுவிழா கொண்டாட்டத்தில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் அழைப்பு விடுத்துள்ளனர்.

# இந்திய மக்களவைத் தேர்தலில் தலையிட அமெரிக்கா முயற்சி!



## ரஷ்யா முன்வைத்துள்ள பகிரங்கக் குற்றச்சாட்டு!



இந்திய மக்களவைத் தேர்தலில் அமெரிக்கா தலையிட முயற்சி செய்வதாக ரஷ்யா பகிரங்க குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது.

உள்நாட்டு அளவில் நிலவும் இந்திய அரசியல் சமநிலையை சீர்குலைக்க அமெரிக்கா முயற்சிப்பதாகவும் ரஷ்யா தெரிவித்துள்ளது.

ரஷ்ய நாட்டின் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் மரியா ஜாகரோவா பத்திரிகையாளர் சந்திப்பில் பங்கேற்றார். அப்போது அவர் பேசுகையில் "காலிஸ்தான் பிரிவினைவாதி குர்பத்வந்த் சிங் பன்னுன் கொலைச் சதியில் இந்தியர்களுக்கு தொடர்பு இருப்பதாக ஆதாரமற்ற குற்றச்சாட்டை அமெரிக்கா சுமத்துகிறது.

இந்திய தேசம் குறித்த புரிதல் மற்றும் அதன் வரலாறு குறித்து அறியாமல் அமெரிக்கா பேசி வருகிறது. இப்படி இந்தியாவின் மத சுதந்திரம் சார்ந்து ஆதாரமற்ற வகையில் அமெரிக்கா தொடர்ந்து பேசி வருகிறது" என்று தெரிவித்தார்.

"இந்தியாவில் நிலவும் அரசியல் சமநிலையை சீர்குலைக்க வேண்டும் என்பதுதான் இதற்குக் காரணம். இந்திய பொதுத்தேர்தலை சிக்கலாக்கும் நோக்கில் அமெரிக்கா இப்படி செய்கிறது" என்று ரஷ்ய நாட்டின் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் மரியா ஜாகரோவா தெரிவித்தார்.

சர்வதேச மதச் சுதந்திரத்துக்கான அமெரிக்க ஆணையம் (USCIRF) இந்தியாவின் மதச் சுதந்திரம் உட்பட பல்வேறு பிரச்சினைகள் சார்ந்து அண்மையில் குற்றச்சாட்டு முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மதநம்பிக்கை சார்ந்த உரிமை மீறல்களில் இந்தியா உட்பட 16 நாடுகள் ஈடுபடுவதாக அந்த ஆணையம் குற்றச்சாட்டு முன்வைத்தது.

இதற்கு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் வலுவான கண்டனத்தை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பா.ஜ.கவுக்கு சாதகமாக நிலைமை கிடையாது!



## உளவுத்துறை அறிக்கை!

உளவுத்துறை அறிக்கையின்படி பா.ஜ.கவிற்கு சாதகம் இல்லை. தனி பெரும்பான்மை கிடைக்க வாய்ப்பு இல்லை என்று அறிக்கை சென்றதாக கூறப்படுகிறது என தமிழ்நாடு மூத்த பத்திரிகையாளர் துரை கருணா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மூத்த பத்திரிகையாளர் துரை கருணா பேட்டி அளித்துள்ளார்.

பா.ஜ.கவினர் தேர்தலுக்கு முந்திய காலகட்டங்களில் உறுதியாக பேசினர். மிகுந்த நம்பிக்கையோடு பேசினார்கள். 3 ஆம் முறை வெல்வோம், 400 இடங்களில் வெல்வோம் என்றெல்லாம் பேசினார்கள்.

zஅதற்கு ஆதரவாக இருப்பது போல 12 கருத்து கணிப்பு நிறுவனங்கள் அறிக்கை வெளியிட்டன. தனிப்பெரும்பான்மை கிடைக்கும். 300+ இடங்கள் கிடைக்கும் என்று ரிப்போர்ட் வெளியிட்டன.

ஆனால் உண்மை அப்படி இல்லை போல உள்ளது. உளவுத்துறை அறிக்கையின்படி பா.ஜ.கவிற்கு சாதகம் இல்லை. தனி பெரும்பான்மை கிடைக்க வாய்ப்பு இல்லை என்று அறிக்கை சென்றதாக கூறப்படுகிறது.

வடக்கில் தி.மு.கவிற்கு எதிரான மனநிலை உள்ளது. சனாதன கருத்து காரணமாக வடக்கில் தி.மு.கவிற்கு எதிரான மனநிலை நிலவுகிறது. இதன் காரணமாகவே இஸ்லாம்_ இந்து பற்றி மோடி பேசுகிறார் என்று மூத்த பத்திரிகையாளர் துரை கருணா தெரிவித்துள்ளார்.

# ரயில்களில் மோதி 103 காட்டு யானைகள் பலி

## விபத்துக்களை தடுக்க விசேட வேலைத்திட்டம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

ரயில்களில் மோதியதில் 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரை 103 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதாகக் குறிப்பிட்ட அமைச்சர் பவித்ராவன்னியாராய்ச்சி, காட்டு யானைகளை பாதுகாப்பதற்கு ரயில்வே திணைக்களத்துடன் இணைந்து விசேட வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் சமன்பிரிய ஹேரத் எம்பியின் கேள்விக்குப் பதிலளிக்கும் போதே வனஜீவராசிகள் மற்றும் வனவள பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சிஇவ்வாறு தெரிவித்தார்.



இது தொடர்பில் சபையில் மேலும் தெரிவித்த அமைச்சர்:

2015 ஆம் ஆண்டு முதல் இதுவரையில், 103 காட்டு யானைகள் ரயில்களில் மோதி உயிரிழந்துள்ளன.

இவைகள், உயிரிழப்பதை தடுப்பதற்கு முறையான பொறிமுறைகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

அதற்கமைய ரயில்வே திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சு ஆகியன இணைந்து, ரயில் பாதைகளில் காட்டு யானைகள் பயணிக்கும் பகுதிகளை அடையாளப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த பகுதிகளை விசேட பாதுகாப்பு பகுதிகளாகவும், கண்காணிப்பு பகுதிகளாகவும் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

காட்டு யானைகள் கடக்கும் பகுதிகள் குறித்து ரயில் சாரதிகளுக்கு தெளிவுப்படுத்தவும், புகையிரத பாதைகளில் வளைவு பகுதிகளில் காட்டு யானைகள் கடக்கும் போது அவைகளை முன்கூட்டியதாக அவதானிக்கும் வகையில் விசேட இயந்திரங்கள் பொருத்துவதற்கும், ரயில் பாதை வளைவுகளை தொடர்ந்து பராமரிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

# நாட்டை சரியான வழியில் திசை திருப்பிய ஜனாதிபதிக்கு நன்றிகள்

## சுதந்திர தொழிற்சங்கங்களின் புதிய கூட்டணி மகஜர்

போரா ட்டத்தால் இட்டுச் செல்லப்பட்ட நாட்டின் அரசியல் பயணத்தை சரியான வழியில் திசை திருப்பி சிறந்த நாடொன்றை மக்களுக்கு வழங்கியமைக்காக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நல்வாழ்த்து அறிக்கையொன்று சுதந்திர தொழிற்சங்கங்களின் புதிய கூட்டணி கேந்திர நிலையத்தினால் நேற்று கையளிக்கப்பட்டது.

அத்தோடு கொழும்பு நகரின் ஐந்து இடங்களில் தொழிற்சங்க கேந்திர நிலையத்தின் பிரதிநிதிகள் ஒன்று கூடி, பாதுகாப்பு படையினருக்கு பூச்செண்டுகளை வழங்கி நன்றியும் தெரிவித்தனர். அதன் பின்னர், தொழிற்சங்கங்கள் மற்றும் அதனுடன் இணைந்த அமைப்புகளின் பிரதிநிதிகள் பத்துப் பேர் ஜனாதிபதி செயலகத்துக்குச் சென்று ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை கையளித்தனர். அதன்பின்னர் ஒன்றிணைந்த தொழிற்சங்க கேந்திர நிலையத்தில் பிரதிநிதிகள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தனர்..



# தமிழகத்தில் 58,200 இலங்கை அகதிகள்

## ஒருவருக்கே வாக்களிக்கும் உரிமை

இந்திய அரசாங்கத்திடம் 2023 இல், சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் பிரகாரம் தமிழ் நாடு முழுவதிலுமுள்ள 104 முகாம்களில் 58,200 இலங்கை தமிழ் அகதிகளும் முகாம்களுக்கு வெளியே 33,200 க்கும் மேற்பட்டோரும் வாழ்வதாக தெரிய வந்துள்ளது.

இவர்களின் சிவில் ஆவணங்களைப் பொறுத்தவரையில் 95 வீதமானோர் இந்திய அடையாள அட்டைகளையும், 78 வீதமானோர் வங்கிக் கணக்குகளையும் ஒரு வீதமானோர் இலங்கைக் கடவுச்சீட்டுகளையும் 03 வீதமானோர் இலங்கை தேசிய அடையாள அட்டைகளையும் வைத்துள்ளனர்.

இந்நிலையில் ஒரே ஒரு இலங்கைத் தமிழரான நளினி கிருபாகரனுக்கு மட்டுமே, இந்தியாவின் மக்களவைத் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை முகாம்களிலுள்ள தமிழர்களில் பெரும்பாலானோர் 30 ஆண்டுகளுக்கும் மேல் இந்தியாவில் வசித்து வருகின்றனர்.

இருப்பினும், சுகாதார சேவைகள் அல்லது குடியுரிமைகள் கிடைக்காமல் மோசமான அகதி முகாம்களில் தொடர்ந்து சிரமங்களை இவர்கள் எதிர்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## டயானாவின் பதவிக்கான வெற்றிடம்

# பாராளுமன்ற செயலாளர் நாயகம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் டயானா கமகேயின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி 2024 மே மாதம் 08 ஆம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் இரத்துச் செய்யப்பட்டுள்ளதால், பாராளுமன்றத்தில் உறுப்பினர் ஒருவருக்கான வெற்றிடம் நிலவுவதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளார்.

1981ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 64(1) ஆம் பிரிவின் பிரகாரம், இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.



இராஜாங்க அமைச்சர் டயானா கமகே பாராளுமன்றத்தில் உறுப்பினராக பதவி வகிப்பதற்கு தகுதியற்றவர் என உயர் நீதிமன்றம் கடந்த புதன்கிழமை தீர்ப்பளித்துள்ளது.

சமூக செயற்பாட்டாளரான ஓஷல ஹேரத் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனு மீதான விசாரணை கடந்த புதன்கிழமை நீதிமன்றத்தில் நடைபெற்றது.

இதனையடுத்து டயானா கமகே இலங்கை பாராளுமன்றத்தில் உறுப்பினர் பதவி வகிக்க தகுதியற்றவர் என்ற தீர்ப்பை உயர் நீதிமன்றம் வழங்கியது.

இராஜாங்க அமைச்சராக பதவி வகித்த டயானா கமகே, பிரிட்டன் பிரஜை என்றும் அவர் இலங்கை பாராளுமன்றத்தில் உறுப்பினர் பதவியை வகிப்பதற்கு சட்டபூர்வமான தகுதியற்றவர் என்றும் உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென தெரிவித்தே அவருக்கு எதிரான மேற்படி மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

## கொட்டாஞ்சேனை

# சாயிநாதன் சரணாலயத்தில் சீதையம்மனின் கலசங்கள்

## பக்தர்களுக்கு அழைப்பு

நுவரெலியா, சீதாஎலிய சீதையம்மன் கோயிலில் மகா கும்பாபிஷேக பெருவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (19) வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

இந்த மகா கும்பாபிஷேக பெருவிழாவுக்காக அயோத்தி இராமர் கோயிலிலிருந்து சீதையம்மனுக்கு சீர்வரிசையாக அனுப்பி வைக்கப்பட்ட தெய்வீக கோபுர கலசங்கள், கொழும்பு கொட்டாஞ்சேனையில் அமைந்துள்ள ஸ்ரீவரதராஜ விநாயகர் கோயில் வளாகத்திலுள்ள ஸ்ரீசீரடி சாயிநாதனின் சரணாலயத்துக்கு நேற்று வியாழக்கிழமை மாலை 6.00 மணிக்கு கொண்டு வரப்பட்டன.

இந்நிலையில் ஸ்ரீசாயிநாதனின் சரணாலயத்தில் எதிர்வரும் சனிக்கிழமை காலை 6.00 மணிவரை கலசங்களை பக்தர்கள் வணங்கி ஆசி பெற்றுக் கொள்ளலாம்.

கிடைத்தற்கரிதான இப்பொன்னானபாக்கியத்தைநமக்கு அருளிய சீரடி பாபாவுக்கு நன்றி கூறி அருள் பெறுமாறு, இதன் அறங்காவலர் குழுவினர் தெரிவித்தனர்.

# மதுபான உற்பத்தி 2023 இல் 19 வீதமாக குறைவடைவு

## 180 ML போத்தல்களின் உற்பத்தி 15 மில்லியனாக குறைவு

நாட்டின் மது உற்பத்தி 2023ஆம் ஆண்டில் 19 வீதமாக குறைந்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்விக்கு பதிலளிக்கையிலே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அதிகமாக விற்பனையாகும் 180 மில்லி லீற்றர் கொண்ட மதுபான போத்தல்களின் உற்பத்தி சுமார் 15 மில்லியனால் குறைந்துள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார். அமைச்சர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்

2022 ஆம் ஆண்டில் 750 மில்லி லீற்றர் மதுபான போத்தல்கள் 57.7 மில்லியன் உற்பத்தி செய்யப்பட்டது. 2023 இல் அது 39.5 மில்லியனாக குறைந்துள்ளது. 2022 இல் தயாரிக்கப்பட்ட 180 மில்லி லீற்றர் பாட்டில்களின் அளவு 105.8 மில்லியனாக இருந்தது. ஆனால் 2023 இல் அது 90.5 மில்லியனாகக் குறைந்துள்ளது. இதேவேளை, 2023ஆம் ஆண்டில் மாத்திரம் 214 புதிய மதுபான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் 147 F.L 7, 8 மற்றும் F.L 11 வகைகள் சுற்றுலாத்துறைக்காக வழங்கப்பட்டன. கலால் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட மொத்த மதுபான அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை 5,730. சட்டரீதியான மதுபான கூடங்கள் ஸ்தாபிக்கப்படுவதால் மதுப்பாவனை அதிகரித்து வருவதாக கருத்து வெளியிடப்படுகிறது. இருந்த போதிலும், சட்ட ரீதியாக மதுவிலக்கு இல்லாத பிரதேசங்களில் சட்டவிரோத மதுபானம் அதிகமாகக் காணப்படுகிறது. எனவே, அவற்றைத் தடுத்து, இழந்த வரி வருமானத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் . எந்த சந்தர்ப்பத்திலும் அரசாங்கம் மது பாவனையை ஊக்குவிக்காது. மதுபான அனுமதிப்பத்திர கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. மதுபான போத்தல் ஒன்றின் விலையில் 75 வீதமாக வரி அறவிடப்படுவதாகவும், மதுபானத்துக்கு அதிக வரி விதிக்கப்படுவதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்

# விசா வழங்குவதில் பாரிய மோசடி உரிய விசாரணை முன்னெடுப்பது அவசியம்

லோரன்ஸ் செல்வநாயகம்



சுற்றுலாப் பயணிகளுக்கு விசா சேவை வழங்கும் தனியார் நிறுவனத்துக்கு கிடைக்கும் நிதி மத்திய வங்கி மோசடியை விட பல மடங்கு அதிகமானது என்றும் அது தொடர்பில் உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் எம். பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல்(விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், ஊழல் மோசடிகள் ஒழிப்பு தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் எமது நாட்டுக்கு புதிய முறைமை ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ள நிலையில், நாட்டுக்குள் வரும் வெளிநாட்டவர்களுக்கான விசா வழங்குவதில் பாரிய மோசடி இடம்பெற்று வருகின்றமை கடந்த சில தினங்களாக ஊடகங்களில் தலைப்புச் செய்திகளாக வெளியிடப்பட்டு வருகிறது.

அரசாங்கம் அது தொடர்பில் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சுற்றுலாப் பயணிகளிடமிருந்து மேலதிகமாக 25 டொலர்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்தில் 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தரவுள்ளதாக எதிர்வு கூறப்பட்டுள்ளது.

அவ்வாறு சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தரும் போது, அவர்களுக்கு விசா வழங்கும் குறித்த தனியார் நிறுவனத்துக்கு அதன் மூலம் மாத்திரம் 62.5மில்லியன் அமெரிக்கன் டொலர்கள் கிடைக்கப்பெறுகிறது. இலங்கை ரூபாவின் படி 18 பில்லியனாகும்.

ஆனால் இந்த வருட வரவு செலவுத் திட்டத்தில் குடிவரவு, குடியகல்வு திணைக்களத்துக்கு சம்பளம் உள்ளிட்ட ஏனைய கொடுப்பனவுகளுக்கு 992 மில்லியன் ரூபாவே ஒதுக்கப்பட்டுள்ளது. அதனுடன் ஒப்பிடுகையில், குறித்த தனியார் நிறுவனத்துக்கு இந்த விசா வழங்கும் சேவை மூலம் 18.6 மடங்கு அதிகமான நிதி கிடைக்கின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# செயன்முறைக் கருத்தரிப்பு என்பது குழந்தைக்காக ஏங்குபவர்களுக்கான வரப்பிரசாதம்

— டொக்டர் கீதா ஹரிப்ரியா

"குழந்தையின்மை என்பது ஒரு குறைபாடு மட்டுமே என்பது எனது நம்பிக்கை. குறைபாட்டுக்கான காரணத்தை மிகச் சரியாகத் தெரிந்து கொண்டு, அதற்குப் பொருத்தமான சிகிச்சையை மிகச் சரியாக செய்து கொண்டாலே போதும், உங்கள் கனவு நிறைவேற! ஆனால், அதற்கு, அனுபவமும் அதி நவீன சிகிச்சையும் சிகிச்சைக்குப் பின்னான கவனிப்பும் மிக முக்கியம். அந்த வகையில்தான் எனது தலைமையிலான பிரசாந்த் செயன்முறைக் கருத்தரிப்பு மையம் முதனிலை வகிக்கிறது என்பது என் நம்பிக்கை.

வெள்ளவத்தை ரோயல் மருத்துவமனையின் ஏற்பாட்டில், இம்மாதம் 18ஆம் திகதி மட்டக்களப்பு, கோல்டன் ரிவர் மண்டபத்திலும் மறுதினம் 19ஆம் திகதி கண்டி, சிங்கள வர்த்தக முன்னணி மண்டபத்திலும் (சம்பத் மண்டபம்) குழந்தையின்மைக்கான இலவச ஆலோசனை முகாம்கள் நடைபெறவுள்ளன.

இதில், பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு, குழந்தைக்காக எதிர்பார்த்திருக்கும் தம்பதியருக்கு தனது அனுபவம் வாய்ந்த ஆலோசனைகளை வழங்கவிருக்கும், தமிழகத்தின் முன்னணி மருத்துவமனையான, பிரசாந்த் செயன்முறைக் கருத்தரிப்பு ஆராய்ச்சி மையத்தின் தலைமை மருத்துவரும், உலகப் புகழ்பெற்ற ஐ.வி.எஃப். நிபுணருமான கீதா ஹரிப்ரியா 'தினகரன்' பத்திரிகைக்காக கூறிய தகவலே இது.



" இன்றைய அவசர உலகில், திருமணம் செய்து கொள்ளும் பத்து தம்பதியரில் ஏழு முதல் எட்டு தம்பதியர் வரை கருத்தரிப்பில் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கிறார்கள் என்பது வெளிப்படையான உண்மை.

இதை, உங்கள் அக்கம் பக்கத்திலோ, உறவினர் குடும்பங்களிலோ அல்லது உங்கள் குடும்பத்திலேயோ கூடக் காண முடியும்.

"ஏன் இதை இங்கே குறிப்பிடுகிறேன் என்றால், நீங்களும் குழந்தையின்மையால் பாதிக்கப்பட்டிருந்தால், 'எனக்கு மட்டும் ஏன் இப்படி?' என்று நீங்கள் மனம் குளப்பமடையக் கூடாது என்பதற்காகத் தான்.

நீங்கள் சந்திக்கக்கூடிய பத்து தம்பதியரில், உங்களைப் போலவே ஏங்கும் மேலும் ஏழு தம்பதியர்கள் இருக்கிறார்கள் என்பதையும் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

"ஏன் இப்படி என்று கேட்பீர்களானால், அதற்கு இன்றைய வாழ்க்கை முறையே காரணம் என்று ஒரு வார்த்தையில் சொல்லிவிட முடியும்.

"இன்றைய தொழில், உணவு, உடை, பழக்க வழக்கம், நித்திரை, ஓய்வு, மன அமைதி என்று எதை எடுத்துக்கொண்டாலும் ஒரு பரபரப்பும் பதற்றமும் நிறைந்த சூழலே காணப்படுகிறது.

நாகரீகம் என்ற பெயரில் நாம் வாழும் வாழ்க்கை முறையே குழந்தையின்மைக்கான முதற்காரணியாகி விட்டது.

"என்றாலும், கால மாற்றத்துக்கேற்ப, இந்தப் பிரச்சினைக்கான தீர்வையும் காலம் உங்களுக்கு வழங்கியிருக்கிறது. அதுதான் செயன்முறைக் கருத்தரிப்பு தொழில்நுட்பமாகும்.

"செயன்முறைக் கருத்தரிப்பு சிகிச்சை என்பது குழந்தையின்மையால் வாடுவோருக்கு வரப்பிரசாதமாகக் கிடைக்கப்பெற்றிருக்கும் ஒரு வாய்ப்பு. என்றாலும் இந்த வாய்ப்பை யார் பயன்படுத்த முன் வருகிறார்களோ, அவர்கள் தத்தமது கனவுகளை விரைவிலேயே நிறைவேற்றிக் கொள்கிறார்கள். தயங்கிப் பின்தங்குபவர்களுக்கு குழந்தை என்பது நிரந்தரக் கனவாகவே ஆகி விடுகிறது.

"செயன்முறைக் கருத்தரிப்பு முறையிலான வெற்றி வாய்ப்பு உயர் தரமான சிகிச்சைகளில் மட்டுமன்றி, நோயறியும் தொழில்நுட்பம், அனுபவமும் நிபுணத்துவமும் வாய்ந்த மருத்துவர்களின் பங்கேற்பு என்பவற்றிலும் தங்கியிருக்கிறது.

"மகப்பேறின்மை பரிசோதனைகள், சிகிச்சைகள் ஆகியவற்றில் அதி நவீன கருவிகளை தமிழகத்தில் சில சமயங்களில் இந்தியாவிலும் கூட முதன்முறையாக அறிமுகப்படுத்தி வருவதை எமது மருத்துவமனை வழக்கமாகக் கொண்டிருக்கிறது.

இதனால்தான் எமது மருத்துவமனையில் 85 சதவீத வெற்றி வாய்ப்பை அளிக்க முடிகிறது.

"மகப்பேறின்மைக்கு பெண்கள் மட்டுமே காரணம் என்ற எண்ணம் இப்போது மாறிவிட்டது.

மகப்பேறின்மைக்கு 60 சதவீதம் ஆண்களே காரணம் என்று உறுதிப் படுத்தப்பட்டிருக்கிறது. எனினும் இதை நினைத்து அவர்கள் வருந்தத் தேவையில்லை.

"ஏறக்குறைய, குழந்தையின்மைக்கான அனைத்துக் குறைபாடுகளுக்கும் அதி நவீன மருத்துவத் தொழில்நுட்பம் கைகொடுக்கத் தொடங்கிவிட்டது என்றே சொல்ல வேண்டும்.

"நீங்களும் என்னைச் சந்தித்து உங்கள் கனவை நிறைவேற்றிக் கொள்ள விரும்பினால், 0760155882 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு, முகாம் பற்றிய விபரங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். மனம் வைத்தால் எதுவும் சாத்தியமே! முயற்சித்தால் உங்களுக்கும் குழந்தை நிச்சயம் உண்டு.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன் 2024.05.08
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5469
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 22,768,500.00
ஆங்கில எழுத்து K வெற்றி இலக்கங்கள் 2 6 3 8 8 2

அத சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 044
ஆங்கில எழுத்து K வெற்றி இலக்கங்கள் 3 8 8 2

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3711 சீட்டிழுப்பு திகதி 2024.05.08
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 76,452,535.36
ஆங்கில எழுத்து T வெற்றி இலக்கங்கள் 23 30 63 70 விசேட எழுத்து T
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 00602

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1817 2024.05.08
47582
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 431,743,386.00
ஆங்கில எழுத்து U சுப்பர் இலக்கம் 24 வெற்றி இலக்கங்கள் 37 52 60 63
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

லக்கி 7 VIP
திகதி 2024.05.08
சீட்டிழுப்பு இலக்கம் 0295
ஆங்கில எழுத்து H வெற்றி இலக்கங்கள் 3 7 4 1 5 4
L7 எழுத்து H
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 29,524,237.68

ராசி சுப பலன்
திகதி 2024.05.08 சீட்டிழுப்பு இலக்கம் 778 செவ்வாய்
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,313,936.24
வெற்றி இலக்கினம் கும்பம் வெற்றி இலக்கங்கள் 05 43 57 61
தனயோக இலக்கம் 00353
நாளுக்கான விதி எண் 08

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1499 2024.05.08
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 90,958,536.24
ஆங்கில எழுத்து O வெற்றி இலக்கங்கள் 17 30 46 73 விசேட எழுத்து O
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 64341

# தர்காநகர் என். ரெட் எப்பல் அணி சம்பியன்




ரமழான் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டி தர்காநகர் ஸா / ஹிராக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது. 16 அணிகள் பங்குபற்றிய இப்போட்டியில் தர்காநகர் ஸொபலன்கந்த N Red Apple அணி வெற்றி பெற்றது. இரண்டாம் இடத்தை அதிகாரகொட Red Star அணி பெற்றுக்கொண்டது.



நுவரெலியா சீதையம்மன் ஆலய கும்பாபிஷேகத்தை முன்னிட்டு தமிழ்நாடு இந்து கலாசாரத்துறை அமைச்சர் சேகர் பாபுவிடம் இலங்கை இந்திய தொடர்பாளர் மணவை அசோகன் அழைப்பிதழ் வழங்கிய போது...

## எம்.பி பதவியை நான் இழந்தாலும்...

தகுதியற்றவர் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. இந்த நிலையில் நேற்று (09) கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட டயனா கமகே, "நான் நீதித்துறையை மதிக்கிறேன். இதற்குப் பின்னால் அரசியல் சதி உள்ளது. நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பில் மாற்றமில்லையென்றால் ஐக்கிய மக்கள் சக்தி என்ற கட்சியே செல்லுப்படியற்றதாக மாறும். ஏனென்றால் அந்த கட்சி என் கையெழுத்துடன் ஆரம்பமானது. அதற்குள் பல சிக்கல்கள் காணப்படுகின்றன. அவற்றைப் பற்றி நான் எதிர்காலத்தில் கூறுவேன்.

பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்தமை வெறுப்பு அரசியலுக்கு கிடைத்த வெற்றி என்றும், இந்த தாக்கம் ஒரு பெண்ணாக தன் மீது மட்டுமல்ல, இந்த நாட்டின் ஒட்டுமொத்த பெண்கள் மீதான தாக்கமாவே கருதுகிறேன் என்றும் அவர் கூறினார். நேற்று (09) இடம்பெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட போதே டயனா கமகே இந்த விடயங்களை குறிப்பிட்டார். இந்நாட்டு பெண்களுக்கு நான் ஒன்றை கூற விரும்புகிறேன். பெண்களுக்கு மரியாதை செலுத்த தெரியாத முட்டாள்தனமான எதிர்கட்சித் தலைவர் வேண்டுமா? என்பது தொடர்பில் யோசிக்க வேண்டும்.

நான் எப்போதும் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்குவேன். இக்கட்டானதொரு சூழ்நிலையில் இந்நாட்டை காப்பாற்றியவர் ரணில் விக்கிரமசிங்கவே. எனது அரசியல் இத்துடன் நிற்க போவதில்லை.

விரைவில் இந்த பாராளுமன்றம் கலைக்கப்படும். எதிர்காலத்தில் நான் கண்டிப்பாக அரசியலுக்கு வருவேன்" என தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதித் தேர்தல் கட்டுப்பணம்...

தொடர்பான யோசனைகள் கோரப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். கட்டுப்பணத் தொகையை அதிகரிக்க வேண்டுமென தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களும் வலியுறுத்தியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். பாராளுமன்றம், சட்ட மாஅதிபர் திணைக்களம், ஏனைய பொது நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையினரின் யோசனைகளின் அடிப்படையில் இதற்கான பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணைக்குழு தனித்து இந்த தீர்மானத்தை எடுக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை, அரசியல் கட்சியொன்றின் வேட்பாளரது கட்டுப்பணத் தொகையை 2.4 மில்லியன் ரூபாவாகவும், சுயாதீன கட்சி வேட்பாளரின் கட்டுப்பணத் தொகையை 3.1 மில்லியன் ரூபாவாகவும் அதிகரிக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக, முன்னிலை சோசலிச கட்சியின் பிரசார செயலாளர் துமிந்த நாகமுவ தெரிவித்துள்ளார். ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சியொன்றின் வேட்பாளர் தற்பொழுது 50,000 ரூபாவையும் சுயாதீன குழுவொன்றின் வேட்பாளர் 75,000 ரூபாவையும் கட்டுப்பணமாக செலுத்த வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட ஒரு வகுப்பைச் சேர்ந்த சமூகத்தினர் அரசியலில் ஈடுபடுவதை வரையறுக்கும் நோக்கில் இவ்வாறு கட்டுப்பணத் தொகை அதிகரிக்கப்படுவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

## ஜனாதிபதி தேர்தல் வாக்களிப்பு...

வாக்களிக்க தகுதி பெற்றிருப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இத்தொகையில் 18 வயதை பூர்த்திசெய்த 10 இலட்சம் புதிய வாக்காளர்கள் உள்ளடங்குவதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கான அடிப்படை ஏற்பாடுகள் நிறைவடைந்துள்ளதாகவும் ஜனாதிபதி தேர்தலுக்கு ஆயிரம் கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வருடத்துக்கான வாக்காளர் பதிவேடுகள் தயாரிப்பது தொடர்பான நடவடிக்கைகளை, நேற்று தொடக்கம் ஆரம்பித்துள்ளதாக தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

வாக்காளர் பதிவேடு தயாரிக்கும் நடவடிக்கைகள் இன்றுடன் நிறைவடைவதாகவும் தேர்தல் செயலகம் குறிப்பிட்டுள்ளது. இதன்படி, வாக்களிக்க தகுதி இருந்தும் வாக்காளர் பதிவேட்டில் பெயர் சேர்க்கப்படாத நபர்கள், தங்களின் பெயர்களை உரிய பட்டியலில் சேர்க்க முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## தோட்ட தொழிலாளர் சம்பள அதிகரிப்பு...

எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இறுதி நிலைப்பாட்டை அறிவிப்பதற்காக எதிர்வரும் 15 வரை முதலாளிமார் சம்மேளனத்துக்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அன்றைய தினத்தில் (15) உறுதியான தீர்மானமொன்றை அரசாங்கம் மேற்கொள்ளும்.

தொழிலாளர்களின் பொருளாதார நிலைமையை கருத்திற் கொண்டு அரசாங்கம் தீர்மானம் எடுக்கும்.இத்தீர்மானம்,

வர்த்தமானியில் வெளியிடப்படும்.

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் முதலாளிமார் சம்மேளனம் மற்றும் சம்பந்தப்பட்ட தொழிற்சங்கங்களுக்கிடையிலான பேச்சுக்களில் இணக்கப்பாடுகள் எதுவும் இதுவரை எட்டப்படவில்லை.

கம்பெனி உரிமையாளர்கள் ஜனாதிபதி செயலகத்திற்கு அழைக்கப்பட்டு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.இதன்போது,

தொழிற்சங்கங்களால் முன்வைக்கப்பட்டுள்ள 2,000 ரூபா 2,300 ரூபா சம்பள அதிகரிப்பு தொடர்பில் தெரிவிக்கப்பட்டது. அவர்களது கருத்துக்களையும் கேட்டறிந்த ஜனாதிபதி வேண்டுகோள் ஒன்றையும் முன் வைத்தார். இந்த யோசனையில் அவர் தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,700 ரூபா சம்பளத்தை வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

அந்த வேண்டுகோளை அடிப்படையாக வைத்து மீண்டும் மூன்று சுற்று பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இது தொடர்பில் கம்பெனி உரிமையாளர்கள் தமது நிலைப்பாட்டை தெரிவிக்கையில் 1,200 ரூபா சம்பளத்தை வழங்க முடியும். கிடைக்கும் வருமானத்தை வைத்தே இதையும் தீர்மானிக்க முடியும் என்றும் தெரிவித்தனர். எனினும், இதற்கு தொழிற்சங்கங்கள் இணங்கவில்லை. இதையடுத்து மீண்டும் ஜனாதிபதியுடனும் ஏனைய சம்மந்தப்பட்டவர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வரலாற்று காலம் முதல் கூட்டு ஒப்பந்த அடிப்படையிலேயே, சம்பளப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டு வந்துள்ளது. சம்பள அதிகரிப்பு மட்டுமின்றி தொழிலாளர்களுக்கான சலுகைகள் தொடர்பிலும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு தீர்வுகள் காணப்பட்டுள்ளன.

இந்நிலையிலேயே 2020 கூட்டு ஒப்பந்தத்திலிருந்து இரு தரப்பினரும் விலகின. இதனால் கூட்டு ஒப்பந்தம் தற்போது நடைமுறையில் இல்லை.

சம்பள நிர்ணய சபைக்கு எதிராக 2021 இல்,சட்ட நடவடிக்கைக்காக நீதிமன்றம் சென்றதன் பின்னர் வழக்கில் தொழில் அமைச்சு வெற்றி பெற்றாலும் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வகையில் கூட்டு ஒப்பந்தத்தின் மூலம் இதனை தீர்க்க முடியாத நிலையிலேயே, மீண்டும் சம்பள நிர்ணய சபையுடன் சம்பந்தப்படுத்தி இதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

சம்பள நிர்ணய சபை இரண்டு முறை கூடிய போதும் அதற்கு முதலாளிமார் சம்மேளனம் அவற்றுக்கு சமூகமளிக்கவில்லை. இதுபோன்ற சந்தர்ப்பங்களில் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பில் தீர்மானம் ஒன்றை மேற்கொள்வதற்கான அதிகாரத்தை, தொழில் ஆணையாளருக்கு தொழில் அமைச்சரினால் வழங்க முடியும்.

அந்த வகையிலேயே அடிப்படை சம்பளம் 1,350 ரூபாவாகவும் ஏனைய கொடுப்பனவுகளாக 350 ரூபாவையும் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டு வர்த்தமானியும் வெளியிடப்பட்டது.

இந்நிலையில் அரசாங்கம் 1,700 ரூபா என்ற தீர்மானத்தை அறிவித்துள்ளது.

## முஜிபுர் ரஹ்மானை எவ்வாறு...

செய்ய முடியுமெனவும் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர சபையில் கேள்வியெழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் இராஜாங்க அமைச்சரான டயனா கமகேயின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை உயர் நீதிமன்றம் இரத்து செய்துள்ளது. இந்த வெற்றிடத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் எம்.பி. முஜிபுர் ரஹ்மானை நியமிக்கவுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது .

அவர் கொழும்பு மாநகரசபையின் முதல்வர் வேட்பாளராக வேட்புமனு தாக்கல் செய்துள்ளார்.அதற்காகவே பாராளுமன்ற உறுப்பினர் பதவியையும் இராஜினாமா செய்தார்.

உள்ளூராட்சிமன்ற தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையிலும் முஜிபுர் ரஹ்மான் வேட்புமனு தாக்கல் செய்த ஒரு வேட்பாளர்.

.வேட்புமனுக்களை தாக்கல் செய்த அரச சேவையாளர்கள் வேட்புமனுக்களை இரத்து செய்து தமது பிரதேசத்தின் சேவைகளை முன்னெடுக்க வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்குமாறு தேர்தல் ஆணைக்குழுவிடம் வலியுறுத்தினார்கள்.

ஆனால் தேர்தல் ஆணைக்குழு இடமளிக்கவில்லை .சுய விருப்பத்துக்கு அமைய வேட்பு மனுக்களை இரத்து செய்ய முடியாதென ஆணைக்குழு தெரிவித்தது.

## டயனாவின் வெற்றிடத்துக்கு...

பண்டார எம்.பிவுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார். இராஜாங்க அமைச்சர் டயானா கமகேயின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்துச் செய்து வழங்கப்பட்ட தீர்ப்பை கேள்விக்குட்படுத்தவில்லை. இத்தீர்ப்பினால் பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்தின் உறுப்பினர் ஒருவர் குறைவடைந்துள்ளார்.இது,ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது. பெண்களின் அனுபவம், அறிவு மற்றும் எதிர்கால சிந்தனை என்பன சமூகத்திலுள்ள சகலருக்கும் பயனளிக்கும் வகையிலான கொள்கைகளை வகுப்பதில் பங்களிக்க வேண்டும். பயனுள்ள ஜனநாயகத்திற்கு பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் முக்கியமானது என்றும் பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் டயானா கமகே நீக்கப்பட்டதால், ஏற்படக்கூடிய எதிர்மறையான தாக்கத்தை குறைக்க முடியும் என்பதுடன், பாராளுமன்றத்தில் பாலின சமத்துவம் மற்றும் பன்முகத்தன்மைக்கான அர்ப்பணிப்பை உறுதிப்படுத்த முடியும் என்றும் பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது.

## நாட்டின் முன்னேற்றத்துக்கு...

குறுகிய கால மற்றும் குறுகிய எதிர்பார்ப்புகளை இலக்காகக் கொண்டு தற்போதைய பயணப் பாதையை மாற்ற முனைந்தால், நாடு மீண்டும் அதல பாதாளத்திற்கே தள்ளப்படும்.

தற்போதைய இக்கட்டான காலகட்டத்தில் நாட்டைத் தவிர்த்து , தமது சொந்த நலன்களை முன்னிறுத்தி செயற்பட்டால் அந்தப் பயணம் பாரிய அழிவின் தொடக்கமாகவே அமையும். உடன்பாடு மற்றும் ஒருமித்த கருத்துடன் செயற்பாடுகளை முன்னெடுத்து முன்னோக்கி பயணிக்க முடியுமானால், உலகில் அபிவிருத்தியடைந்த நாடாக இலங்கையை விரைவில் முன்னேற்ற முடியும். நாட்டை மீட்டெடுக்கவும் நாட்டின் எதிர்கால சந்ததியினருக்கு ஏதோ ஒரு வகையில் பங்களிப்பை செய்யக்கூடியதுமான இந்த வாய்ப்பை எவரும் தவற விட்டு விடக்கூடாது. அனைவரும் சேர்ந்து மலர்த்தட்டில் கைவைப்போம். இன்று நாம் எவ்வாறு செயற்படுகிறோம் என்பதை வைத்தே எமது எதிர்காலம் தீர்மானிக்கப்படும்.

மிக மோசமாக வீழ்ச்சியடைந்திருந்த பொருளாதாரத்திலிருந்து நிலையான பொருளாதாரத்தை நோக்கிய இந்தப் பயணத்தில் அடைந்துள்ள முன்னேற்றம் நாடு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பிருந்ததை விட முன்னேற்றமடைந்துள்ளது. இந்த முன்னேற்றத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாத சில குழுக்கள், நரகத்தில் ஒரு இடைவேளையைக் கடந்து கொண்டிருக்கிறோம் என்று கேலி செய்கின்றனர். உண்மையில் நாம் பொருளாதார நரகத்தில்தான்,நாம் இருந்தோம். இப்போது முறையான திட்டமிடல் மூலம் அந்த நரகத்திலிருந்து வெளியே வந்து கொண்டிருக்கிறோம்.

## தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ...

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத்,

டிஜிட்டல் வியூகத் திட்டம் 2030க்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. அதில் 06 முக்கிய விடயங்களை முன்வைத்துள்ளோம். அதில் முதலாவது உட்கட்டமைப்பு வசதிகள், இணைப்பு மற்றும் அணுகல், திறன்கள், கல்வியறிவு, கைத்தொழில்கள் மற்றும் தொழிற்துறை, இணைக்கப்பட்ட டிஜிட்டல் அரசாங்கம். (connected Digital Government) மேலும், சைபர் பாதுகாப்பு, தரவுப் பாதுகாப்பு,தனித்தன்மை, டிஜிட்டல் நிதிச் சேவைகள், சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகத் துறைகளின் டிஜிட்டல் மயமாக்கல் ஆகியவற்றை சுட்டிக்காட்டலாம். வெளிநாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சுடன் இணைந்து, ஜுன் 25இல், உலகளாவிய முதலீட்டு ஊக்குவிப்பு மாநாடு நடத்தப்பட உள்ளது. பாடசாலைகளுக்கு 1,000 ஸ்மார்ட் வகுப்பறைகள் வழங்க ஏற்பாடு செய்துள்ளோம். இந்த ஆண்டு இறுதிக்குள் மேலும் 500 பாடசாலைகளுக்கு ஸ்மார்ட் வகுப்பறைகள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அத்துடன், தகவல் தொழில்நுட்பம் அல்லாத பட்டதாரிகள் மற்றும் NVQ 4 தகுதி பெற்றவர்களுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## இன்றைய பலன்கள்

(10.05.2024)

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்**: கூட்டுத் தொழிலில் சுமாரான லபம் கிடைக்கும். பழைய பாக்கி வசூலாகி மகிழ்ச்சிப்படுத்தும். பங்குச் சந்தை வியாபாரத்தில் லாபம் குறையாது.

**ரிஷபம்** : கூட்டுத் தொழிலில் எதிர்பார்த்த லாபம் கிடைக்காது. பங்குச் சந்தையில் பங்குகளை அவசரப்பட்டு விற்க வேண்டாம். கலைஞர்களுக்கு எதிர்பார்க்கும் ஆதாயம் இருக்காது.

**மிதுனம்** : கூட்டுத் தொழில் எதிர்பார்க்கும் லாபம் கிடைக்கும். வியாபாரம் முன்னேற்றம் குறித்து கூட்டாளிகளுடன் ஆலோசிப்பீர்கள். பங்கு சந்தை வியாபாரம் ஓரளவு லாபம் தரும்.

**கடகம்** : கூட்டுத் தொழிலில் எதிர்பார்க்கும் லாபம் குறையாது. பணத்தை கையாளும் போது அதிக கவனம் தேவை. புதிய பங்குகள் வாங்குவதை தவிர்க்க வேண்டும்.

**சிம்மம்** : புதிய வாடிக்கையாளர் சேர்க்கை உண்டு. கூட்டு தொழில் வியாபாரம் வழக்கம் போல் நடைபெறும். பங்கு சந்தை வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிடைக்காது.

**கன்னி** : கூட்டுத் தொழிலில் புதிய வருமானம் கிடைக்கும் பங்குச்சந்தையில் அதிக லாபம் கிடைக்க கொஞ்ச காலம் பொறுத்திருங்கள். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளை பெற சக கலைஞர்களின் ஒத்துழைப்பை நாட வேண்டியது இருக்கும்.

**துலாம்** : பங்குச் சந்தை வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறி அதிக லாபம் கிடைக்கப்பெறும். இளைஞர்கள் பிரபல நிறுவனங்களிடம் இருந்து புதிய ஒப்பந்தங்கள் பெற்று பொருளாதார ரீதியாக உயர்நிலையை அடைவார்கள்.

**விருச்சிகம்** : கூட்டுத் தொழில் வியாபாரம் நன்கு நடைபெறும். வியாபார அபிவிருத்திக்காக கூட்டாளிகளுடன் கலந்து ஆலோசிப்பீர்கள்.

**தனுசு** : பங்கு சந்தை வியாபாரம் சுமாராக நடைபெறும். கலைஞர்களுக்கு புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகி பணிகளில் மகிழ்வாக ஈடுபடுவீர்கள்.

**மகரம்** : புதிய வாடிக்கையாளர்களின் அறிமுகமும் அவர்களால் அதிக வருமானமும் கிடைக்கக்கூடும். கூட்டுத் தொழிலில் லாபம் பெறுவீர்கள்.

**கும்பம்** : கூட்டுத் தொழிலில் லாபம் இல்லாவிட்டாலும் வியாபாரம் வழக்கம் போல் நடைபெறும். பங்குச்சந்தையில் ஆதாயம் கிடைக்காது. கலைஞர்கள் புதிய ஒப்பந்தம் கிடைத்து சுறுசுறுப்பாக ஈடுபடுவர்.

**மீனம்** : கூட்டுத் தொழிலில் வழக்கமான லாபம் வந்து சேரும். பங்குச்சந்த வியாபாரம் சுமாராக நடைபெறும். கலைத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு வருமானம் குறையும்.

## சவால்களை ஜனாதிபதி... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

முன்னர் லிட்ரோ நிறுவனம் அரசுக்கு சுமையாக இருந்தது. ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் நிறுவனத்தின் முகாமைத்துவத்தை மாற்றியமைத்ததால், இன்று இந்நிறுவனம் இந்த நிலைக்கு வந்துள்ளது. லிட்ரோ நிறுவனத்தின் வெற்றியினால் உலக வங்கியிடமிருந்து பெறப்பட்ட 26 பில்லியன் ரூபா கடன் தொகையை ஆறு மாதங்களுக்குள் செலுத்த முடிந்தது. கடந்த வருடம் லிட்ரோ நிறுவனம் 03 பில்லியன் ரூபாவை அரசாங்கத்திற்கு வழங்கியுள்ளது. தற்போது மக்கள் வரிசையில் நிற்காமல் எரிவாயுவை பெற்றுக் கொள்கின்றனர். மிகவும் சவாலான காலகட்டத்தின் பின்னர் லிட்ரோ நிறுவனத்தை முன்னெடுத்துச் செல்லும் நிறுவனத் தலைவர் முதித பீரிஸ் உட்பட பணிப்பாளர் சபை, பணியாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்களுக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## சுற்றுலா விசாவில்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

ஆட் கடத்தல் தொடர்பான முறைப்பாடுகளை விசாரிப்பதற்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக சட்டத்தின் கீழ், பணியகத்துக்கு அதிகாரம் இல்லை.மேலும் இத்தகைய முறைப்பாடுகள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் விசாரிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## டயனா கமகேவுக்கு...

கொழும்பு நீதவான் திலின கமகே, இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார். உத்தரவின் பிரதிகள் குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் அலுவலகம் மற்றும் தேசிய புலனாய்வுப் பணிப்பாளர் அலுவலகத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## தாய்லாந்திலிருந்து 'குஷ்'...

அதிகாரிகளால் இந்நபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தாய்லாந்தின் பெங்கொக் நகரிலிருந்து இலங்கைக்கு வந்துள்ளார். அவரது பயணப் பொதியில் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த ஐந்து கிலோ 278 கிராம் குஷ் போதைப்பொருளை பொலிஸார் கைப்பற்றினர். ஹோமாகம பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயது டைய இச்சந்தேக நபர் நடனக் கலைஞர் என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

## திருமணத்துக்கு முன் தலசீமியா...

ஊடகவியலாளர் மாநாட்டிலேயே விசேட வைத்தியர் இதனை குறிப்பிட்டுள்ளார். தலசீமியா ஹீமோகுளோபின் உற்பத்தியில் குறைபாடுகளை ஏற்படுத்தும் மரபணு மாற்றத்தால் ஏற்படும் நோய் என்பதால், குழந்தைகளுக்கு அதிக அளவு இரத்தம் கொடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். தலசீமியா நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதற்கான செலவு சுகாதார அமைப்பில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நோயால் பாதிக்கப்பட்ட தனிநபர் மற்றும் அவர்களது குடும்பங்கள் மீது மிகப்பெரிய உளவியல் தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்நிலைமையை தடுப்பதற்கு, நாட்டில் தலசீமியா பிரசவங்களின் எண்ணிக்கையைக் குறைப்பது முக்கியம் என்றும் அவர் வலியுறுத்தினார். இதன்படி, தலசீமியா கேரியர் நிலையை முன்கூட்டியே கண்டறிவதன் மூலம் தலசீமியா மேஜர் கொண்ட குழந்தைகள் பிறப்பதைத் தடுக்க முடியுமென்று அவர் கூறியுள்ளார்.

## மைத்திரிக்கு எதிரான...

பண்டாரநாயக்க குமாரதுங்க சமர்ப்பித்த மனு நேற்று (09) கொழும்பு மாவட்ட நீதிபதி சந்துன் விதான முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கு தொடர்பான ஆட்சேபனைகள் இருந்தால், தாக்கல் செய்யுமாறு பிரதிவாதிகளுக்கு உத்தரவிட்ட மாவட்ட நீதிபதி, வழக்கை எதிவரும் (29) மீண்டும் அழைப்பதற்கும் உத்தரவிட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன, சிரேஷ்ட உப தலைவர் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, உப தலைவர் பைஸர் முஸ்தபா உள்ளிட்டோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக மைத்திரிபால சிறிசேனவை நியமித்தமை கட்சியின் யாப்புக்கு முரணானது எனவும், அவர், அப்பதவியை வகிப்பதைத் தடுக்கும் உத்தரவை பிறப்பிக்குமாறும் கோரி, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார்.

# கிழக்கின் குரல்



## அட்டாளைச்சேனையில்
# சுகாதார நடைமுறைகளை பின்பற்றாத உணவகங்கள் மீது சட்ட நடவடிக்கை

**ஒலுவில் விசேட நிருபர்**

அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் சுகாதார நடைமுறைகளை பின்பற்றாத உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் உணவு விற்பனை நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக, அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி ஏ.எம்.முகம்மது இஸ்ஸதீன் தெரிவித்தார்.

உணவு விற்பனை நிலையங்கள், உணவு கையாளும் நிலையங்களில் பாவனைக்கு உதவாத உணவுப் பண்டங்கள் விற்பனை செய்யப்படுவதாக பொதுமக்கள் செய்த முறைப்பாட்டை அடுத்து உணவு விற்பனை நிலையங்கள், உணவு கையாளும் நிலையங்கள், பேக்கரிகளில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் திடீர் சோதனை நடத்தி வருவதாகவும், அவர் கூறினார். இரவு நேரங்களிலும் விசேட சுற்றிவளைப்புகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், அவர் தெரிவித்தார்.

இதன்போது விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பாவனைக்கு உதவாத உணவுப்பண்டங்கள், காலாவதியான உணவுப்பொருட்கள் என்பன கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டு வருவதுடன், அவற்றின் உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.



உணவு தயாரிப்போர் தூய்மையை பேண வேண்டுமென்பதுடன், உணவு விநியோகிக்கும் இடம், பயன்படுத்தும் உபகரணங்கள் ஆகியவையும் தூய்மையாக இருக்க வேண்டுமெனவும் உணவகங்களில் பணியாற்றுபவர்கள் கையுறை பாவிக்க வேண்டும். உணவு பாதுகாப்பு சட்ட திட்டங்களை மீறி பாவனைக்கு உதவாத உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் நிலையங்கள் கண்டுபிடிக்கப்பட்டால் அதன் உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு அந்நிலையங்கள் மூடப்படுமெனவும், அவர் தெரிவித்தார்.

# சத்துருக்கொண்டானில் துரித உணவு உற்பத்தி திட்டம்

*மரக்கறி அறுவடை விழா*

**மட்டக்களப்பு சுழற்சி நிருபர்**



விவசாயிகள் மத்தியில் விவசாயச் செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு மட்டக்களப்பு, சத்துருக்கொண்டான் மாவட்ட விவசாய பயிற்சி நிலைய வளாகத்தில் துரித உணவு உற்பத்தி திட்டத்தின் கீழ் நிலக்கடலை மற்றும் மரக்கறி வகைகள் செய்கை பண்ணப்பட்டன.

இவற்றின் அறுவடை நேற்று முன்தினம் புதன்கிழமை (08) சிறப்பாக நடைபெற்றது. மட்டக்களப்பு மாவட்ட விவசாய விரிவாக்கல் திணைக்களத்தின் பிரதி பணிப்பாளர் எம்.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாகாண விவசாய கால்நடை உற்பத்தி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஐ.கே.ஜி.முத்துபண்டா பிரதம அதிதியாக கலந்துகொண்டு அறுவடையை தொடங்கி வைத்தார்.

இதன்போது விவசாய உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளுக்கு இலவசமாக தெளிகருவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண விவசாய விரிவாக்கல் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் எம்.எஸ்.ஏ.கலீஷ், விவசாயத் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள், விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள், விவசாயப் போதனாசிரியர்கள் அடங்கலாக விவசாயத் திணைக்களத்தின் அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

# ஏறாவூருக்கு சவூதி தூதுவர் விஜயம்



**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

மட்டக்களப்பின் ஏறாவூர் பிரதேசத்தில் இயங்கி வரும் அல் குர்ஆன் மனனமிடும் குல்லிய்யது தாருள் உலூம் அரபுக் கல்லூரிக்கு இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் ஹமூத் அல் கஹ்தானி நேற்று முன்தினம் புதன்கிழமை விஜயம் செய்துள்ளார்.

வடமேல் மாகாண ஆளுநர் ஹாபிஸ் நஸீர் அஹமட்டின் அழைப்பின் பேரிலேயே அவரது இந்த விஜயம் அமைந்துள்ளது. இதன்போது குர்ஆனை மனனம் செய்யும் ஹாபிழ் மாணவர்கள் இன்முகத்துடன் இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவரை வரவேற்றுள்ளனர்.

# அம்பாறையில் டென்னிஸ் விளையாட்டரங்கு திறப்பு



**காரைதீவு குறூப் நிருபர்**

அம்பாறை மாவட்டத்தில் டென்னிஸ் விளையாட்டரங்கை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நேற்று முன்தினம் புதன்கிழமை திறந்து வைத்துள்ளார்.

பொலிஸ் திணைக்களத்தினரின் உதவியுடன் டென்னிஸ் சங்கத்தினரால் பொது மைதானத்தில் டென்னிஸ் விளையாட்டரங்கு உருவாக்கப்பட்டது.

பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோன், சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண உள்ளிட்ட பலர் இதற்கான நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்நிலையில் அம்பாறை மாவட்ட மாணவர்கள் டென்னிஸ் விளையாட்டில் தமது திறமையை வளர்த்துக் கொள்ள இதுவொரு சந்தர்ப்பமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் இரத்ததானம்

**புதிய காத்தான்குடி தினகரன், மட்டக்களப்பு குறூப் நிருபர்கள்**



மட்டக்களப்பு தேசிய கல்வி கல்லூரியில் 'உதிரம் கொடுத்து உயிர் காப்போம்' எனும் தொனிப்பொருளின் கீழ் இரத்ததான நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

மட்டக்களப்பு தேசிய கல்வி கல்லூரியின் கல்வியும் தர மேம்பாட்டுக்கும் பொறுப்பான உப பீடாதிபதி மணிவண்ணன் தலைமையில் இரத்ததான நிகழ்வு நடைபெற்றதுடன், இதில் உப பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், விரிவுரை இணைப்பாளர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலர் ஆர்வத்துடன் பங்குபற்றி இரத்ததானம் வழங்கினர்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் இரத்தக் கையிருப்பு குறைந்தளவில் உள்ளதை அறிந்துகொண்ட மட்டக்களப்பு தேசிய கல்வி கல்லூரியினர், இந்த இரத்ததான நிகழ்வை ஏற்பாடு செய்தனர்.

# மாற்றுத்திறனாளி மாணவர்களை கல்வி செயற்பாடுகளில் உள்வாங்கல்

## திருகோணமலையில் செயலமர்வு

**கிண்ணியா மத்திய நிருபர்**

திருகோணமலை மாவட்ட பாடசாலைகளில் மாற்றுத்திறனாளி மாணவர்களை கல்வி அபிவிருத்தி செயற்பாடுகளில் உள்வாங்குவது தொடர்பாக கல்வியியலாளர்கள் கலந்துகொண்ட செயலமர்வு நேற்று வியாழக்கிழமை திருகோணமலை லக்கி பீச் ஹோட்டலில் நடைபெற்றது.

முஸ்லிம் எயிட் ஸ்ரீலங்கா என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் அனுசரணையில் திருகோணமலை மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் கவுன்சிலின் ஒத்துழைப்புடன் இந்த செயலமர்வு நடைபெற்றது.

திருகோணமலை மாவட்டத்தில் கல்வி அபிவிருத்தி செயற்பாடுகளில் மாற்றுத்திறனாளி மாணவர்களை உள்வாங்குதல் மற்றும் சிறந்த பயன் விளைவுகளை பெற்றுக்கொள்ளுதல் போன்றன தொடர்பான ஒரு சிறு ஆய்வு முயற்சியினை ஸ்ரீலங்கா நிறுவனம் இவ்வருடம் ஆரம்பத்தில் மேற்கொண்டது இதற்கிணங்க திருகோணமலை மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்டு மாற்றுத்திறனாளி மாணவர்களின் கல்வி அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பான ஆய்வு முயற்சியில் பெற்றுக்கொள்ளப்பட்ட விடயங்கள் இங்கு கலந்துரையாடலுக்காக சமர்ப்பிக்கப்பட்டது செயலமர்வின் இறுதியில் மாற்றுத்திறனாளி மாணவர்களை கல்வி முயற்சியில் உள்ளீர்க்கும் முயற்சிகளை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகள் தொடர்பாக ஆராயப்பட்டன.

# கோறளைப்பற்றில் விசேட கூட்டம்




கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்தில் வடமேல் மாகாண ஆளுநர் ஹாபிஸ் நசீர் அஹமட்டின் பங்குபற்றுதலுடன் விசேட கூட்டமொன்று நடைபெற்றது.

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் எஸ்.எச்.முஸம்மில் தலைமையில் அண்மையில் இந்தக் கூட்டம் நடைபெற்றதுடன், இதில் கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச செயலாளர் ஏ.தாஹிர், உதவி திட்டமிடல் பணிப்பாளர்களான எம்.ஏ.ரியாஸ், எம்.எம்.றுவைத், கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச சபை செயலாளர் எஸ்.எம்.சஹாப்தீன், கல்குடா இணைப்பாளர் எம்.ஜவாத், விவசாய அமைப்பினர், அரச அதிகாரிகள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது சூழலுக்கு பாதகம் விளைவிக்கும் மர ஆலைகள், அரிசி ஆலைகள் என்பவை தொடர்பாக இந்த கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் கவனம் செலுத்தினர்.

இந்நிலையில் சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் எதிர்காலத்தில் இது தொடர்பாக கவனம் செலுத்தப்படவுள்ளது.

**(எம்.எம்.ஜெஸ்மின்)**

## சர்வதேச செஞ்சிலுவை சங்க தினம்;
# காத்தான்குடி பிரதேசத்தில் ஆயுர்வேத மருத்துவ முகாம்

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க தினத்தை முன்னிட்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினுடைய காத்தான்குடி பிரிவின் ஏற்பாட்டில் ஆயுர்வேத மருத்துவ முகாம், இலங்கை செஞ்சிலுவைச் சங்க காத்தான்குடி பிரிவு காரியாலயத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட புதுக்குடியிருப்பு ஆயுர்வேத சித்த வைத்தியசாலையால் இந்த ஆயுர்வேத மருத்துவ முகாம் நடத்தப்பட்டது.



மட்டக்களப்பு மாவட்ட புதுக்குடியிருப்பு ஆயுர்வேத சித்த மாவட்ட வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி ஆயிஷா பயாஸ் தலைமையிலான வைத்தியர்கள் இந்த மருத்துவ முகாமில் கலந்து கொண்டு மக்களுக்கு சிகிச்சை வழங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டதுடன், மருந்துகளையும் இலவசமாக வழங்கி வைத்தனர். இதன் ஆரம்ப வைபவம் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் காத்தான்குடி பிரிவு தலைவர் சலீம் தலைமையில் நடைபெற்றது. இதில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் காத்தான்குடி பிரிவு நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது மரக்கன்றுகள் நடுகையும் இடம்பெற்றது.

# ஆலையடிவேம்பில் புதிய பிரதேச செயலாளர் நியமனம்

**வாச்சிக்குடா விசேட நிருபர்**



ஆலையடிவேம்பு பிரதேச செயலாளராக இலங்கை நிர்வாக சேவை அதிகாரி ஆர்.திரவியராஜ் நியமிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து நேற்று வியாழக்கிழமை அவர் தனது கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார்.

நேற்றுக் காலை பிரதேச செயலகத்துக்கு வருகை தந்த ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் ஆர்.திரவியராஜ், ஆலையடிவேம்பு பிரதேச செயலக மகா கணபதி ஆலயத்தில் நடைபெற்ற பூஜை வழிபாடுகளில் கலந்து கொண்ட பின்னர் கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்து ஆலையடிவேம்பு பிரதேச செயலக வளாகத்தில் அவர் மரக்கன்றொன்றையும் நாட்டி வைத்துள்ளார். இதன்போது புதிய பிரதேச செயலாளருக்கு அனைவரும் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

கிழக்கு மாகாண ஆட்பதிவு திணைக்களத்தின் பிரதி ஆணையாளராகவும் ஆர்.திரவியராஜ் கடமையாற்றியிருந்தார். அத்துடன் வெல்லாவெளி, நிந்தவூர், அம்பாறை ஆகிய பிரதேச செயலகங்களில் உதவிப் பிரதேச செயலாளராக கடமையாற்றியதுடன், பொத்துவில் பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளராகவும் கடமையாற்றியிருந்தார்.

# காட்டு யானை தாக்குதலில் ஒருவர் பலி

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

மட்டக்களப்பின் பதுரியா நகரை வசிப்பிடமாக கொண்ட ஒருவர், காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

கடந்த இரு தினங்களுக்கு முன்னர் பொலன்னறுவையிலிருந்து ஓட்டமாவடி நோக்கி இவர் சென்று கொண்டிருந்த போது, காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்கானார்.

இந்நிலையில் பொலன்னறுவை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, அதிதீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த இவர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக, வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# கிளிநொச்சி கண்ணகைபுர கிராம மக்களின் பிரச்சினைக்கு தீர்வு

## அமைச்சர் டக்ளஸ் தலைமையில் விசேட கலந்துரையாடல்




கிளிநொச்சி கண்ணகைபுரம் கிராம மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அடையாளப்படுத்தி தீர்வு காணும் நோக்கிலான மக்கள் சந்திப்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு மக்களுடன் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது சுமார் 300 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்ற கண்ணகைபுரம் கிராமத்தின் அடிப்படை மற்றும் வாழ்வாதார பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.

ஜனாதிபதியின் நிகழ்ச்சி திட்டத்திற்கு அமைவாக நாடளாவியரீதியில் விவசாயத்தை நவீனமயப்படுத்தி விவசாய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கோடு மாவட்ட ரீதியில் ஓர் முன்மாதிரி கிராமத்தை தெரிவுசெய்யும் திட்டத்தில் கிளிநொச்சியில் கண்ணகைபுரம் கிராமம் தெரிவாகியுள்ளது. அதற்கமைய கண்ணகைபுரம் கிராம அபிவிருத்தி செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கின் உதயம்

## வீதிப் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம்

(யாழ். விசேட நிருபர்)

வீதிப் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக நேற்றையதினம் வீதிப்பாதுகாப்பு விழிப்புணர்வு நடைபவனி நடைபெற்றது.

வேம்படிச் சந்தியிலிருந்து யாழ். போதனா வைத்தியசாலை வீதியூடாக காங்கேசந்துறை வீதி ,சத்திரச்சந்தி வரை வீதிப் பாதுகாப்பு விழிப்புணர்வு நடைபவனி நடைபெற்றது.

வீதியில் காணப்படும் ஆபத்து நிறைந்த இடங்களை அடையாளம் காணல், வீதிப் பாதுகாப்பு மற்றும் வாகன நடைமுறைகளைப் பின்பற்றல், பரிசோதனை போன்ற செயற்பாடுகள் நடைபெற்றன.

இச்செயற்பாட்டை தொடர்ச்சியாக ஏனைய பகுதிகளில் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், யாழ்ப்பாண மாவட்ட பதில் செயலாளர், வடக்கு மாகாண மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள ஆணையாளர், மோட்டார் வாகன பரீட்சகர்கள், அதிகாரிகள், யாழ்ப்பாண பிரதேச செயலாளர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர், போக்குவரத்து பொலிஸார், வைத்தியர்கள், மாநகர சபை ஆணையாளர் உள்ளிட்ட துறைசார் அதிகாரிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

# முதிரை மரக்குற்றிகள் மீட்பு

(மாங்குளம் குரூப் நிருபர்)

புதுக்குடியிருப்பில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பல இலட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரக்குற்றிகள் மீட்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரணைப்பாலை பகுதியில் தனியார் காணியொன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பல இலட்சம் ரூபா பெறுமதியான நூறுக்கும் மேற்பட்ட முதிரை மரக்குற்றிகள் முல்லைத்தீவு பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதுதொடர்பில் நீண்ட நாட்களாகவே பொதுமக்கள் குற்றம் சாட்டிவருகின்றனர்.

இவ்வாறான நிலையில் இச்சுற்றிவளைப்பு இடம்பெற்றுள்ளது.

# பேராசிரியர் வித்தியானந்தன் அருங்காட்சியகம் திறந்துவைப்பு



(யாழ். விசேட நிருபர்)



மறைந்த பேராசிரியர் வித்தியானந்தனின் பிறந்ததினத்தை முன்னிட்டு வித்தியானந்தனின் அருங்காட்சியகம், யாழ்.போதனா வைத்தியசாலையில், பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி மற்றும் மறைந்த பேராசிரியர் வித்தியானந்தனின் குடும்ப உறவினர்களின் தலைமையில் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

மறைந்த பேராசிரியர் வித்தியானந்தனின் குடும்ப உறவினர்களின் ஏற்பாட்டில் திருவுருவபடம் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டதுடன் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி சி.ரகுராம், யாழ்ப்பாணம் தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தான தலைவரும் சிவபூமியின் தலைவருமான ஆறு. திருமுருகன், வாழ்.நாள் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மறைந்த பேராசிரியர் வித்தியானந்தன் அறக்கட்டளை தலைவர் வி.கமலநாதன் உள்ளிட்ட குடும்ப உறவினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

## வேகக்கட்டுப்பாட்டை இழந்து மோட்டார் சைக்கிள் விபத்து

### இளம் பெண் படுகாயம்

(நாகர்கோவில் விசேட நிருபர்)

பருத்தித்துறை மருதங்கேணி வீதியில் குடத்தனை வலிக்கண்டிப் பகுதியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்து மோட்டார் சைக்கிள் மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் பெண்ணொருவர் படுகாயங்களுடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்தில் இந்திரராஜா சிந்துஜா என்ற 27 வயதுடைய நபர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# சாதனைப்பெண் அகிலத்திருநாயகிக்கு 'முல்லையின் வீரமங்கை' பட்டம் வழங்கி கௌரவம்



பிலிப்பைன்ஸ் நாட்டில் 2023ஆம் ஆண்டு நடைபெற்ற ஆசிய தடகள போட்டியில் 72 வயதில் சாதனை படைத்த முல்லைத்தீவைச் சேர்ந்த அகிலத்திருநாயகியை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு முள்ளியவளை கிழக்கு பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

அகிலத்திருநாயகி உள்ளிட்ட விருந்தினர்கள் மங்கள வாத்தியத்துடன் அழைத்துவரப்பட்டு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினத்தின் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

2023 ஆண்டு பிலிப்பைன்ஸ் நாட்டில் நடைபெற்ற ஆசிய தடகள போட்டியில் இரண்டு தங்கப்பதக்கங்களையும் வெண்கல பதக்கத்தையும் விளையாட்டில் சாதனை படைத்துள்ளார். முள்ளியவளை மக்கள் சார்பாக 'முல்லையின் வீரமங்கை' என்ற பட்டம் வழங்கி அவர் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர்(காணி) எஸ்.ஜெயகாந்தன், சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட வைத்தியசாலை வைத்தியர் ச.சஞ்சிவினி, சட்டத்தரணி கு.கம்சன், முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலய தலைவரும் சட்டத்தரணியுமான க.பரஞ்சோதி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# வியாஸ்காந்த் தனது கிரிக்கெட் பயணத்தில் இன்னும் பல சாதனைகளை நிலைநாட்ட வேண்டும்

## வடக்கு மாகாண ஆளுநர் வாழ்த்து





இந்தியன் ப்ரீமியர் லீக் (IPL) கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் சன் ரைசஸ் ஹைதரபாத் அணிக்காக விளையாடியுள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த துடுப்பாட்ட வீரர் விஜயகாந்த் வியாஸ்காந்திற்கு வடக்கு மாகாணம் சார்பில் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

வடக்கு மாகாணத்திலிருந்து தனது கிரிக்கெட் பயிற்சியை பெற்ற இவர் இலங்கைக்கு பெருமிதத்தை பெற்றுக்கொடுத்துள்ளதுடன், யாழ் மண்ணிற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

பல்வேறுபட்ட சமூக சீர்கேடான செயற்பாடுகளில் கவனம் செலுத்தும் இளைய தலைமுறையினருக்கு, விளையாட்டின் மூலம் சாதனை படைக்கும் 22 வயதேயான வியாஸ்காந்த் ஒரு சிறந்த முன்னுதாரணமாவார்.

இவரை முன்மாதிரியாகக் கொண்டு எமது இளைஞர், யுவதிகள் விளையாட்டுகளிலும் ஆர்வம் காட்ட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. கற்றல் மூலம் மட்டுமல்ல விளையாட்டின் மூலமும் உயரங்களை எட்ட முடியும் என்பதை உணர்த்தியுள்ள விஜயகாந்த் வியாஸ்காந்திற்கு மீண்டும் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் அகமகிழ்வடைகின்றேன்.

# இறங்குதுறையை அமைக்க திட்டமொன்றை தயாரிக்குமாறு துறைசார் தரப்பினருக்கு பணிப்பு!



புலோப்பளை, அறத்திநகர் கடற்றொழிலாளர் சங்கத்தினரின் தொழில் நடவடிக்கைகளுக்காக இறங்குதுறை மற்றும் அதனோடு செல்லும் வீதியையும் அமைக்கும் வகையிலான திட்டமொன்றை தயாரிக்குமாறு துறைசார் தரப்பினருக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பணிப்புரை வழங்கியுள்ளார்.

முன்னதாக முறையான இறங்குதுறை இல்லாமையால் நாளாந்தம் பல நெருக்கடிகளை எதிர்கொள்ளும் புலோப்பளை, அறத்திநகர் கடற்றொழிலாளர் சங்கத்தினரால் தமக்கான ஓர் இறங்குதுறையை அமைத்து தருமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

குறித்த கோரிக்கையின் பிரகாரம் அப்பகுதிக்கு நேரடி விஜயம் செய்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடற்றொழிலாளர்களுடன் கலந்துரையாடி அவர்களது பிரச்சினைகள் தேவைப்பாடுகள் தொடர்பில் கேட்டறிந்துகொண்டார்.

இந்நிலையில் இறங்குதுறை மற்றும் அதனோடு குறித்த இடத்திற்கு செல்லும் வீதியையும் கட்டம் கட்டமாக அமைக்கக்கூடிய வகையில் திட்டமொன்றை துரிதமாக தயாரிக்குமாறு துறைசார் தரப்பினருக்கு அமைச்சர் பணிப்புரை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சாவகச்சேரியில் திடீர் சோதனை




(யாழ். விசேட, சாவகச்சேரி நிருபர்கள்)

யாழ்ப்பாணம் சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பொலிஸ் விசேட அதிரடி படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து விசேட தேடுதல் நடவடிக்கையில் நேற்று ஈடுபட்டனர்.

யாழ் கண்டி நெடுஞ்சாலை மற்றும் யாழ் மன்னார் நெடுஞ்சாலை ஆகியன சந்திக்கும், நாவற்குழி பகுதியில் நேற்றைய தினம் வியாழக்கிழமை காலை சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த வீதிகளில் பயணிக்கும் சந்தேகத்திற்கிடமான வாகனங்களை மறித்து சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் யுக்திய நடவடிக்கையின் ஒரு அங்கமாக இந்த சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

# ஹெரோயினுடன் ஒருவர் கைது

(நாகர்கோவில் விசேட, கரவெட்டி தினகரன் நிருபர்கள்)

ஹெரோயின் போதைப்பொருளை உடமையில் வைத்திருந்த இளைஞர் ஒருவர் பருத்தித்துறை பொலிஸாரால் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை பொலிஸார் வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது புலோலி, சாரையடிப் பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் இளைஞர் ஒருவர் நிற்பதை அவதானித்து அவரை சோதனையிட்ட போது அவரது உடமையில் 2100 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டது. இதனையடுத்து 20 வயதுடைய இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# கடலோரப் பகுதியை பாதுகாக்கும் நோக்கில் 18ஆம் நாள் நடைபயணம்

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்




இலங்கையின் கரையோரப் பகுதியை மையமாகக் கொண்டு அம்பாறை, சென்றல் கேம்ப் பகுதியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற இராணுவ வீரர் செல்டன் பெரேரா தனது 18வது நாள் நடைபயணத்தை புத்தளத்திலிருந்து சிலாபம் வரை நேற்று (09) ஆரம்பித்துள்ளார்.

கடலோரப் பகுதியைப் பாதுகாப்பதும், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவருவதும் இந்த பயணத்தின் நோக்கம் ஆகும் என அவர் கூறினார்.

அத்தோடு, மணிக்கு 6 கிலோ மீற்றர் தூரம் நடந்து செல்வதாகவும், இந்த பயணத்தில் மூவின மக்களும் தனக்கு நல்ல ஒத்துழைப்புக்ளை தருவதாகவும், ஒவ்வொரு மாவட்டத்திலும் போக்குவரத்து பொலிஸார் பாதுகாப்பு வழங்குவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை கரையோர பகுதியை 52 நாட்களில் நடந்து செல்ல திட்டமிட்டுள்ளதாக தெரிவித்த அவர், இதற்கு எவருடைய அனுசரணையையும் பெறவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த மாதம் 22 ஆம் திகதி அம்பாறையிலிருந்து தனது பயணத்தை ஆரம்பித்த இவர், மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு விஜயம் செய்து நேற்று (09) புத்தளத்தில் இருந்து தனது பயணத்தை கொழும்பை நோக்கி ஆரம்பித்தார்.

# காலநிலை மாற்றத்திற்கு எதிராக போராடுவதில் நாம் தொடர்ந்து கவனம் செலுத்த வேண்டும்

## இலங்கை காலநிலை மாற்ற மாநாட்டில் ஜனாதிபதி தெரிவிப்பு

சுற்றாடல் மற்றும் காலநிலை மாற்றத்திற்காக ஒரேயொரு பொதுச்சட்டம் கொண்டுவரப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரக் கொள்கைகளை வகுக்கும் போது, ஏற்றுமதி சார்ந்த போட்டிப் பொருளாதாரம் மட்டுமன்றி, 2050 ஆம் ஆண்டளவில் பூஜ்ஜிய உமிழ்வை அடையும் பசுமைப் பொருளாதாரமாக மாற்றியமைப்பதிலும் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

கடந்த சில நாட்களாக இலங்கை எதிர்நோக்கும் கடும் வெப்பமானது எதிர்கால காலநிலை மாற்றத்தின் அடையாளம் என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, காலநிலை மாற்றத்தைத் தணிக்க உடனடி கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார். கொழும்பு ஷங்ரிலா ஹோட்டலில் கடந்த 7 ஆம் திகதி ஆரம்பமான இலங்கை காலநிலை மாநாட்டில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

இலங்கை வர்த்தக சம்மேளனத்தினால் முதன்முறையாக 'எங்கள் கிரகத்திற்கும் எமது நாட்டுக்குமான காலநிலை நடவடிக்கை' (*Climate Action for our Nation and the Planet*) என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இலங்கை காலநிலை மாற்ற மாநாடு நேற்று 09 ஆம் திகதி முடிவுற்றது.

உலகளாவிய மற்றும் தேசிய கண்ணோட்டத்துடன் காலநிலை மாற்ற நெருக்கடியின் பல்வேறு அம்சங்களை ஆழமாகப் புரிந்துகொள்வது மற்றும் பொருளாதாரத்தின் முக்கிய துறைகளில் ஏற்படக்கூடிய இடையூறுகளை ஆராய்வதே இந்த காலநிலை மாநாட்டின் நோக்கமாகும்.

மாநாட்டில் குறைந்த உமிழ்வு மற்றும் காலநிலை எதிர்ப்பு பொருளாதாரத்திற்கு மாறுவதற்கு செய்ய வேண்டிய கொள்கை மாற்றங்கள் குறித்து ஆராயப்படும்.

இலங்கையிலும் காலநிலை மாற்றம் தொடர்பான மையம் நிறுவப்பட்டுள்ளதாகத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, காலநிலை மாற்றத்தைத் தணிப்பதற்கான சட்டங்களை வகுப்பதில் உலக நிதி நிறுவனங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஐக்கிய இராச்சியத்தின் காலநிலை மாற்றச் சட்டத்தை பின்பற்றுமாறு அதிகாரிகளுக்கு தான் பணிப்புரை விடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், இந்துசமுத்திரம் மற்றும்



வெப்பமண்டலப் பிராந்தியத்தில் உள்ள நாடுகளின் வகிபாகம் மற்றும் காலநிலை மாற்றத்தைக் கையாள்வதில் இலங்கையின் தலையீடு ஆகியவற்றை விளக்கிய ஜனாதிபதி, இலங்கையில் நிறுவப்படவுள்ள காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளையும் விளக்கினார்.

### சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்திற்காக பொதுவான சட்டம் கொண்டுவரப்படும்!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்ததாவது:

"காலநிலை மாற்றத்துக்கு எதிரான அரசின் நடவடிக்கை குறித்து வர்த்தக சமூகத்துடன் ஆராய்வதற்கான இந்தக் கூட்டத்தில் பங்கேற்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். நான் ஜனாதிபதியாக பதவியேற்றது முதல், காலநிலை சவால்களை சமாளிக்கும் திட்டத்திற்கு முன்னுரிமை அளித்து வருகிறேன். அதற்காக எனது அலுவலகத்தில் காலநிலை மாற்ற மையம் உருவாக்கப்பட்டு அதற்கான ஆலோசகரும் நியமிக்கப்பட்டார்.

இதுவரை சுற்றுச்சூழலில் மட்டுமே எங்கள் கவனம் இருந்தது. ஆனால் அதில் காலநிலை மாற்றம் வகிக்கும் முக்கிய பங்கை நாம் புரிந்து கொள்ள வேண்டும். காலநிலை மாற்றம் மோசமானால் முழு சுற்றுச்சூழலும் சீர்குலைந்துவிடும். எனவே, காலநிலை மாற்றத்தை எவ்வாறு மாற்றியமைப்பது மற்றும் காலநிலை மாற்றத்திற்கு எதிராக எவ்வாறு போராடுவது என்பதில் நாம் தொடர்ந்து கவனம் செலுத்த வேண்டும்.

நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதே ஜனாதிபதியாக எனது பணியாக இருந்தது. இதுவரை இத்திட்டம் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதால் அடுத்த கட்ட பணிகளில் நாம் கவனம் செலுத்த வேண்டும். நாட்டின் தற்போதைய பொருளாதார முறைமையில் எம்மால் முன்னேற முடியாது. நான் முன்பு பல சந்தர்ப்பங்களில் குறிப்பிட்டது போல், நாம் அதிக போட்டித்தன்மை கொண்ட ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்தை உருவாக்க வேண்டும். அதற்கான புதிய சட்டத்தையும் உருவாக்கி இருக்கிறோம். மேலும் பொருளாதார மாற்ற சட்டத்தை அடுத்த வாரம் வர்த்தமானியில் வெளியிட எதிர்பார்க்கிறோம்.

2050 ஆம் ஆண்டுக்குள் நிகர பூஜ்ஜிய உமிழ்வை அடையும் இலக்கை இலங்கை அடைவதையும் இந்த பொருளாதார மாற்றச் சட்டம் உறுதி செய்கிறது. மேலும் அந்த காலப்பகுதிக்கு முன்னர் இலங்கை இந்த இலக்கை அடைய முடியும் என்று நான் நம்புகிறேன். எனவே, இந்நாட்டில் பொருளாதாரக் கொள்கைகளை வகுப்பதில், ஏற்றுமதிப் பொருளாதாரத்தை உருவாக்குவது மட்டும் நோக்கமல்ல. நிகர பூஜ்ஜிய உமிழ்வை அடையும் இலக்கை அடைவதை அடிப்படையாகக் கொண்ட பசுமைப் பொருளாதாரமாக மாற்றுவதிலும் கவனம் செலுத்தியுள்ளோம்.



சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான புதிய சட்டத்தையும் நாங்கள் உருவாக்கி வருகிறோம். சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாற்றம் இரண்டையும் கையாளும் ஒரு சட்டத்தை கொண்டு வர முடிவு செய்துள்ளோம். இதன் ஊடாக மத்திய சுற்றாடல் அதிகாரசபை தொடர்ந்து செயற்படும் அதேவேளை , காலநிலை மாற்றத்திற்கான மன்றம் அதில் உள்ளடக்கும். இந்தச் சட்டத்தை உருவாக்குவதற்கு தற்போதுள்ள பிரித்தானிய காலநிலை மாற்றச் சட்டத்தைப் பின்பற்றுமாறு அதிகாரிகளுக்கு




நான் அறிவுறுத்தியுள்ளேன். அத்துடன், காலநிலை மாற்றக் குழுவின் ஆலோசனையின் பேரில் செயற்படுவதும் பாராளுமன்றத்தில் ஒழுங்குவிதிகளை சமர்ப்பிப்பதும் அரசாங்கத்தினதும் சம்பந்தப்பட்ட விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினதும் பொறுப்பாகும் .

நிதி நிறுவனங்களால் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டமாக இருப்பதும் பிரித்தானிய காலநிலை மாற்ற சட்டத்தை பின்பற்ற ஒரு காரணம் எனலாம். எங்களிடம் உள்ள பல்வேறு மாற்றுவழிகளும், எங்கள் பசுமை நிதியியலும், நிச்சயமாக இங்கிலாந்து நடைமுறைகளை அடிப்படையாகக் கொண்டவை என்பதை நாங்கள் உறுதிசெய்கிறோம்.

மேலும், இலங்கையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கான அதிக சாத்தியக்கூறுகள் உள்ளன. சூரிய சக்தி மற்றும் காற்றாலை மின்சாரத்திற்கான இலங்கையின் கொள்ளளவு 30_ 50 ஜிகாவோட் வரையில் காணப்படுகிறது. எங்களிடம் உள்ள இந்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களை பயன்படுத்தி பெரும் பயனை அடைய எதிர்பார்த்திருக்கிறோம்.

மேலும், நாட்டில் விவசாயப் பொருளாதாரத்தை உருவாக்கும் வகையில், விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தை செயல்படுத்தியுள்ளோம். காலநிலை மாற்றங்களை எதிர்கொள்வதுஎன்பதுகுறித்தஉடன்பாட்டைஉலகளாவிய சமூகத்தினால் எட்ட முடியாமல் போயிருக்கிறது. காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகள் மாநாட்டில் (COP) இலங்கையும் பங்கேற்றது. அங்கு நீண்ட நேரம் பேச்சுவார்த்தை நடந்தாலும் இறுதி உடன்பாடு எட்ட முடியவில்லை. அடுத்த இரண்டு சந்திப்புகளில் நாம் ஏதாவது ஒரு உடன்பாட்டுக்கு வர வேண்டும் அல்லது இதை கைவிட வேண்டும்.

காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச பல்கலைக்கழகத்தை நிறுவுவது தொடர்பில் பிராந்திய நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். அதற்குத் தேவையான சட்டங்களையும் இலங்கை கொண்டு வரும். கொத்மலை பகுதியிலிருந்து சுமார் 600 ஏக்கரை ஏற்கனவே ஒதுக்கியிருப்பதோடு, அடுத்த வருடம் கட்டுமானப் பணிகளையும் ஆரம்பிக்க உள்ளோம்".

இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்தார்.

சென்னை IIT Madras Research Park இன் தலைவர் பேராசிரியர் அஷோக் ஜுன்ஜுவாலா, இந்திய எரிசக்தி சுற்றாடல் மற்றும் நீர்ச்சபையின் தலைமை நிறைவேற்று அதிகாரி பேராசிரியர் அருணபா கோஷ், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி அசூசா குபோடா, கலாநிதி ரொஹான் பெதியாகொட, இலங்கை வணிகச் சபையின் தலைவர் துமிந்த ஹுலங்கமுவ, இலங்கை வணிக சபையின் காலநிலை அலுவல்கள் தொடர்பிலான செயற்பாட்டுக் குழுவின் தலைவரும் டில்மா வியாபார குழுமத்தின் தலைவருமான டில்ஹான் பெர்னாண்டோ, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ஆனந்த மலவதந்திரி ஆகியோர் உட்பட இராஜதந்திரிகள், வெளிநாட்டு அமைப்புக்களின் பிரதிநிதிகள், வர்த்தகர்கள் பலரும் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

**(ஜனாதிபதி ஊடகப் பிரிவு)**

---

வங்காள விரிகுடா சமுத்திர பிராந்தியம் தொடர்பான

# பாத்பைண்டர் கலந்துரையாடலின் நான்காவது தொடர் கொழும்பில்

வங்காள விரிகுடா சமுத்திர பிராந்தியத்தை அண்டிய நிர்வாகம், அதன் நெருக்கடி முகாமைத்துவம், நிலையான மீன்பிடி மற்றும் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான பிரச்சினைகள் பற்றி நிபுணர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் கலந்துரையாடும் பாத்பைண்டர் உரையாடல்களின் நான்காவது தொடர் அண்மையில் கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் நடைபெற்றது.

வங்காள விரிகுடாவைச் சுற்றியுள்ள நாடுகளைத் தவிர, சவுதி, ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா, சீனா, எகிப்து, ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், ரஷ்யா, துருக்கி மற்றும் கொரியா போன்ற நாடுகளின் தூதுவர்கள் மற்றும் அறிஞர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றனர். பாத்பைண்டர் அறக்கட்டளை ஏற்பாடு செய்த கலந்துரையாடலுக்கு சுவிட்சர்லாந்து மனிதநேய உரையாடல் மத்திய நிலையம் அனுசரணை வழங்கியது.

பாத்பைண்டர் அறக்கட்டளையின் ஸ்தாபகர் மிலிந்த மொரகொடவின் அழைப்பின் பேரில், இந்திய அறக்கட்டளையின் தலைவர் ராம் மாதவ் சிறப்புரை ஆற்றினார்.

BIMSTEC அமைப்பின் பொதுச் செயலாளர் இந்திரா மணி பாண்டே, ஆரம்ப அமர்வில் உரையாற்றினார்.




இந்த புகைப்படங்கள் தொடக்க விழாவில் கலந்து கொண்ட இராஜதந்திர தூதுக்குழுவின் தலைவர்கள் உட்பட பிரதிநிதிகள் மற்றும் முக்கிய பங்கேற்பாளர்களைக் காட்டுகின்றன.

# புத்தளம் ஆதார வைத்தியசாலை உட்புற சுவரில் வர்ண ஓவியங்கள்

## சித்திரப்பாட ஆலோசகர் கலாநிதி முஹம்மதுக்கு பாராட்டு

**புத்தளம் தினகரன் நிருபர்**

நோயாளர்களாக வருகை தரும் சிறார்களின் மகிழ்ச்சியினை கருத்தில் கொண்டு புத்தளம் ஆதார வைத்தியசாலையின் உட்புற சுவரில் அழகிய வர்ண ஓவியங்கள் வரைந்து வழங்கப்பட்டுள்ளன.



புத்தளம் ஆதார வைத்தியசாலையின் சிறுவர் வார்ட்டுக்கு பொறுப்பான டாக்டர் சுஜித் மற்றும் டாக்டர் சனூசியா ஆகியோரின் வேண்டுகோளுக்கிணங்கவே இந்த ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.சமூக ஆர்வலர் முஹம்மட் சாமிலின் முயற்சியினால் புத்தளம் வலய கல்வி பணிமனையின் சித்திரப்பாட ஆசிரிய ஆலோசகர் கலாநிதி எம்.எம்.முஹம்மது மற்றும் அவரது மாணவர் அஷ்ஷெய்க் முஹம்மது ஜப்ரீஸ் ஆகியோரது ஒத்துழைப் போடும் புத்தளம் நகர சபையின் முன்னாள் உறுப்பினர் ரனீஸ் பதியுதீனின் பங்குபற்றுதலோடும் இந்த ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.



அநுராதபுரம் கல்வி வலயத்திற்குட்பட்ட அசறிக்கம முஸ்லிம் வித்தியாலய விளையாட்டு மைதானத்தின் புனரமைப்புப் பணிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு அதிபர் ஏ.எம்.நியாஸ் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இதன் போது பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமான் மாணவர்கள் சகிதம் அடிக்கல் நட்டிவைத்த போது பிடித்த படம்.

(படம் : அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)





# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
உதவி அதிபர், கொ/ புனித அன்னம்மாள் மகளீர் மகாவித்தியாலயம், கொழும்பு 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

**I. பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.**

குரங்கு நல்ல குரங்கு - இது
குச்ச வெளிக் குரங்கு
மரங்கள் மீது தாவும் - பின்பும்
மண்ணின் மீது பாயும்

குட்டிக் கரணம் போடும் - பல
குழப்படிகளும் செய்யும்
கையைக் கையை நீட்டும் - நல்ல
கடலைப் பழமும் தின்னும்

பல்லைப் பல்லை இளிக்கும் - இது
பாலரைக் கண்டாற் சிரிக்கும்
காசு பணமும் கேட்கும் - நல்ல
காவடியும் ஆடும்.

வேடிக்கை பலவும் செய்யும் - பல
வித்தைகளும் காட்டும்
குரங்கு நல்ல குரங்கு - இது
குச்ச வெளிக் குரங்கு

01. பாடலில் வந்துள்ள பெயரடை மொழியை எழுதுக. ……………………………….

02. ‘குரங்கு’ என்ற சொல்லின் ஒத்த பதம்? …………………………………………...

03. ‘மரங்கள்’ என்பதன் ஒருமை …………………………………………………….

04. எதிர்கால வினைச்சொல் ……………………………………………………..…..

05. ‘சிரிக்கும்’ என்பதன் எதிர்ச்சொல்லை நிகழ்காலத்தில் தருக. ………………….…..

06. குரங்கின் இளையது? ………………………………………………………………

07. i. பின்வரும் வாக்கியத்தை இறந்தகால வாக்கியமாக மாற்றி எழுதுக.
விவசாயிகள் மண்வெட்டிகளை எடுத்துக் கொண்டு காலையில் வயலுக்குச் செல்கின்றனர்.

……………………………………………………………………………………

ii. பின்வரும் வாக்கியத்தைப் பன்மை வாக்கியமாக மாற்றி எழுதுக.
பிள்ளை புத்தகங்களை எடுத்துக் கொண்டு வீட்டுக்குச் செல்கின்றது.

…………………………………………………………………………………..…..

- **08 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்களின் வெற்றிடங்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள்ளிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

08. பிணைமான் முன்னே செல்ல கலைமான் அதனைப் பின் …………………………..
(தொடர்ந்தது / தொடர்ந்தன)

09. நான் ……………………….….. பாடலை எனது நண்பன் இனிமையாகப் பாடினான்
(இயற்றப்பட்ட / இயற்றிய)

10. பார்வையாளர் கூட்டம் மெல்ல மெல்லக் கலையத் ……..…………………….
(தொடங்கினர் / தொடங்கியது)

**II.**

11. தரப்பட்டுள்ள வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியங்கள் எழுதுக.
i. காய்ச்சலால் / அன்வர் / துன்பப்பட்டான் / கடுமையான

…………………………………………………………………………………..…

ii. அஞ்சல் / நிலையத்தினால் / வகையான / பல / நாம் / அடைகிறோம் / நன்மைகளை

…………………………………………………………………………………

12. பின்வரும் சொற்களைக் கொண்டு வினாக்களுக்கு விடை எழுதுக.

| | | | | |
|---|---|---|---|---|
| நூலகம் | தும்பு | நீ | கேத்தல் | பூக்கள் |
| ஆமை | மிளகாய் | மரங்கொத்தி | புறா | சிறந்தது |

i. விசிறியும் சுழியும் இடம்பெறும் சொல் எது? …………………………………….

ii. மடக்கேறும் அரவும் உள்ள சொல் எது? ……………………………………....

iii. கீழ்க்காலும் சுழியும் உள்ள சொல் எது? ……………………………………..….

iv. இரட்டைக்கொம்பு உள்ள சொல்லை எழுதுக. …………………………………

13. எழுவாய், பயனிலை, செயற்படுபொருளை தெரிந்து எழுதுக.
**நாய் முயலைத் துரத்திக் கொண்டு ஓடியது.**

i. எழுவாய் - ……………………….... ii. பயனிலை - ……………………..…..

iii. செயப்படுபொருள் - ……………………………

14. பின்வரும் சொற்களை சேர்த்தெழுதுக.

i. கொடை + ஆளி - …………………… ii. சுத்தம் + ஆளி - ……………...…

iii. அறிவு + இயல் - ……………….….. iv. புளி + காய் - ……………..…......

15. பின்வரும் பிராணிகளின் தொனிகளை எழுதுக.

i. அணில் - ……………………..……. ii. கரடி - …………………………....

iii. குதிரை - ……………………..... iv. நாய் - …………………………...

16. கீழே தரப்பட்டுள்ள அடைப்பிற்குள் இருந்து சொற்களைத் தெரிந்தெடுத்து வாக்கியங்களைப் பூர்த்தி செய்க.

**கணீர் கணீர் / மட மட / குடு குடு / கல கல / கம கம**

i. பாட்டி ……………………………..……… என்று நடந்தார்.

ii. ஆலய மணி ………………………………. என்று ஒலித்தது.

iii. எனது தங்கை ……………………...….. என்று சிரித்தாள்.

iv. அவன் இளநீரை ………………….……… என்று குடித்தான்.

17. எதிர்க் கருத்துச் சொற்களை இணைக்குக.

i. மாரி — அ) தோல்வி
ii. இலாபம் — ஆ) அழிவு
iii. வரவு — இ) மறுமை

18. பொருத்தமான இரட்டைக் கிளவியைத் தெரிவுசெய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

i. எனது கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலி ……………………. என மின்னியது
(பளபள / குளுகுளு / மளமள)

ii. நான் பொய் பேசியதால் அப்பா ………………….. எனப் பற்களைக் கடித்தார்.
(பரபர / நறநற / படபட)

19. படங்களுக்குப் பொருத்தமான சிங்கள பெயரை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.





i. ………………… ……….. ii. ………………………..

20. பின்வரும் ஆங்கில வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக.

i. Please sit down. …………………………………………………………...…..

ii. பின்வரும் வாக்கியத்தின் கருத்தினை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

இது என்னுடைய புத்தகம் - …………………………………………………….

**III.**

21. தரப்பட்டுள்ள எண்ணின் எண் பெயரை எழுதுக. 64311

…………………………………………………………………………………

22. 


வட்டத்திலுள்ள இலக்கங்களைப் பயன்படுத்தி அமைக்கக்கூடிய மிகப்பெரிய எண்ணை எழுதுக.

……………………………………………………………...

23. தரப்பட்டுள்ள உரோமன் எண்களிற்கு அடுத்துவரும் உரோமன் எண்களை எழுதுக.

i. iv - ……………………… ii. viii - …………………………..

24. தரப்பட்டுள்ள எண் கோலங்களில் அடுத்துவரும் எண்களை எழுதுக.

i.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 20 | 19 | 17 | 14 | ….. | ….. |

ii.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 2 | 5 | 4 | 10 | 6 | 15 | ….. | ….. |

25. 

தரப்பட்டுள்ள உருவினுள் எத்தனை செங்கோணங்கள் உள்ளன?

……………………………………………………………..…..

26. 

i. இவ்வுருவில் உள்ள சமச்சீர் அச்சுக்கள் எத்தனை? ……….
ii. இவ்வுருவைச் சமச்சீராகப் பிரிக்கக் கூடிய சமச்சீர் கோடுகளை வரைக.

27. ஒரு வியாபாரி முதலாம் நாள் 3281 மாம்பழங்களையும் இரண்டாம் நாள் 2460 மாம்பழங்களையும் விற்றார். இரு தினங்களிலும் விற்ற மொத்த மாம்பழங்களின் எண்ணிக்கை யாது?

28. ரவியிடம் ரூபா 856 உள்ளது. குமாரிடம் ரூபா 462 உள்ளது. ரவியிடம் உள்ள தொகைக்குச் சமமாவதற்கு குமார் மேலும் எவ்வளவு பணம் சேர்க்க வேண்டும்?

……………………………………………………………………………………..

29. பின்வரும் படத்தில் A குறிப்பது 1-20 வரையுள்ள 2இன் மடங்குகள், B குறிப்பது 3 இன் மடங்குகள், C குறிப்பது 4இன் மடங்குகள்




i. உருவில் நிழற்றப்பட்ட பகுதிக்குரிய எண் எது? ………………………….

**IV. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

30. இலங்கையில் ஒன்றுக்கொன்று மிகத் தூரத்தில் அமைந்துள்ள இரண்டு இடங்கள்,
i. யாழ்ப்பாணம் - கொழும்பு ii. தேவேந்திரமுனை – பருத்தித்துறை முனை
iii. அம்பாந்தோட்டை – நுவரெலியா

31. உடலில் பட்டவுடன் சொறிச்சல் ஏற்படும் தாவர இலை,
i. காஞ்சொறி ii. சாத்தாவாரி iii. கற்றாளை

32. மிக விரைவில் உக்குவது,
i. பிளாஸ்டிக் துண்டுகள் ii. பொலித்தீன் துண்டுகள் iii. பலகைத் துண்டுகள்

33. மின்சாரம் பயணிக்காதது,
i. இரும்புக் கம்பியின் ஊடாக ii. காய்ந்த பலகையின் ஊடாக
iii. அலுமினியம் கம்பியின் ஊடாக

34. பறக்க முடியாத பறவை,
i. கொக்கு ii. மீன்கொத்தி iii. தீக்கோழி

35. இந் நகரத்திற்கு அண்மையில் சுடுநீர் ஊற்றுக்கள் அமைந்துள்ளன. அந்நகரம்,
i. திருகோணமலை ii. நீர்கொழும்பு iii. புத்தளம்

36. வெந்தணலால் ஆன இரும்பொன்றை செம்மையாக்குவதற்கு பயன்படுத்தப்படுவது,
i. நாம்புவ ii. மணியாசு iii. பட்டடை

37. தனக்குத் தேவையான உணவை உறிஞ்சிக் குடிக்கும் பிராணி அல்லாதது,
i. உண்ணி ii. தேனீ iii. எறும்பு

38. இலங்கைக்கு உரித்தான தாவரம் அல்லாதது,
i. கோப்பி ii. பாலை iii. முதிரை

39. இலங்கையில் வெப்பநிலை குறைவான நகரம்,
i. அம்பாந்தோட்டை ii. நுவரெலியா iii. யாழ்ப்பாணம்

40. பாடசாலையில் இல்ல விளையாட்டுப் போட்டி வருடத்தில் எத்தனை முறை நடைபெறும்?
i. 2 ii. 3 iii. 1

41. பௌத்த சமயத்தின் புனித மரம்,
i. வேம்பு ii. பலா iii. வெள்ளரசு

(10ஆம் பக்கத் தொடர்)

# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

42. நிலக்கரி பயன்படுத்தப்படுவது
i. அனல் மின் உற்பத்திக்கு ii. மின் உற்பத்திக்கு
iii. கார் ஒன்றை இயக்குவதற்கு

43. பண்டைய காலத்தில் மன்னர்களால் முன்னெடுக்கப்பட்ட நீர்ப்பாசன திட்டங்களில் ஒன்று
i. குழாய்கள் அமைத்தல் ii. கிணறுகளை அமைத்தல்
iii. பாரிய குளங்களை அமைத்தல்

44. வீதியில் நடந்து செல்லும் போது செல்ல வேண்டிய பக்கம்
i. இடது ii. வலது iii. நடு

45. வீதி சமிக்ஞையில் சிவப்பு நிற மின்குமிழ் ஒளிர்ந்தால் சாரதி செய்ய வேண்டியது
i. செல்வதற்கு ஆயத்தமாதல் ii. பயணத்தை ஆரம்பித்தல்
iii. வாகனத்தை நிறுத்துதல்

46. அதிவேக பாதையை குறிக்கும் ஆங்கில எழுத்து
i. A ii. C iii. E

47. காலபோகம் என்பது
i. தேக்கிவைத்த நீரைப் பயன்படுத்தி விவசாயம் செய்வது
ii. மாரிகாலத்தில் பெய்யும் மழையை நம்பி விவசாயம் செய்வது
iii. வாய்க்கால் வழியாக நீரைப்பாய்ச்சி விவசாயம் செய்வது

48. இதன்மூலம் நடைபெறுவது
i. மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ளல்
ii. மின்காந்தம் ஒன்றை தயாரித்தல்
iii. சக்தியினைப் பெற்றுக் கொள்ளல்



49. தீயை அணைக்கப் பயன்படும் வாயுவானது
i. ஒட்சிசன் ii. காபனிரொக்சைட்டு iii. நைதரசன்

50. தேசப்படத்தில் நீல நிறத்தில் காட்டப்பட்டிருப்பது
i. பாதை ii. நதி iii. மலைகள்

51. பூச்சிகளை அழிப்பதற்கு பயன்படுத்தப்படும் திரவத்தை செய்வதற்குப் பயன்படுத்தப்படும் தாவரம்
i. பாக்கு ii. தோடை iii. வேப்பிலை

52. கடலை எல்லையாகக் கொண்ட மாவட்டம்
i. இரத்தினபுரி ii. புத்தளம் iii. கேகாலை

53. தொலைபேசி எண் ஒன்றில் உள்ள இலக்கங்களின் எண்ணிக்கை
i. 8 ii. 9 iii. 10

54. திரவ மருந்துகளை பயன்படுத்த வேண்டிய முறை
i. குலுக்காமல் வைத்திருந்து குடிக்க வேண்டும்.
ii. தினமும் குலுக்கிய பின்னர் குடிக்க வேண்டும்.
iii. குலுக்கிய பின்னர் ஓரிடத்தில் வைத்துவிட்டு குடிக்க வேண்டும்.

55. மின்சாரம் தாக்கினால் உடனே செய்ய வேண்டியது
i. பிரதான ஆழியை உடனடியாக அணைத்தல்
ii. தொட்டுத் தூக்குதல்
iii. மின் சோதிப்பானை பயன்படுத்தல்

56. உடற்தொழிற்பாட்டை அதிகரிப்பதற்கு ஈடுபடக்கூடிய விளையாட்டுக்கள்
i. சதுரங்கம் ii. பல்லாங்குழி iii. கெந்தி பிடித்தல்

57. சமையலுக்குப் பயன்படுத்தக் கூடிய காய்கறிகள் எவ்வாறு இருக்க வேண்டும்?
i. குளிர்சாதனப் பெட்டியில் வைத்திருக்க வேண்டும்.
ii. உடன் காய்கறிகளாக இருக்க வேண்டும்.
iii. நாட்பட்ட காய்கறிகளாக இருக்க வேண்டும்

58. பாடசாலைக்கு கிடைக்கப்பெறும் பண்டங்கள், உபகரணங்களைப் பதியும் பதிவேட்டின் பெயர்,
i. பாடப்பதிவு ii. வரவுப்பதிவு iii. பொருட்பதிவு

59. சாணைப்பிடித்து பயன்படுத்தப்படும் பொருள்
i. கத்தி ii. அரம் iii. திருகாணிச்செலுத்தி

60. “வாகன விபத்துக்களைத் தவிர்ப்போம்” தரப்பட்ட தலைப்பில் கருத்துள்ள 3 வாக்கியங்கள் எழுதுங்கள். ஒவ்வொரு வாக்கியமும் 5 சொற்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்புகள் சரியாகவும் எழுத்துப் பிழைகள் இல்லாதிருத்தல் வேண்டும்.

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

## கடந்த வார (03.05.2024) வினாத்தாள் I இற்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 11. | 1 | 21. | 3 | 31. | 2 |
| 02. | 2 | 12. | 2 | 22. | 3 | 32. | 2 |
| 03. | 3 | 13. | 3 | 23. | 1 | 33. | 2 |
| 04. | 2 | 14. | 1 | 24. | 3 | 34. | 2 |
| 05. | 1 | 15. | 2 | 25. | 2 | 35. | 1 |
| 06. | 2 | 16. | 1 | 26. | 3 | 36. | 3 |
| 07. | 2 | 17. | 3 | 27. | 1 | 37. | முகம் |
| 08. | 1 | 18. | 2 | 28. | 2 | 38. | 1 |
| 09. | 3 | 19. | 2 | 29. | 3 | 39. | 1 |
| 10. | 2 | 20. | 1 | 30. | 2 | 40. | 3 |

# ஜனாதிபதியின் வாக்குறுதியின்படி ஜூன் மாத சம்பளத்துடன் ரூ.1,700 வழங்கப்பட வேண்டும்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

உற்பத்தி ஊக்குவிப்பு என்ற பேரில் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பை மாற்றியமைக்க மலையக தோட்டக் கம்பனிகள் எடுத்துவரும் நடவடிக்கையை ஒரு போதும் அனுமதிக்க முடியாது என வடிவேல் சுரேஷ் எம்.பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்ட ரூ.1700 சம்பள அதிகரிப்பு எதிர்வரும் ஜூன் 10ஆம் திகதி சம்பளத்தில் வழங்கப்பட வேண்டும். எந்த விதத்திலும் சம்பள அதிகரிப்பை மாற்றியமைக்க ஒருபோதும் இடமளிக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற இராஜதந்திர சிறப்புரிமைச் சட்டத்தின் கீழ் கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு கடந்த 4 வருடங்களாக இடம்பெறாத நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதில் தலையிட்டு நாள் ஒன்றுக்கான சம்பளத்தை 1700 ரூபாவாக அதிகரிக்க நடவடிக்கை எடுத்து வர்த்தமானி மூலம் அறிவிப்பு செய்தார்.



அதன்படி 1350 ரூபா அடிப்படை சம்பளமாகவும் 350 ரூபா விசேட கொடுப்பனவாகவும் பறிக்கவேண்டிய கொழுந்துக்கு மேலதிகமாக பறிக்கும் ஒவ்வொரு கிலோவுக்கும் 80 ரூபா என்ற அடிப்படையில் அறிவிப்பு செய்யப்பட்டிருக்கிறது.

இந்த அறிவிப்பை ஜனாதிபதி பெருந்தோட்ட தொழிலாளர்களை நேரில் சந்தித்து மே தினத்தில் தெரிவித்தார்.

ஆனால் பெருந்தோட்டக் கம்பனிகள் 1700 ரூபா சம்பள அதிகரிப்பை மாற்றியமைத்து உற்பத்தி ஊக்குவிப்பு என்ற அடிப்படையில் வழங்குவதற்கு அரசாங்கத்துக்கு பரிந்துரை செய்துள்ளதாக ஊடகங்கள் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

தோட்ட கம்பனிகள் பெருந்தோட்டங்களை அபிவிருத்தி செய்து முறையாக உற்பத்தி ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தால், தோட்டக் காணிகள் காடாகி இருக்காது.

பெருந்தோட்டங்களில் அதிகமான காணிகள் இன்று தரிசு நிலங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. அத்துடன் பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டது முதல் அது இந்த நாட்டின் சட்டமாகும்.

அதன் படி ஜூன் மாதம் 10ஆம் திகதி பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்கும்போது 1700 ரூபா நாட் சம்பளமாக வழங்கப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்.

சம்பள அதிகரிப்பை நிறுத்துவதற்கு கம்பனிகள் தெரிவிக்கும் சாக்குப்போக்குகளை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது.

எனவே பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு அரசாங்கம் அறிவித்துள்ள 1700 ரூபா சம்பளத்தை எதிர்வரும் ஜூன் 10ஆம் திகதி வழங்கவேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.






வெலிமடை சில்மியாபுர, மெதபத்தன கிராம வீதியை புனரமைப்பதற்கு கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் ரூ.10 இலட்சம் நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார். இதற்கான அடிக்கல் நாட்டுவிழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.





தியத்தலாவை ஆதார வைத்தியசாலைக்கு ரூ.50 மில்லியன் பெறுமதியான அல்டா சவுன் ஸ்கேனர் அடங்கிய கட்டில்கள் மற்றும் மருத்துவ பொருட்கள் கையளிக்கும் நிகழ்வு நேற்று வைத்தியசாலை வளாகத்தில் நடைபெற்றது. இதன்போது எடுக்கப்பட்ட படத்தை இங்கு காணலாம். (படம்: ஹற்றன் சுழற்சி நிருபர்)





புவக்பிட்டிய சீ.சீ.டி.எம் பாடசாலையில் 1980 /1986, ஆண்டு காலப்பகுதியில் கல்வி கற்பித்த அதிபர்களான பி. கருப்பையா, சியமளாஹாசன் ஆசிரியர்களான கே.கே.சுந்தரலிங்கம், துரைரட்ணம், மூர்த்தி. ஜெயபிரகாஷம் ஆகியோரை கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வு 'சீ.சீ.டி.எம் 80 Kids' மாணவர்களின் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நிகழ்வை மாணவ சங்க செயலாளர் கலாதேவன் தொகுத்து வழங்கினார்.

# யுக்திய சுற்றிவளைப்பில் மாத்தளையில் ஒருவர் கைது

(மாத்தளை சுழற்சி நிருபர்)

மாத்தளை யடவத்த பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட யுக்திய விசேட சுற்றிவளைப்பின் போது போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து ஐஸ் போதைப் பொருள் மற்றும் கஞ்சா போன்றவற்றை பொலிஸார் மீட்டுள்ளனர்.

ஹலாவத்த பிரதேசத்தைச் சேர்ந்த சந்தேகநபர் தற்போது வாடகை வீடொன்றில் வசித்து வருவதாக விசாரணை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரை மாத்தளை மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். சம்பவம் தொடர்பில் யடவத்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# நிம்மதியான வாழ்வுக்கு இறைவன் காட்டும் வழி

வாழ்க்கை கவலைகளால் நிரம்பியுள்ளதா? உடனே அல்லாஹ்வை நினைவு கூருவதின் பக்கம் விரைந்து வாருங்கள். நிச்சயமாக அனைவருடைய உள்ளமும் நிம்மதி அடையும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

இன்றைய உலகில் பலர் தேடி அலையும் விஷயம் தான் மனநிம்மதி. இந்த நிம்மதிக்காக சிலர் பொருளாதாரத்திற்குப் பின்னால் ஓடுகிறார்கள். இன்னும் சிலர் அமைதியான இடத்திற்கு சென்றுவிட்டால் நிம்மதி இருக்கும் என்று அங்கு செல்கின்றார்கள். இன்னும் சிலரோ போதைக்கு அடிமையாகிறார்கள்.

இப்படி மனிதர்கள் எடுக்கும் முயற்சியில் அவர்களுக்கு மன நிம்மதி கிடைத்து விட்டதா என்றால் 'இல்லை' என்பதுதான் பதிலாக இருக்க முடியும். இதற்கான தீர்வை சர்வ வல்லமை படைத்த அல்லாஹ் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறான்.

'ஆணாயினும் பெண்ணாயினும் எவர் இறை நம்பிக்கை கொண்டவராய் இருக்கும் நிலையில் நற்செயல் புரிகின்றாரோ அவரை இவ்வுலகில் தூய வாழ்வு வாழச் செய்வோம்'. (அல் குர்ஆன் 16:97)

தூய வாழ்வு என்பது சலனங்களுக்கு உள்ளாகாத நிம்மதியான வாழ்வாகும். பிரச்சினைகள் வரும், சிக்கல்கள் எழும், ஆயினும் மனதில் நிம்மதியை மட்டும் ஒருபோதும் இழக்காத வாழ்வுதான் தூய வாழ்வாக இருக்கும்.

மனித வாழ்வில் நிம்மதி இல்லாமல் போவதற்கு இழப்புகள்தான் முக்கிய காரணமாக அமையும். இழப்புகளை சந்திக்கும்போது நிம்மதியையும் மனிதன் இழக்கிறான். அது எந்த இழப்பாக வேண்டுமானாலும் இருக்கலாம். பொருளாதார இழப்புகள், பிரியமானவர்களுடைய இழப்புகள், உடல் ஆரோக்கியத்தின் இழப்பு. இப்படி இழப்புக்களை சந்திக்கும்போது மனிதன் நிம்மதியையும் சேர்த்தே இழக்கிறான்.

இதுபோன்ற வேளைகளில் நிம்மதியை இழக்காமல் இருக்க இஸ்லாம் கூறும் வழிமுறை தான் இறைநம்பிக்கையை இறுக்கமாகப் பற்றிப் பிடிப்பதாகும். யாரிடம் உண்மையான, உறுதியான இறைநம்பிக்கை இருக்கிறதோ அவர் நிம்மதியை வெகு சீக்கிரம் இழப்பதில்லை.

இறைநம்பிக்கையின் அடித்தளம், எனக்கு பொருளாதாரத்தை தந்ததும் இறைவன்தான், எடுத்ததும் இறைவன்தான். பிரியமானவர்களை கொடுத்ததும் இறைவன்தான், எடுத்ததும் இறைவன்தான். ஆரோக்கியத்தை கொடுத்ததும் இறைவன்தான். எடுத்ததும் இறைவன்தான். என் வாழ்வில் ஏற்படும் அனைத்து இழப்புகளும் அல்லாஹ்வின் நாட்டப்படியே நடந்திருக்கின்றது என்று யார் உறுதியுடன் நம்புகின்றாரோ அவருடைய உள்ளம் நிம்மதி அடைந்ததாகவே இருக்கும்.

அநீதி இழைக்கப்படும் போது மனிதன் கவலைக்கு உள்ளாகிறான். மக்கள் நம்மை தவறாக விமர்சிக்கும் போதும், நம்மைப் பார்த்து கை கொட்டிச் சிரிக்கும்போதும், மறுமையை நம்பக்கூடிய ஓர் இறைநம்பிக்கையாளர் எப்படி இருக்க வேண்டும் என்றால், 'இந்த உலகில் எத்தனை வருடம் வாழ்வோம்? சராசரியாக 60 அல்லது 70 வருடம் தான். மண்ணறை வாழ்க்கை முடிந்த பிறகு மறுமையில் அல்லாஹ் என்னை எழுப்புவான். எழுப்பிய பிறகு, 'நான் நல்லவனா கெட்டவனா' என்று காண்பிப்பான். அங்கு எனக்கு நீதியை வழங்குவான்' என்று நம்ப வேண்டும். இந்த நம்பிக்கை நிம்மதியைப் பெற்றுத்தரும்.

ஒரு தடவை இறைத்தூதர் (ஸல்) அவர்கள், 'ஒருவர் தன் சகோதரனுக்கு அவனுடைய மானத்திலோ, வேறு (பணம், சொத்து போன்ற) விஷயத்திலோ, இழைத்த அநீதி (ஏதும் பரிகாரம் காணப்படாமல்)



இருக்குமாயின், அவர் அவனிடமிருந்து அதற்கு இன்றே மன்னிப்பும் பெறட்டும். பொற்காசுகளோ, வெள்ளிக் காசுகளோ பயன் தரும் வாய்ப்பில்லாத நிலை ஏற்படும் மறுமை நாள் வருவதற்கு முன்னால் மன்னிப்பு பெறட்டும். ஏனெனில் மறுமை நாளில் அவரிடம் நற்செயல் ஏதும் இருக்குமாயின் அவனுடைய அநீதியின் அளவுக்கு அவரிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டு (அநீதிக்குள்ளானவரின் கணக்கில் வரவு வைக்கப்பட்டு) விடும். அநீதி இழைத்தவரிடம் நற்செயல்கள் எதுவும் இல்லையென்றால் அவரின் தோழரின் (அநீதிக்குள்ளானவரின்) தீய செயல்கள் அவர் கணக்கிலிருந்து எடுக்கப்பட்டு அநீதி இழைத்தவரின் மீது சுமத்தப்பட்டு விடும். (ஆதாரம்: புகாரி)

இந்த நபிமொழியை ஒருவர் நன்றாக விளங்கி விட்டால் மனம் கண்டிப்பாக நிம்மதி அடையும். நமக்கு அநீதி இழைக்கக்கூடிய மக்களைப் பார்த்து ஒருவகையில் மகிழ்ச்சி அடைய வேண்டும். காரணம், நமக்காக அவரும் நன்மை செய்கின்றார். இந்த எண்ணத்தை வளர்த்தால் நிம்மதி வந்து சேரும்.நல்ல சிந்தனை நிம்மதியைப் பெற்றுத்தருவது போன்றே நற்செயல்களும் நிம்மதியைப் பெற்றுத் தருகிறது. நற்செயல்களில் மிகவும் மேலானது இறை நினைவுதான்.

அல்லாஹ்தஆலா அல் குர்ஆனில், 'அறிந்து கொள்ளுங்கள் அல்லாஹ்வை நினைவு கூர்வதால் தான் உள்ளங்கள் நிம்மதியடைகின்றன'. (13:28) என்று குறிப்பிட்டுள்ளான்.

வாழ்க்கை கவலைகளால் நிரம்பியுள்ளதா? உடனே அல்லாஹ்வை நினைவு கூருவதின் பக்கம் விரைந்து வாருங்கள். நிச்சயமாக அனைவருடைய உள்ளமும் நிம்மதி அடையும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

இறைத்தூதர் (ஸல்) கூறினார்கள், 'ஒருவர் தன் சகோதரனுக்கு அவனுடைய மானத்திலோ, வேறு (பணம், சொத்து போன்ற) விஷயத்திலோ, இழைத்த அநீதி (ஏதும் பரிகாரம் காணப்படாமல்) இருக்குமாயின், அவர் அவனிடமிருந்து அதற்கு இன்றே மன்னிப்பும் பெறட்டும். பொற்காசுகளோ, வெள்ளிக் காசுகளோ பயன் தரும் வாய்ப்பில்லாத நிலை ஏற்படும் மறுமை நாள் வருவதற்கு முன்னால் மன்னிப்பு பெறட்டும். ஏனெனில் மறுமை நாளில் அவரிடம் நற்செயல் ஏதும் இருக்குமாயின் அவனுடைய அநீதியின் அளவுக்கு அவரிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டு (அநீதிக்குள்ளானவரின் கணக்கில் வரவு வைக்கப்பட்டு) விடும். அநீதி இழைத்தவரிடம் நற்செயல்கள் எதுவும் இல்லையென்றால் அவரின் தோழரின் (அநீதிக்குள்ளானவரின்) தீய செயல்கள் அவர் கணக்கிலிருந்து எடுக்கப்பட்டு அநீதியிழைத்தவரின் மீது சுமத்தப்பட்டு விடும். (ஆதாரம்: புஹாரி)

இந்த நபிமொழியை ஒருவர் நன்றாக விளங்கிவிட்டால் மனம் கண்டிப்பாக நிம்மதி அடையும். நமக்கு அநீதி இழைக்கக்கூடிய மக்களைப் பார்த்து ஒருவகையில் மகிழ்ச்சி அடைய வேண்டும். நமக்காக அவரும் நன்மை செய்கின்றார். இந்த எண்ணத்தை வளர்த்தால் நிம்மதி வந்து சேரும்.

நல்ல சிந்தனை நிம்மதியைப் பெற்றுத்தருவது போன்றே நற்செயல்களும் நிம்மதியைப் பெற்றுத் தருகிறது. நற்செயல்களில் மிகவும் மேலானது இறை நினைவுதான். அல்லாஹ்வை நினைவு கூருவதின் மூலம் நிச்சயமாக அனைவருடைய உள்ளமும் நிம்மதி அடையும். ஒவ்வொருவரது எதிர்பார்ப்பும் அதுவேயாகும்.

அப்துர் ரஹ்மான்

# ஆன்மிக வாழ்வின் அடித்தளங்கள்



ஆன்மீக வாழ்வு என்றால் என்ன? ஆன்மீக வாழ்க்கை என்ற வார்த்தைக்கு அர்த்தம் என்ன? இத் தலைப்பை சிலர் ஏற்காதிருக்கக் கூடும்.

சிலர் இதனை அந்நியமான ஒன்று என நோக்கலாம். இஸ்லாம் மார்க்கம் முன்னர் அறிந்திராத ஒன்று இது, நமது அறிவுப் பொக்கிஷங்களில் நாம் இதனைக் காணவில்லை என சொல்லவும் முடியும்.

என்றாலும் இந்த இடத்தில் நாம் நீண்ட நேரம் சிந்திக்க தேவையில்லை. ஆன்மீக வாழ்க்கை என்பதன் கருத்தை வரையறுத்துக்கொள்ள நம்மால் முடியும். ஏனெனில் இஸ்லாமிய கருத்தில் அதில் வாதப் பிரதிவாதங்கள், கருத்து வேறுபாடுகள் இல்லை. அதற்கு சூட்டப்பட்டிருக்கும் பல்வேறு பெயர்களும் தெளிவாகும் போது பல்வேறு பெயர்கள் நம்மைக் குழப்பத்துக்கு உள்ளாக்கி விடாது.

நேரடியாக சொல்வதாயின் ஆன்மீக வாழ்க்கை என்பது பல சமூகங்களிலும் சொல்லப்படுகின்றவாறு இங்கு நாடப்படவில்லை. அதாவது இன்று மேற்குலகில் சொல்லப்படும் நவீன ஆன்மீகம் போன்றது. அதில் சில இன்று இஸ்லாமிய கீழைத்தேசங்களுக்கும் வந்துவிட்டது. அவர்கள் அந்த வழிமுறைதான் ஆன்மாவை சந்திக்கவும் அதனோடு உரையாடவும் உள்ள வழி என உறுதிகொண்டிருக்கிறார்கள். கலாநிதி முஹம்மத் ஹுஸைன் தனது நூலொன்றில் குறிப்பிடுகின்றவாறு, 'அவை சந்தேகமின்றி ஆக்கபூர்வமான அழைப்பு அல்ல. இதற்கும் இஸ்லாம் சொல்லும் ஆன்மீகத்துக்கும் எந்தவித தொடர்பும் இல்லாத விவகாரமாகும்.

ஆன்மீக வாழ்க்கை என்பதன் மூலம் நாம் நாடுவது சடவாத, உலகாயத வாழ்க்கைக்கு எதிர்க்கருத்தைத் தான்.

சடவாதம் இன்று உலகை ஆக்கிரமித்து இருக்கிறது. அதனைத் தேடுவதில்தான் மேற்குலக மக்கள் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். கிழக்குலகை அதன் ஆக்கிரமிப்பு இழுத்துப் போர்த்தி இருக்கிறது. மூளைகளையும் இதயங்களையும் அது வசியம் செய்திருக்கிறது. உடல்களையும் உறுப்புக்களையும் அது ஈர்த்துக் கொண்டிருக்கிறது.

சடவாத வாழ்க்கை, சடவாதத்தை அன்றி வேறெதனையும் கருத்தில் கொள்ளாது. அது இயற்கைக்குப் பின்னால் இருப்பவற்றை மறுக்கும். இந்த பிரபஞ்சத்தைப் படைத்த ஒரு இரட்சகன் இருக்கிறான் என்பதை மறுக்கும். அவன்தான் படைத்து சகலவற்றையும் தந்து நேர்வழிகாட்டினான் என்பதை மறுக்கும். அதனை அவனே பரிபாலிக்கிறான் என்பதை மறுக்கும்.

மேலும் ஏனைய விலங்கினங்களை விட்டும் மனிதனை வேறுபடுத்தும் ஆன்மா என்று ஒன்றிருப்பதை மறுத்து அவன் சற்று விருத்தியடைந்த விலங்கு என்று சொல்லும். அழிந்து போகும் இந்த வாழ்க்கைக்குப் பின்னால் இன்னொரு வாழ்க்கை இருப்பதை, அங்கே ஒவ்வோர் ஆத்மாவும் தாம் சம்பாதித்ததை இழந்திருப்பதை, தாம் விதைத்ததை அறுவடை செய்யவிருப்பதை, செய்த நற்காரியங்கள் எஞ்சியிருப்பதை மறுக்கும். நம்மைத் தவிர்த்து பிறரிடம் உள்ள சடவாத வாழ்க்கையின் அடிப்படைகள் இதுதான்.

இஸ்லாத்தில் ஆன்மீக வாழ்க்கை என்பது முக்கியமான அடித்தளங்கள் மீது கட்டியெழுப்பப்படுகின்றது. ஆன்மீக வாழ்க்கை அத்தகைய அடிப்படைகளில் கட்டியெழுப்பப்பட வேண்டும். அவை நம்பிக்கை கோட்பாடு சார்ந்த அகீதா அடிப்படைகள், அறிவு ரீதியான அடிப்படைகள், செயல் ரீதியான அடிப்படைகள், உள உணர்வு ரீதியான அடிப்படைகள் என நான்கு அடிப்படைகளின் மீது கட்டியெழுப்பப்படும். இதுதான் இஸ்லாத்தில் ஆன்மீக வாழ்க்கை. அந்த நான்கு அடிப்படைகளின் மீதும் அமையும் போது இஸ்லாம் காட்டும் ஆன்மீக வாழ்க்கை மனிதனை அதற்குரிய இயல்பூக்கத்தோடு பலப்படுத்தும்.

ஷெய்க் ஸியாப் (நளீமி)
வெலிகாமம்

# துன்பத்துக்கு உள்ளானவருக்கு ஆறுதல் கூறுவதன் சிறப்பு



ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், துன்பத்தில் சிக்குண்டவருக்கு ஆறுதல் கூறினால், துன்பப்பட்டவருக்குக் கிடைக்கும் நன்மையைப் போன்றே ஆறுதல் கூறுபவருக்கும் கிடைக்கும்' என்று கூறினார்கள்.

(ஆதாரம்: திர்மிதி).

இன்பமும் துன்பமும் நிறைந்தது தான் மனித வாழ்க்கை. இதுகுறித்து அல் குர்ஆன், 'நிச்சயமாக துன்பத்துடன் இன்பம் இருக்கிறது'. (94:5) என்று குறிப்பிட்டுள்ளது.

பொதுவாக வாழ்நாள் முழுவதும் எவரும் இன்பமாகவே வாழ்ந்தார் என்ற வரலாறு கிடையாது. அதே போன்று எவரும் ஆயுள் முழுவதும் துன்பமாகவே வாழ்ந்தார் என்றும் இல்லை. ஒரு புத்தகத்தைப் போன்றது தான் மனித வாழ்க்கை. ஒரு பக்கம் துன்பமும், மறுபக்கம் இன்பமும் நிறைந்ததாக இருக்கும். ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்று மனித வாழ்வும் இன்பமும் துன்பமும் கொண்டதாகவே விளங்குகிறது.

என்றாலும் மறுமை வாழ்வின் பின்னர் சுவர்க்கவாசிகள் சுவர்க்கத்தில் நுழைந்த பின்னர் பொது அறிவிப்பாளர் ஒருவர், 'இனி நீங்கள் இன்பத்துடன் தான் இருப்பீர்கள். ஒருபோதும் துன்பம் அடைய மாட்டீர்கள்' என்று அறிவிப்புச் செய்வார் என நபி (ஸல்) கூறினார்கள்'. (ஆதாரம்: புஹாரி)

துன்பம் என்பது ஒருவகை வலியினால் ஏற்படும் சோகமான ஒரு உணர்வலை. அது தோல்வியால் வரலாம். நஷ்டத்தால் ஏற்படலாம். விருப்பமானதை இழப்பதினால் கூட நடக்கலாம்.

துன்பத்தை சந்திக்கும் ஒருவர் சகஜமான நிலைக்கு அப்பாற்பட்டு யாரிடமும் பேசாமல் மௌனமாகி விடுவார். தனிமையை விரும்புவார். மனஅழுத்தம் ஏற்பட்டு இளைப்பாற ஒய்வெடுப்பார். அடக்கமுடியாமல் அழுவார். இவருக்கு அப்போது தேவை மன ஆறுதலான நான்கு வார்த்தைகள் தான்.

துன்பத்தில் ஆறுதல் கூறும் அழகிய வார்த்தை என்பது வலி நிவாரணி போன்றது. வலிகள் இருந்தாலும் இந்த வார்த்தையால் மூளை வலியை உணராமல் செய்து விடும். நீ துன்பத்தில் தவிக்கும்போது ஆறுதல் கூறுபவர் நீ விரும்பும் நபராக இருக்க மாட்டார். உன்னை விரும்பும் நபராக இருப்பார். துன்பத்தில் கூறப்படும் அழகிய ஆறுதல் வரிகள் உள்ளன.

'இறைவன் உமக்கு மகத்தான சன்மானம் வழங்கட்டுமாக...! அவன் அழகிய ஆறுதலை அளிக்கட்டுமாக...! மரணித்தவருக்கு மன்னிப்பை வழங்குவானாக...!' இவை அனைத்தும் நபி (ஸல்) அவர்கள் பயன்படுத்திய அழகிய ஆறுதல் வரிகளாகும்.

இறைவன் உமக்கு கருணை பொழியட்டும்...! துன்பத்திலிருந்து உம்மை விடுவிக்கட்டும்..! உமது துன்பத்தை அகற்றிவிடட்டும்..! என்பது போன்ற வார்த்தைகளையும் கூட ஆறுதல் வார்த்தைகளாகப் பயன்படுத்தலாம்.

நபித்தோழரான உஸாமா பின் ஸைத் (ரழி) அவர்கள், ஒரு தடவை நாங்கள் நபி (ஸல்) அவர்களுடன் இருந்தோம். அப்போது அவர்களுடைய புதல்வியரில் ஒருவருடைய (ஸைனப் (ரழி) அவர்களுடைய) தூதுவர் அங்கு வந்தார். ஸைனப் உடைய புதல்வர் இறக்கும் தருவாயில் இருப்பதாகச் சொல்லி, ஸைனப் அழைப்பதாகத் தெரிவித்தார். நபி (ஸல்) அவர்கள், 'நீ ஸைனபிடம் சென்று, 'அல்லாஹ் எடுத்துக் கொண்டதும் அவனுக்குரியதே..! அவன் கொடுத்ததும் அவனுக்குரியதுதான். ஒவ்வொன்றுக்கும் அவனிடம் ஒரு குறிப்பிட்ட தவணை உண்டு. ஆகவே, (அல்லாஹ்விடம் அதற்கான) நன்மையை எதிர்பார்த்து பொறுமையாக இருக்கச்சொல்..' என்று கூறி அனுப்பி வைத்தார்கள். (நூல்: புஹாரி)

மற்றொரு சந்தர்ப்பத்தில் நபி (ஸல்) அவர்கள், 'ஒரு இறைநம்பிக்கையாளர் துன்பத்தில் சிக்கிய தமது சகோதரருக்குப் பொறுமையும், ஆறுதலும் கூறி அவரைத் தேற்றினால், அவருக்கு மறுமைநாளில் இறைவன் சங்கை எனும் ஆடையை அணிவிப்பான்' எனக் கூறியுள்ளார்கள்'. (ஆதாரம்: இப்னு மாஜா)

துன்பத்தில் சிக்குண்டவரை சாதி, மத, இன, நிற, மொழி, தேசியம் பாராமல் அவருக்கு ஆறுதல் கூறுவது நபியின் வழிமுறையாகும். நபி (ஸல்) அவர்கள், நோய்வாய்ப்பட்டு மரண தருவாயில் இருக்கும் ஒரு யூத சிறுவனின் வீட்டுக்கே சென்று ஆறுதல் கூறி விட்டு வந்த நிகழ்வு நெகிழ்ச்சியைத் தருகிறது.ஆகவே துன்பத்தில் உள்ளவர்களுக்கு இஸ்லாமிய வழிகாட்டல்களுக்கு அமைய அழகிய வார்த்தைகளால் ஆறுதல் கூறுவோம்.

அப்துல்லாஹ்

# வீண்விரயத்தை தவிர்ப்போம்!

இஸ்லாம் இம்மைக்கும் மறுமைக்கும் வழிகாட்டும் மார்க்கம். அதன் போதனைகள் மனதுக்கு இதமானவை. அதனை நடைமுறைப்படுத்துவது இலகுவானது. அத்தோடு நற்பண்புகளைப் போதிக்கும் மார்க்கமும் கூட. அது எம்மில் தோற்றுவிக்க விரும்பும் நற்பண்புகளில் சிக்கனமும் சேமிப்பும் முக்கியமானவை.

சிக்கனம் என்றால் உள்ளதைக் கொண்டு தேவையை கச்சிதமாக நிவர்த்தி செய்து கொள்வதைக் குறிக்கும். அதாவது, உலோபித்தனத்துக்கும் வீண் விரயத்துக்கும் இடைப்பட்ட நிலையே சிக்கனம். அளவுக்கு அதிகமாக செலவு செய்வதைத் தவிர்ந்து கொள்ளல் வேண்டும். நடுநிலையாக செலவு செய்வதை நல்லடியார்களின் பண்புகளில் ஒன்றாக அல் குர்ஆன் சுட்டிக்காட்டுகிறது.

'மேலும் அவர்கள் செலவு செய்யும் போது வீண்விரயமும் கஞ்சத்தனமும் செய்வதில்லை. மாறாக, அவர்களுடைய செலவுகள் இந்த மித மிஞ்சிய இரு நிலைகளுக்கிடையில் மிதமானதாக இருக்கும்.' (அல் குர்ஆன் 25:67)

வீண் விரயம் செய்யாமல் சிக்கனமாக பயன்படுத்திய பின் மீதமானவற்றைப் பாதுகாப்பதை சேமிப்பு என்பது குறிக்கும்.

சேமிப்பதன் ஊடாக இக்கட்டான சந்தர்பங்களில் அவை நமக்கு உதவியாக இருக்கும். இது ஒரு சிறந்த பண்பு ஆகும். இதனை அல்லாஹ் மனிதர்களில் மட்டுமன்றி சில படைப்பினங்களிலும் ஏற்படுத்தியுள்ளான். உதாரணமாக எறும்புகள் தமக்குத் தேவையான உணவை மாத்திரம் சாப்பிட்டு விட்டு மீதி உணவைப் பத்திரமாகக் களஞ்சியப்படுத்துகின்றன. இதன் மூலம் மழை காலத்தில் உணவுத் தேவையை நிறைவுசெய்து கொள்கின்றன. தேனீக்கள் தேனைச் சேமிக்கின்றன. இவை தேனீக்களுக்கு மட்டுமன்றி மனிதர்களுக்கும் பயன்படுகின்றன.

இவ்வாறான முன்மாதிரியான பண்புகளை நபி (ஸல்) அவர்களது வாழ்விலும் எம்மால் கண்டு கொள்ள முடியும். அவர்கள் எப்போதும் சிக்கனத்தையும் எளிமையையும் விரும்பியுள்ளார்கள். அவர்களின் வாழ்வின் பல்வேறு சந்தரப்பங்களிலும் இதனைக் காணலாம். அன்னார் ஈச்சை ஓலைப் பாயில் உறங்கக்கூடியவராக இருந்தார்கள். அவர்களது விலாப்புறங்களில் அதன் அடையாளங்களைக் காணக்கூடியதாக இருக்கும்.

இதனைக் கண்ணுற்ற நபித்தோழர்கள் 'உங்களுக்கு பஞ்சனை மெத்தை ஒன்றைத் தயார் செய்து தரட்டுமா?' என்று வினவினார்கள். அதனை ஏற்க மறுத்த நபி (ஸல்) அவர்கள், பிரயாணி ஒருவன் மரநிழலில் தங்கி விட்டுச் செல்வது போன்றே நானும் இவ்வுலகை விட்டும் பிரிந்து செல்ல விரும்புகிறேன்.' என்று கூறினார்கள். (ஆதாரம்: முஸ்லிம்)

மேலும் யூஸுப் (அலை) அவர்கள், எகிப்து நாட்டில் மிகப் பெரும் வரட்சி ஏற்படப் போகின்றது என்பதை அல்லாஹ்வின் உத



வியினால் முன்கூட்டியே அறிந்து கொண்டதோடு, நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட தானியங்களில் ஒரு பகுதியைத் தொடராக ஏழு வருடங்கள் சேமித்து வைக்கவும் செய்தார். இவ்வாறு திட்டமிட்டு சேமித்த தானியங்களை அன்னார் வரட்சிக் காலத்தில் மக்களுக்கு விநியோகித்து உதவினார்கள். இதனால் அக் காலத்தில் நாட்டில் ஏற்பட இருந்த வறுமை, பஞ்சம் என்பன இல்லாமற் போயின. இது சிக்கனத்துக்கும் சேமிப்பிற்குமான அழகிய முன் மாதிரியாகவும் வெற்றிகரமான திட்டமாகவும் அமைந்தது.

இன்றைய காலகட்டத்தில் எமது வாழ்வில் பெரும் பாக்கியங்களாக கிடைக்கப்பெற்றுள்ள நேரம், பணம், நீர், மின்சாரம், பொதுச் சொத்துக்கள், எனப் பலதும் வீண் விரயத்திற்கு உட்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது. வீண் விரயம் செய்வது சைத்தானின் குணம் மாத்திரமல்லாமல் அல்லாஹ் கண்டித்துள்ள செயற்பாடும் ஆகும். இது தொடர்பில் நாம் மறுமையில் விசாரிக்கப்படுவோம். நபி (ஸல்) அவர்கள் வுழு செய்யும் போது கூட நீர் வீண் விரயம் செய்யப்படுவதைத் தடுத்துள்ளார்கள்.

ஒரு தடவை ஸஃத் (ரழி) அவர்கள் வுழு செய்து கொண்டிருந்த போது அவரைக் கடந்து சென்ற நபி (ஸல்) அவர்கள், ஸஃதைப் பார்த்து 'ஏன் இவ்வாறு வீண் விரயம் செய்கிறீர்?' எனக் கேட்டார்கள். வுழுவிலும் வீண் விரயம் இருக்கிறதா நபியவர்களே?' என்று அவர் கேட்க, 'ஆம்' என்று கூறிவிட்டு 'ஓடும் நதியில் நீர் வுழு செய்தாலும் வீண் விரயம் செய்யக் கூடாது' என்றார்கள். (ஆதாரம்: அஹ்மத், இப்னு மாஜா)

இச் சம்பவம் ஒரு துளி நீர் கூட வீண் விரயமாகக் கூடாது என்பதை எடுத்தியம்புகிறது. எனவே எமது வீடுகள், பாடசாலைகள், மஸ்ஜிதுகள் முதலான இடங்களில் நீர், மின்சாரம், உணவு போன்ற விடயங்களில் வீண் விரயங்களை தவிர்க்க முயற்சிப்பது அவசியம்.

ஒளிரும் மின்விளக்கு, மின் விசிறிகளை அணைத்தல், நீர் ஒழுகிக் கொண்டிருக்கும் நீர்க் குழாய்களை இறுக்கமாக மூடிவிடுதல், நீரைப் பாத்திரத்தில் எடுத்துக் குடித்தல், தேவையான அளவு உணவை மாத்திரம் பாத்திரத்தில் இடல் முதலானவற்றின் மூலம் வீண் விரயத்தை தடுத்துக் கொள்ள முடியும்.

அதே போன்று வீண் விளையாட்டுக்களிலும், கேளிக்கைகளிலும் நேரத்தைக் கழித்தல், பொருத்தமற்ற வழிமுறைகளில் பணத்தைச் செலவழித்தல், அளவுக்கதிகம் சாப்பிடல், தேவைக்கதிகமாக ஆடை அணிகலன்களை கொள்வனவு செய்தல் முதலானவற்றையும் வீண்விரயத்துக்கு உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

'நிச்சயமாக அல்லாஹ்தஆலா வீண்விரயம் செய்வோரை நேசிப்பதில்லை' (அல் குர்ஆன்)

மேற்படி பண்புகளை வளர்ப்பதின் ஊடாக இம்மையிலும், மறுமையிலும் நன்மைகளை பெற்றுக் கொள்ளலாம். சிக்கனம், சேமிப்பு மற்றும் வீண் விரயத்தை தவிர்த்தல் ஆகிய பண்புகள் எமது வாழ்வில் சரியான முறையில் கடைபிடிக்கப்படும் போது கடன் பிரச்சினைகள், பொருளாதார நெருக்கடிகள், மற்றவர்களிடம் தங்கியிருந்தல் போன்ற நிலைமைகளில் இருந்து எம்மை பாதுகாத்துக் கொள்ளலாம் அது மனநிறைவான வாழ்வுக்கும் வழிவகுக்கும்.

மௌலவி
எம்.யூ.எம். வாலிஹ்
(பாரி, அல்அஸ்ஹரி)

# அம்பாறையில் முதலைகளின் நடமாட்டம் அதிகரிப்பு

அம்பாறை மாவட்டத்தில் சிறுபோக வேளாண்மை செய்கை ஆரம்பமாகியுள்ள நிலையில் அதிகளவிலான முதலைகள் வெளியேறி மக்கள் குடியிருப்புகளுக்குள் செல்வதாக அம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

மாவடிப்பள்ளி பாலம் சம்மாந்துறை பகுதி, ஒலுவில் பகுதி, நிந்தவூர், மருதமுனை, பெரியநீலாவணை, நற்பிட்டிமுனை, பாண்டிருப்பு, கிட்டங்கி, நாவிதன்வெளி உள்ளிட்ட பகுதிகளை அண்மித்த ஆறுகளை விட்டு இரவிலும் பகலிலும் முதலைகள் வெளியேறுவதனால் வீதியால் செல்லும் பயணிகள் மற்றும் பாதசாரிகள் அச்சத்துடனேயே பயணத்தை மேற்கொள்வதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக இரவு நேரங்களில் அதிகமான சுமார் 9, 5, 4 அடி நீளமுடைய முதலைகள் வெளியேறுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இம்மாவட்டத்திலுள்ள களப்புகள் போன்ற இடங்களிலும் முதலை அச்சுறுத்தல் தொடர்ந்து வருகின்றன.

மேற்படி பகுதிகளிலுள்ள வாவிகள், குளங்களிலும் முதலைகளின் பெருக்கம் அதிகரித்து காணப்படுகிறது.

மேலும் தற்போது சிறுபோக வேளாண்மை செய்கை ஆரம்பமாகி உள்ளதனால் வயல் நிலங்கள், கால்வாய்களை அண்டிய பகுதியில் நீருக்காக குளங்களை நாடிச் செல்லும் ஆடு, மாடுகள் உள்ளிட்ட கால்நடைகள் முதலைகளின் இரைக்குள்ளவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

# 'நினைவுகளில் உஸ்தாத் முனீர்' நூல் வெளியீடு





புத்தளம் இஸ்லாஹிய்யா மகளிர் கல்லூரியின் முன்னாள் அதிபர் மர்ஹூம் அஷ்ஷெய்க் எம்.எச்.எச்.எம்.முனிரது நினைவுகளை சுமந்து வரும் 'நினைவுகளில் உஸ்தாத் முனீர்' என்ற நூல் வெளியீட்டு விழா அண்மையில் புத்தளம் இஸ்லாஹிய்யா மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

இஸ்லாஹிய்யா மகளிர் கல்லூரி, கல்வி மேம்பாட்டுக்கும் சீர்திருத்தத்துக்குமான புத்தளம் கல்வியியலாளர்களின் மன்றம் (PILLARS) மற்றும் உஸ்தாத் முனீரது நண்பர்கள் வட்டம் ஆகியன இணைந்து இந்த நூலை வெளியிட்டிருந்தன.

இந்நிகழ்வில் எழுத்தாளரும் ஆய்வாளருமான சிறாஜ் மசூர், புத்தளம் கல்விப் பணிமனையின் ஆங்கில பாட ஆசிரிய ஆலோசகர் ஏ.என்.எம்.எப். ரிஸ்கியா ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

# மூதூரில் கிராமிய சுகாதார நிலையம்

**தம்பலகாமம் குறூப் நிருபர்**

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பெரியபாலம் பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கிராமிய சுகாதார நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதற்கான நிகழ்வு நேற்று வியாழக்கிழமை (09) நடைபெற்றதுடன், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் இதில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு இப்புதிய கட்டடத்தை திறந்து வைத்துள்ளார்.

மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஹில்மி முகைதீன் பாவா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பலர் கலந்துகொண்டு சிறப்பித்துள்ளனர்.

# கசிப்புடன் கைதான நபருக்கு அபராதம்

**தோப்பூர் குறூப் நிருபர்**

இருபதாயிரம் மில்லிலீற்றர் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஒருவருக்கு மூதூர் நீதவான் நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை அபராதம் விதித்துள்ளது.

திருகோணமலையின் சம்பூர் பிரதேசத்தைச் சேர்ந்த இந்த சந்தேக நபர் கசிப்புடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதை தொடர்ந்து, இந்த அபராதத் தொகை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஒரு இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபாவை அபராதமாக செலுத்துமாறும் அந்நபருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

# தரம் –05 புலமைப்பரிசில் பரீட்சை ; அடைவு மட்டத்தை அதிகரிக்க ஏற்பாடு

**துறைநீலாவணை நிருபர்**

கல்முனை கல்வி வலயத்தில் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையின் அடைவு மட்டத்தினை அதிகரிக்கும் நோக்குடன் நடத்தப்பட்ட வலய மட்டத்திலான பரீட்சை தொடர்பாக ஆராயும் மீளாய்வு கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் தலைமையில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

இதில் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் சுஜாதா குலேந்திரகுமார் கலந்துகொண்டு தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பான அடைவு மட்டத்தினை அதிகரிப்பதற்கு கிழக்கு மாகாண மட்டத்தில் எதிர்காலத்தில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாகவும் இவ்விடயம் தொடர்பாக அதிபர்கள், ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் தொடர்பாகவும் விளக்கிக் கூறினார்.

SRI LANKA TOURISM DEVELOPMENT AUTHORITY

/sltda.gov.lk/ www.sltda.gov.lk




இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை (SLTDA) என்பது சுற்றுலா மற்றும் அது சார்ந்த தொழில்களின் திட்டமிடல், அபிவிருத்தி, ஒழுங்குபடுத்துதல் மற்றும் கொள்கை அமுலாக்கம் ஆகியவற்றுடன் பணிபுரியும் அரசாங்க நிறுவனமாகும்.

சுற்றுலாத் துறையானது தேசிய அளவில் முக்கியமான பங்களிப்புச் செய்யும் துறையாக அடையாளம் காணப்பட்டுள்ளது. எதிர்காலத்தின் பொருளாதாரத்திற்கு இந்தத் துறையானது மிக உயர்ந்த வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மற்றும் உயர் முதலீட்டாளர் திட்டங்களை நாட்டிற்குள் ஈர்க்கிறது

## உதவிப் பணிப்பாளர் / வளாக முகாமைத்துவம்

SLTDA வளாகத்தின் பராமரிப்பு மற்றும் செயல்பாடுகளை மேற்பார்வையிடுவதற்கும், நிறுவன தரநிலைகள் மற்றும் இணக்கத் தேவைகளைப் பூர்த்தி செய்வதை உறுதி செய்வதற்கும் பதவியை வகிப்பவர் பொறுப்பானவர். இந்த பாத்திரம் வளங்களை நிர்வகித்தல், தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைத்தல் மற்றும் வளாக முகாமைத்துவம் தொடர்பான ஏதேனும் சிக்கல்களை திறம்பட நிவர்த்தி செய்வதை உள்ளடக்கியது. SLTDA வசதிகளின் பயன்பாடு மற்றும் செயல்பாட்டை மேம்படுத்துவதற்கான உத்திகளை உருவாக்கி செயல்படுத்துவதில் உதவிப் பணிப்பாளர் முக்கிய பங்கு வகிக்கிறார்.

**பணி**

- SLTDA வளாகத்தின் முகாமைத்துவம் மற்றும் பராமரிப்பை மேற்பார்வையிடுதல்.
- வசதிகள் நன்கு பராமரிக்கப்படுவதையும் நிறுவனத் தரங்களைப் பூர்த்தி செய்வதையும் உறுதிசெய்ய சம்பந்தப்பட்ட துறைகளுடன் ஒருங்கிணைப்பை மேற்கொள்ளல்.
- திறமையான வளாக முகாமைத்துவத்திற்கான உத்திகளை உருவாக்கி செயல்படுத்துதல்.
- வளாக பராமரிப்பு மற்றும் செயல்பாடுகளில் ஈடுபட்டுள்ள பணியாளர்களை மேற்பார்வையிடுதல்.
- சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் என்பன விதிமுறைகளுக்கு இணங்குவதை உறுதிசெய்தல்.
- வளாக முகாமைத்துவ நடவடிக்கைகள் தொடர்பான வரவுசெலவுத் திட்டம் மற்றும் வளங்களை தீர்மானித்து முகாமைத்துவம் செய்தல்.
- பராமரிப்பு மற்றும் திருத்தவேலை பணிகளுக்கு தேவையான வெளிப்புற விற்பனையாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களுடன் ஒத்துழைத்தல்.
- வசதிகளின் நிலைகளை மதிப்பிடுவதற்கும், மேம்படுத்துவதற்கான பிரதேசங்களை கண்டறிவதற்கும் வழக்கமான கண்காணிப்புகளை மேற்கொள்ளுதல்.
- வளாக முகாமைத்துவம் தொடர்பான ஏதேனும் பிரச்சினைகள் அல்லது கவனிப்புகளை உடனடியாகவும் திறம்படவும் தெரிவித்தல்.
- வளாக முகாமைத்துவ நடவடிக்கைகள் மற்றும் செயல்திறன் குறித்து சிரேஷ்ட முகாமைத்துவ அறிக்கைகள் மற்றும் புதுப்பிப்புகளைத் தயாரித்தல்.

**நபர்**

அபேட்சகர் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் துறையில் ஒரு இளமாணிப் பட்டம் **அல்லது**

தொடர்புடைய விடயப்பரப்பில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் தொழில்நுட்பம் மற்றும் தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறனில் (NVQ) 07ஆம் நிலைக்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண்டும். **அத்துடன்**

தொடர்புடைய விடயப்பரப்பில் குறைந்தபட்சம் 01 வருடகால தகைமைக்குப் பின்னரான அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளில் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும் அல்லது தொடர்புடைய பதவிக்கான துறையில் கனிஷ்ட முகாமையாளர் (JM 1-2) சேவை வகுதியில் IIஆம் தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 05 வருட கால திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**முக்கியமான திறன்கள் மற்றும் அனுபவம்**

இதனையொத்த பாத்திரத்தில் குறைந்தபட்சம் மூன்று வருட கால அனுபவம் மேலதிக அனுகூலமாகும்.
உள்வாரி அணிகள் / வெளிவாரி தரப்பினரை நிர்வகிப்பதில் முன் அனுபவம்
சிறந்த தகவல் தொடர்பாடல் திறனைக் கொண்ட Team player ஆக இருத்தல் வேண்டும். (வாய்மொழி மற்றும் எழுத்து)
சிறந்த பகுப்பாய்வுத் திறன், சிக்கல்களைத் தீர்க்கும் திறன் மற்றும் Out-of-the-box சிந்தனையாளர்

**வயது** 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்.

**சம்பள அளவு** ரூபா 54,550.00 - 10 x 1,375 – 15 x 1,910 - ரூபா 96,950.00 (MM 1-2)

**ஆரம்ப நிலை** ரூபா 54,550.00 + வாழ்க்கைச் செலவுப் படி + மாதாந்த கொடுப்பனவு

அனுகூலங்கள்

- ஊழியர் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு விரிவான மற்றும் கவர்ச்சிகரமான மருத்துவக் காப்புறுதித் திட்டம்
- கடன் வசதிகள்
- தொழில் மேம்பாட்டிற்கான பயிற்சி (உள்நாடு மற்றும் வெளிநாடு)
- போக்குவரத்து கொடுப்பனவுகள்
- தொலைபேசிக் கொடுப்பனவுகள்
- தொழில்சார் கொடுப்பனவுகள்

## உதவிப் பணிப்பாளர் / பெறுகை

நிறுவப்பட்ட வழிகாட்டுதல்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்குவதை உறுதிசெய்து, பயனுள்ள பெறுகை உத்திகளை மேற்பார்வையிடுவதற்கும் செயல்படுத்துவதற்கும் பதவியை வைத்திருப்பவர் பொறுப்பாளராவார். இந்த பாத்திரம் பெறுகை செயல்முறைகளை நிர்வகித்தல், விற்பனையாளர் உறவுகள் மற்றும் செலவு-செயல்திறனை மேம்படுத்துதல் மற்றும் தரம் மற்றும் ஒருமைப்பாட்டின் உயர் தரத்தை பராமரித்தல்.

**பணி**

- வருடாந்த பெறுகைத் திட்டத்தை சரியான நேரத்தில் தயாரித்து சபைக்குச் சமர்ப்பித்தல்.
- வருடாந்தம் வழங்குநர்களைப் பதிவு செய்தல்.
- சிரேஷ்ட முகாமைத்துவம், அமைச்சு மற்றும் பிற வெளி நிறுவனங்களுடன் பெறுகை நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.
- கேள்வி அழைப்பு தொடர்பான அனைத்து ஆவணங்களையும் தயாரித்தல்.
- ஒவ்வொரு பெறுகை செயல்முறைக்கும் தேவையான அனைத்து ஆவணங்களையும் தயார் செய்து, ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியான கோப்புகளை பராமரித்தல்.
- அனைத்து பெறுகை நடவடிக்கைகள் தொடர்பான பொது பெறுகை வழிகாட்டல்கள் மற்றும் நிதி விதிமுறைகள் பற்றிய விரிவான புரிதலைக் கொண்டிருத்தல்.
- சிரேஷ்ட முகாமைத்துவம், அமைச்சு மற்றும் திறைசேரிக்கு தேவைப்படும்போது அறிக்கைகளை வழங்குதல்.
- அதிகாரசபைக்குள் பெறுகை நடவடிக்கைகளில் பணியாளர்களுக்கு வழிகாட்டுதல்.

**நபர்**

அபேட்சகர் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல் / வியாபார முகாமைத்துவம் /வியாபார நிர்வாகம் / வர்த்தகத் துறையில் ஒரு இளமாணிப் பட்டம் **அல்லது**

தொடர்புடைய விடயப்பரப்பில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் தொழில்நுட்பம் மற்றும் தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறனில் (NVQ) 07ஆம் நிலைக்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண்டும். **அத்துடன்**

தொடர்புடைய விடயப்பரப்பில் குறைந்தபட்சம் 01 வருடகால தகைமைக்குப் பின்னரான அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**முக்கியமான திறன்கள் மற்றும் அனுபவம்**

பெறுகை விடயங்கள் தொடர்பான டிப்ளோமா அல்லது சான்றிதழ் கற்கை நெறியைப் பின்பற்றியிருத்தல் மேலதிகத் தகைமையாகக் கவனத்திற் கொள்ளப்படும்.

இதனையொத்த பாத்திரத்தில் குறைந்தபட்சம் மூன்று வருட கால அனுபவம் மேலதிக அனுகூலமாகும்.

உள்வாரி அணிகள் / வெளிவாரி தரப்பினரை நிர்வகிப்பதில் முன் அனுபவம்

சிறந்த தகவல் தொடர்பாடல் திறனைக் கொண்ட Team player ஆக இருத்தல் வேண்டும். (வாய்மொழி மற்றும் எழுத்து)

சிறந்த பகுப்பாய்வுத் திறன், சிக்கல்களைத் தீர்க்கும் திறன் மற்றும் Out-of-the-box சிந்தனையாளர்

**வயது** 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்.

**சம்பள அளவு** ரூபா 54,550.00 - 10 x 1,375 – 15 x 1,910 - ரூபா 96,950.00 (MM 1-2)

**ஆரம்ப நிலை** ரூபா 54,550.00 + வாழ்க்கைச் செலவுப் படி + மாதாந்த கொடுப்பனவு

**அனுகூலங்கள்**

- ஊழியர் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு விரிவான மற்றும் கவர்ச்சிகரமான மருத்துவக் காப்புறுதித் திட்டம்
- கடன் வசதிகள்
- தொழில் மேம்பாட்டிற்கான பயிற்சி (உள்நாடு மற்றும் வெளிநாடு)
- போக்குவரத்து கொடுப்பனவுகள்
- தொலைபேசிக் கொடுப்பனவுகள்
- தொழில்சார் கொடுப்பனவுகள்

## கனிஷ்ட முகாமையாளர் / கணக்கியல்

SLTDA இல் உள்ள கனிஷ்ட நிதி முகாமையாளர், நிதிச் செயல்பாடுகளை ஆதரித்தல் மற்றும் நிறுவனத்தின் ஒட்டுமொத்த நிதி நிர்வாகத்தில் பங்களித்தல். பொறுப்பு கூறும் வகையில் வரவு செலவுத் திட்டத்தில் உதவுதல், நிதி பகுப்பாய்வு மற்றும் கணக்கியல் தரநிலைகளுடன் இணங்குவதை உறுதி செய்தல் ஆகியவை அடங்கும். கனிஷ்ட நிதி முகாமையாளர் நிதிக் குழுவுடன் இணைந்து துல்லியமான நிதிப் பதிவுகளைப் பராமரித்தல் மற்றும் மூலோபாய நிதி முடிவெடுப்பதில் சிரேஷ்ட முகாமைத்துவத்தை ஆதரித்தல்.

**பணி**

- பணம் செலுத்தும் வவுச்சர்கள், Petty cash செலுத்துதல் மற்றும் முற்பணம் செலுத்தும் வவுச்சர்களை சரிபார்த்தல்.
- ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் மற்றும் தலைமை அலுவலக பொது களஞ்சியசாலை தொடர்பான கணக்கியல் அறிக்கை செயல்முறையை மேற்கொள்ளல்.
| **2023.04.01 இல் இருந்து 2023.12.31 வரையான மொத்த முழுமையான வருமானம்** | | | | | |
| காலப்பகுதிக்கான இலாபம் | - | - | - | 333,554 | 333,554 |
| ஏனைய விபரமான வருமானம்/(நட்டம்), தேறிய வரி | - | - | 1,122,999 | 3,152 | 1,126,151 |
| **காலப்பகுதிக்கான மொத்த விபரமான வருமானம்** | - | - | 1,122,999 | 336,706 | 1,459,705 |
| **வங்கி உரிமையாளர்களுடனான பரிவர்த்தனைகள் பங்களிப்புகள் மற்றும் விநியோகங்கள்** | | | | | |
| காலப்பகுதிக்கான இலாபம் | 500,000 | - | - | - | 500,000 |
| ஏனைய விரிவான வருமானம்/(நட்டம்), தேறிய வரி | - | 22,001 | - | (22,001) | - |
| **காலப்பகுதிக்கான மொத்த விரிவான வருமானம்** | 500,000 | 22,001 | - | (22,001) | 500,000 |
| **01.01.2024 திகதியன்று மீதி - கணக்ககாய்வு செய்யப்பட்டது** | 11,894,421 | 78,775 | 1,146,555 | (1,176,968) | 11,942,783 |
| **31.03.2024 உடன் முடிவடைந்த மூன்று மாதங்களுக்கான மொத்த விரிவான வருமானம்** | | | | | |
| காலத்திற்கான இலாபம் | - | - | - | 46,537 | 46,537 |
| ஏனைய விரிவான வருமானம், நிகர வரி | - | - | 170,944 | - | 170,944 |
| **காலத்திற்கான மொத்த விரிவான வருமானம்** | - | - | 170,944 | 46,537 | 217,481 |
| பங்கு விநியோகம் | - | - | - | - | - |
| கையகப்படுத்தலில் கட்டுப்படுத்தப்படாத வட்டி | - | - | - | - | - |
| பெற்ற கட்டுப்படுத்தப்படாத வட்டி | - | - | - | - | - |
| சட்டபூர்வ இருப்புக்கு மாற்றியமை | - | - | - | - | - |
| **மொத்தப் பங்களிப்பும் விநியோகங்களும்** | - | - | - | - | - |
| **31.03.2024 திகதியன்று மீதி** | 11,894,421 | 78,775 | 1,317,499 | (1,130,431) | 12,160,264 |

## மேலதிக வெளிப்படுத்துகைகள்

| திகதியில் உள்ளவாறு | 31 மார்ச் 2024 | 31 டிசம்பர் 2023 (கணக்காய்வு செய்த) |
|---|---|---|
| | ரூ. ' 000 | ரூ. ' 000 |
| **மொத்தக் கடன்களும் முற்பணங்களும்** | | |
| **மொத்தக் கடன்களும் முற்பணங்களும** | 46,748,073 | 45,553,094 |
| **கழி: கட்டம் வாரியாக வலுக்குறைவு** | | |
| கட்டம் 1 | 189,443 | 188,024 |
| கட்டம் 2 | 711,749 | 709,734 |
| கட்டம் 3 | 4,266,475 | 4,095,898 |
| **கடன்கள் மற்றும் முன்கூட்டியே மொத்த குறைபாடு** | 5,167,667 | 4,993,656 |
| **மொத்த நிகர கடன்கள் மற்றும் முற்பணங்கள்** | 41,580,406 | 40,559,438 |
| **ஏனைய வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் வருமதிகள்** | | |
| **உற்பத்தியின் படி - உள்நாட்டுப் பணம்** | | |
| வங்கி மேலதிகப் பற்று | 6,409,309 | 6,182,468 |
| வர்த்தக நிதி | 3,264,140 | 2,516,096 |
| வீட்டுக் கடன்கள் | 1,023,499 | 996,578 |
| தனிப்பட்ட கடன்கள் | 2,681,973 | 2,805,144 |
| தவணைக் கடன்கள் | 324,597 | 305,365 |
| விவசாயக் கடன்கள் | 16,879,381 | 16,033,013 |
| வாகனக் கடன்கள் | 1,477,313 | 1,519,567 |
| சொத்துக்களுக்கு எதிரான கடன்கள் | 599,120 | 592,400 |
| சுழற்சிக் கடன்கள் | 8,112,468 | 8,203,896 |
| நிதிச்சந்தைக் கடன்கள் | 97,631 | 96,927 |
| பெறத்தக்க உண்டியல்கள் | 1,589,428 | 1,640,656 |
| கடன் அட்டை | 39,351 | 41,896 |
| நுண் நிதி | 502,599 | 416,863 |
| **உப தொகை** | 43,000,811 | 41,350,869 |
| **உற்பத்தியின் படி - வெளிநாட்டு நிதி** | | |
| மேலதிகப் பற்று | 1,367,399 | 1,603,524 |
| வர்த்தக நிதி | 62,696 | 70,969 |
| தவணைக் கடன்கள் | 2,245,560 | 2,437,641 |
| மேலதிகப் பற்றுக்கள் | 8,970 | 8,970 |
| ஏனையவை | 62,638 | 81,121 |
| **உப மொத்தம்** | 3,747,262 | 4,202,225 |
| **மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள்** | 46,748,073 | 45,553,094 |

**காலப்பகுதிக்கான அசைவுகள் - ஏனைய வாடிக்கையாளர்களின் கடன்கள் மற்றும் வருமதிகளின் திரண்ட பெறுமதி குறைப்புக்களின் - 2024**

| | நிலை 1 | நிலை 2 | நிலை 3 | மொத்தம் |
|---|---|---|---|---|
| 01 ஜனவரி 2024 இன் ஆரம்ப இருப்பு - கணக்காய்வு செய்யப்பட்டது | 188,024 | 709,734 | 4,095,898 | 4,993,656 |
| வருமான அறிக்கைக்கான கட்டணம் / (மீள் எழுதுதல்) | 1,511 | 8,418 | 223,291 | 233,220 |
| அந்நியச் செலாவணி ஒதுக்கீடுகளில் மாற்று விகித வேறுபாடு | (92) | (6,403) | (52,714) | (59,209) |
| **31 மார்ச் 2024 இன் இறுதி இருப்பு** | 189,443 | 711,749 | 4,266,475 | 5,167,667 |

**காலப்பகுதிக்கான அசைவுகள் - ஏனைய வாடிக்கையாளர்களின் கடன்கள் மற்றும் வருமதிகளின் திரண்ட பெறுமதி குறைப்புக்களின் - 2023**

| | நிலை 1 | நிலை 2 | நிலை 3 | மொத்தம் |
|---|---|---|---|---|
| 01 ஜனவரி 2023 இன் ஆரம்ப இருப்பு - கணக்காய்வு செய்யப்பட்டது | 132,422 | 1,026,985 | 3,130,230 | 4,289,637 |
| வருமான அறிக்கைக்கான கட்டணம் / (மீள் எழுதுதல்) | 95,540 | (313,235) | 1,039,593 | 821,898 |
| அந்நியச் செலாவணி ஒதுக்கீடுகளில் மாற்று விகித வேறுபாடு | (39,938) | (4,016) | (73,925) | (117,879) |
| **31 டிசம்பர் 2023 இன் இறுதி இருப்பு - கணக்காய்வு செய்யப்பட்டது** | 188,024 | 709,734 | 4,095,898 | 4,993,656 |

| திகதியில் உள்ளவாறு | 31 மார்ச் 2024 | 31 டிசம்பர் 2023 (கணக்காய்வு செய்த) |
|---|---|---|
| | ரூ. ' 000 | ரூ. ' 000 |
| **மொத்தக் கடன்களும் முற்பணங்களும** | 18,557,717 | 16,772,021 |
| **கழி: கட்டம் வாரியாக வலுக்குறைவு** | | |
| கட்டம் 1 | 50,485 | 48,239 |
| கட்டம் 2 | 25,541 | 10,872 |
| கட்டம் 3 | 1,770 | 15,853 |
| **கடன்கள் மற்றும் முன்கூட்டியே மொத்த குறைபாடு** | 77,796 | 74,964 |
| **மொத்த நிகர கடன்கள் மற்றும் முற்பணங்கள்** | 18,479,921 | 16,697,057 |
| **தயாரிப்பு வாரியாக கடமைகள் மற்றும் எதிர்பாராத செலவினங்கள்** | | |
| **உற்பத்தியின் படி - உள்நாட்டு நிதி** | | |
| உத்தரவாதங்கள் | 5,950,195 | 5,923,610 |
| கடன் கடிதங்கள் | 284,827 | 346,271 |
| வரையப்படாத கடன் சேவைகள் | 9,117,984 | 8,626,315 |
| ஏனைய கடப்பாடுகள் | 118,463 | 89,878 |
| **உப தொகை** | 15,471,469 | 14,986,074 |
| **உற்பத்தியின் படி - வெளிநாட்டு நிதி** | | |
| உத்தரவாதங்கள் | 475,745 | 498,810 |
| கடன் கடிதங்கள் | 995,893 | 1,199,251 |
| சேகரிப்பதற்காக உள்ள பற்றுப் பத்திரங்கள் | 105,045 | 87,886 |
| நிதி நிறுவன முன்னோக்கு கொள்முதல் | 457,190 | - |
| நிதி நிறுவன இடத்தில் கொள்முதல் | 1,052,375 | - |
| **உப தொகை** | 3,086,248 | 1,785,947 |
| **மொத்தக் கடப்பாடுகள் மற்றும் எதிர்பாராத செலவினங்கள்** | 18,557,717 | 16,772,021 |

**காலப்பகுதிக்கான கடப்பாடுகள் மற்றும் எதிர்பாரா செலவினங்களுக்கான குறைப்புக்கனின் அசைவுகள்**

| | நிலை 1 | நிலை 2 | நிலை 3 | மொத்தம் |
|---|---|---|---|---|
| 01 ஜனவரி 2023 இன் ஆரம்ப இருப்பு - கணக்காய்வு செய்யப்பட்டது | 48,239 | 10,872 | 15,853 | 74,964 |
| வருமான அறிக்கைக்கான கட்டணம் / (மீள் எழுதுதல்) | 2,246 | 14,669 | (14,083) | 2,832 |
| **31 மார்ச் 2024 திகதியில் உள்ளவாறு இறுதி இருப்பு** | 50,485 | 25,541 | 1,770 | 77,796 |

| திகதியில் உள்ளவாறு | 31 மார்ச் 2024 | 31 டிசம்பர் 2023 (கணக்காய்வு செய்த) |
|---|---|---|
| | ரூ. ' 000 | ரூ. ' 000 |
| **ஏனைய வாடிக்கையாளர்களுக்கு செலுத்தவேண்டியவை** | | |
| **உற்பத்தியின் படி - உள்நாட்டு நிதி** | | |
| நடைமுறைக் கணக்கு வைப்புக்கள் | 1,888,523 | 2,730,719 |
| சேமிப்பு வைப்புக்கள் | 8,705,138 | 8,460,596 |
| அழைப்பு வைப்புக்கள் | 2,317 | 1,336 |
| கால வைப்புக்கள் | 38,427,974 | 35,507,813 |
| சான்றிதழ் வைப்புக்கள் | 66,370 | 66,237 |
| மிகை வைப்புக்கள் | 47,265 | 22,015 |
| **உப தொகை** | 49,137,587 | 46,788,716 |
| **உற்பத்தியின் படி - வெளிநாட்டு நிதி** | | |
| நடைமுறைக் கணக்கு வைப்புக்கள் | 59,574 | 158,850 |
| சேமிப்பு வைப்புக்கள் | 614,635 | 799,098 |
| கால வைப்புக்கள் | 2,736,704 | 2,981,737 |
| வைப்பு எல்லை | 452 | 452 |
| **உப தொகை** | 3,411,365 | 3,940,137 |
| **மொத்த வைப்புக்கள்** | 52,548,952 | 50,728,853 |

இல. 696, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 0117 640 000 www.cargillsbank.com

www.skillsads.com

CargillsBank
வாழ்க்கைக்கு உயிரூட்டும் வங்கி

# கார்கில்ஸ் வங்கி பிஎல்சி
# 31 மார்ச் 2024 இல் முடிவடைந்த ஒன்பது மாதங்களுக்கான நிதிநிலைகள் அறிக்கைகள்

## நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்களின் வகைப்படுத்துகை

| | இலாப/(நட்டம்) மூலம் நியாயமான மதிப்பு | ஏனைய விரிவான வருமானம் மூலம் நியாயமான மதிப்பு | கடன் தீர் நிதிப் பெறுமதி | மொத்தம் |
|---|---|---|---|---|
| 31 மார்ச் 2024 திகதியன்று | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| **நிதிச் சொத்துக்கள்** | | | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | - | - | 1,368,390 | 1,368,390 |
| மத்திய வங்கிகளுடனான மீதிகள் | - | - | 668,107 | 668,107 |
| வங்கிகளுடன் வேலைவாய்ப்பு | - | - | 245,229 | 245,229 |
| வங்கிகளுடனான நடவடிக்கைகள் | - | | 721,154 | 721,154 |
| பெற்ற நிதிக் கருவிகள் | 2,382 | - | - | 2,382 |
| இலாபம் அல்லது நட்டம் மூலம் நியாயப் பெறுமதியில் அளவிடப்படும் நிதிச் சொத்துக்கள் | 3,052,059 | - | - | 3,052,059 |
| நிதிச் சொத்து திருத்தியமைக்கப்பட்ட செலவு - ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன் மற்றும் முற்பணம் | - | - | 41,580,406 | 41,580,406 |
| நிதிச் சொத்து திருத்தியமைக்கப்பட்ட செலவு - கடன் மற்றும் பிற உபகரணங்கள் | - | - | 1,999,571 | 1,999,571 |
| ஏனைய விரிவான வருமானங்கள் மூலம் நியாயப் பெறுமதியில் நிதிச் சொத்துக்கள் | | | | |
| அரசு பத்திரங்கள் | - | 18,817,171 | - | 18,817,171 |
| பங்குப் பத்திரங்கள் | - | 20,688 | - | 20,688 |
| ஏனைய சொத்துக்கள்* | - | - | 1,408,475 | 1,408,475 |
| **மொத்த நிதிச் சொத்துக்கள்** | 3,054,441 | 18,837,859 | 47,991,332 | 69,883,632 |
| **நிதிப் பொறுப்புக்கள்** | | | | |
| வங்கிகளுக்கு செலுத்தப்பட வேண்டியவை | - | - | 419,042 | 419,042 |
| வழித்தோன்றல் நிதிக் கருவிகள் | 6,279 | - | - | 6,279 |
| நிதிச் பொறுப்பு திருத்தியமைக்கப்பட்ட செலவு - வைப்பாளர்களுக்கு செலுத்த வேண்டியவை | - | - | 52,548,952 | 52,548,952 |
| நிதிச் பொறுப்பு திருத்தியமைக்கப்பட்ட செலவு - ஏனைய கடனாளிகளுக்கு செலுத்த வேண்டியவை | - | - | 2,508,090 | 2,508,090 |
| குத்தகைப் பொறுப்பு | - | - | 298,800 | 298,800 |
| ஏனைய பொறுப்புக்கள்** | - | - | 2,873,230 | 2,873,230 |
| **மொத்த நிதிச் பொறுப்புக்கள்** | 6,279 | - | 58,648,114 | 58,654,393 |
| **31 டிசம்பர் 2024 திகதியில் உள்ளவாறு - கணக்காய்வு செய்யப்பட்டது** | | | | |
| **நிதிச் சொத்துக்கள்** | | | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | - | - | 1,963,321 | 1,963,321 |
| மத்திய வங்கிகளுடனான மீதிகள் | - | - | 432,805 | 432,805 |
| வங்கிகளுடன் வேலைவாய்ப்பு | - | - | - | - |
| நிதி உபகரணங்களிலிருந்து பெறப்பட்டவை | - | - | 730,566 | 730,566 |
| வழித்தோன்றல் நிதி கருவிகள் | 6 | - | - | 6 |
| இலாபம் அல்லது இழப்பு மூலம் நியாயப் பெறுமதியில் அளவிடப்படும் நிதிச் சொத்துக்கள் | 2,468,401 | - | - | 2,468,401 |
| நிதிச் சொத்து திருத்தியமைக்கப்பட்ட செலவு - ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன் மற்றும் முற்பணம் | - | - | 40,559,438 | 40,559,438 |
| நிதிச் சொத்து திருத்தியமைக்கப்பட்ட செலவு - கடன் மற்றும் பிற உபகரணங்கள் | - | - | 2,050,119 | 2,050,119 |
| ஏனைய விரிவான வருமானங்கள் மூலம் நியாயப் பெறுமதியில் நிதிச் சொத்துக்கள் | | | | |
| அரசு பத்திரங்கள் | - | 17,758,832 | - | 17,758,832 |
| பங்குப் பத்திரங்கள் | - | 20,688 | - | 20,688 |
| ஏனைய சொத்துக்கள்* | - | - | 2,174,512 | 2,174,512 |
| **மொத்த நிதிச் சொத்துக்கள்** | 2,468,407 | 17,779,520 | 47,910,761 | 68,158,688 |
| **நிதிப் பொறுப்புக்கள்** | | | | |
| வங்கிகளுக்கு செலுத்தப்பட வேண்டியவை | - | - | 717,667 | 717,667 |
| நிதி உபகரணங்களிலிருந்து பெறப்பட்டவை | 27 | - | - | 27 |
| நிதிச் பொறுப்பு திருத்தியமைக்கப்பட்ட செலவு - வைப்பாளர்களுக்கு செலுத்த வேண்டியவை | - | - | 50,728,853 | 50,728,853 |
| நிதிச் பொறுப்பு திருத்தியமைக்கப்பட்ட செலவு - ஏனைய கடனாளிகளுக்கு செலுத்த வேண்டியவை | - | - | 3,669,925 | 3,669,925 |
| குத்தகைப் பொறுப்பு | - | - | 335,781 | 335,781 |
| ஏனைய பொறுப்புக்கள்** | - | - | 1,710,916 | 1,710,916 |
| **மொத்த நிதிச் பொறுப்புக்கள்** | 27 | - | 57,163,142 | 57,163,169 |

* ஏனைய சொத்துக்களில் ஏனைய பெறத்தக்கவைகள் மட்டுமே உள்ளடங்கும்.

** ஏனைய பொறுப்புக்கள், அட்டுறு செலவினம், ஒப்படைப்புக்கள் மற்றும் எதிர்பாராச் செலவினப் பெறுமதி குறைப்பை நீக்குகின்றன.

**நியாயப் பெறுமதி படிநிலை**

பின்வரும் நியாயப் பெறுமதி படிநிலைகளைப் பயன்படுத்தி வங்கி நியாயமான பெறுமதியை மதிப்பீடு செய்கிறது. இதன் மூலம் குறித்த அளவீடுகளை மேற்கொள்ளும் போது ஒவ்வொரு அம்சத்தினதும் முக்கியத்துவத்தை அது வெளிப்படுத்துகின்றது.

- **மட்டம் 1: சீராக்கம் செய்யப்படாத கேள்வி செய்யப்பட்ட சந்தைப் பெறுமதிகளுக்கு அமைய நியாயப் பெறுமதியைக் கணக்கீடு செய்தல்**
  சமமான கருவிகளுக்கு செயற்பாட்டுச் சந்தையில் கோரப்படும் விலைகள் (சீராக்கம் செய்யப்படாத) இங்கு கருதப்படுகிறது.
- **மட்டம் 2: ஏனைய செயற்பாட்டை வெளிப்படுத்தக்கூடிய கருவிகள்**
  அதாவது, மட்டம் 1 இல் காண்பிக்கப்பட்டுள்ள சந்தை விலைகளைத் தவிர ஏனைய நேரடி அல்லது (அதாவது விலைகள்) மறைமுக (அதாவது விலைகள் மூலம் கிடைக்கப்பெறும் தகவல்கள்) என்பனவற்றைப் பயன்படுத்தி இங்கு தீர்மானிக்கப்படுகின்றது. இந்தப் பிரிவில் கருவிகளின் பெறுமதி பின்வருமாறு மதிப்பீடு செய்யப்படுகின்றது.
  (a) சமமான கருவிகளுக்கான சந்தையில் காணப்படும் கோரல் விலை
  (b) சந்தையில் செயற்பாடு குறைந்த ஆனால் சமமான கருவிகளுக்கு காணப்படும் கோரப்பட்ட விலைகள் அல்லது சமமான பொருட்களின் விலைகள். அல்லது,
  (c) ஏனைய தரவுகளை சந்தையில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ காணக்கூடிய நிலையில் அவதானிக்கப்படும் ஏனைய மதிப்பீட்டுப் பொறிமுறைகள்.
- **மட்டம் 3: சந்தையில் காணப்படாத தகவல்களைக் கொண்டு நியாயமான பெறுமதியை மதிப்பீடு செய்தல்**
  வெளிப்படையாகக் காணக் கிடைக்காத தகவல்கள் இந்தப் பகுதியில் பெறுமதி மதிப்பீட்டு முறைமைகள் நேரடியாகக் கிடைக்கப்பெறாத தகவல்களைக் கொண்டு மேற்கொள்ளப்படுவதோடு, இந்தப் பகுதியில் மேற்கொள்ளப்படும் மதிப்பீடுகளின் மூலம் குறித்த கருவியின் பெறுமதியில் நேரடி தாக்கங்கள் ஏற்படுகின்றன.
  வேறு முறைகளில் பெறப்படும் நியாயப் பெறுமதி மதிப்பீடுகளை ஏதேனும் தாக்கங்களை ஏற்படுத்தும் அம்சங்கள் அதாவது, திரவத்தன்மை இடர் அல்லது பயன்பாட்டு முறையில் காணப்படும் குறைபாடுகள் என்பனவற்றுக்காக வங்கி ஒரு சீராக்கத்தை மேற்கொள்வதோடு, மூன்றாம் தரப்பினர் ஒருவரின் சந்தைப் பங்களிப்பின் மூலமாக குறித்த கொடுக்கல் வாங்கல்களின் விலைகள் மதிப்பீடு செய்யப்படுகின்றன.

**நிதிக் கருவிகள் நியாயப் பெறுமதியில் மதிப்பீடு செய்யப்படுகிறது - நியாயமான மதிப்பீட்டுப் படிமுறை**

அறிக்கைத் திகதியில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் நியாயப் பெறுமதியை மதிப்பீடு செய்தமையின் ஒரு பகுப்பாய்வினை பின்வரும் அட்டவணை பெற்றுக்கொடுக்கிறது. ஒவ்வொரு நியாயமான பெறுமதி மதிப்பீடும் நியாயப் பெறுமதி மதிப்பீட்டுப் படிநிலையின் ஒரு கட்டத்திற்கு அமைய பிரித்துக் காண்பிக்கப்பட்டுள்ளது. நிதி நிலைமை அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதிகள் இதற்கு ஏற்ப கணக்கிடப்பட்டுள்ளன.

| | நிலை 1 | நிலை 1 | நிலை 1 | மொத்தம் |
|---|---|---|---|---|
| | Rs. '000 | Rs. '000 | Rs. '000 | Rs. '000 |
| **31 மார்ச் 2024 இல் உள்ளவாறு** | | | | |
| **நிதிச் சொத்துக்கள்** | | | | |
| தேர்வு நிதிக் கருவிகள் | - | 2,382 | - | 2,382 |
| ஏனைய வருமானங்களின் பெறுமதியைக் கொண்டு நிதிச் சொத்துக்களின் பெறுமதியை நியாயப் பெறுமதி மேற்கொள்ளுதல் | - | 3,052,059 | - | 3,052,059 |
| அரசாங்க பிணையங்கள் | 18,817,171 | - | - | 18,817,171 |
| பங்குப் பத்திரங்கள் | - | - | 20,688 | 20,688 |
| **நியாயப் பெறுமதியில் மொத்த சொத்துக்கள்** | 18,817,171 | 3,054,441 | 20,688 | 21,892,300 |
| **பொறுப்புக்கள்** | | | | |
| தேர்வு நிதிக் கருவிகள் | - | 6,279 | - | 6,279 |
| **நியாயப் பெறுமதியில் மொத்தப் பொறுப்புக்கள்** | - | 6,279 | - | 6,279 |
| **2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறு - கணக்காய்வு செய்யப்பட்டது** | | | | |
| **நிதிச் சொத்துக்கள்** | | | | |
| தேர்வு நிதிக் கருவிகள் | - | 6 | - | 6 |
| இலாபம் மற்றும் நட்டத்தின் அடிப்படையில் நிதிச் சொத்துக்களின் பெறுமதியை நியாயப் பெறுமதியில் கணக்கிடுதல் | - | 2,468,401 | - | 2,468,401 |
| அரசாங்க பிணையங்கள் | 17,758,832 | - | - | 17,758,832 |
| பங்குப் பத்திரங்கள் | - | | 20,688 | 20,688 |
| நியாயப் பெறுமதியில் மொத்த சொத்துக்கள் | 17,758,832 | 2,468,407 | 20,688 | 20,247,927 |
| **பொறுப்புக்கள்** | | | | |
| தேர்வு நிதிக் கருவிகள் | - | 27 | - | 27 |
| நியாயப் பெறுமதியில் மொத்தப் பொறுப்புக்கள் | - | 27 | - | 27 |

## செயற்பாட்டுப் பிரிவு

| மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டு | வங்கியியல் 2024 | வங்கியியல் 2023 | திறைசேரி/ முதலீடுகள் 2024 | திறைசேரி/ முதலீடுகள் 2023 | ஒதுக்கப்படாதவை 2024 | ஒதுக்கப்படாதவை 2023 | மொத்தம் 2024 | மொத்தம் 2023 |
|---|---|---|---|---|---|---|---|---|
| **தேறிய வட்டி வருமானம்** | 452,466 | 691,484 | 277,426 | 171,593 | - | - | 814,242 | 863,077 |
| தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 196,413 | 224,885 | 2,545 | 2,422 | - | - | 198,958 | 227,307 |
| அந்நியச் செலாவணி இலாபம் | 63,084 | 114,259 | (47,083) | (869) | - | - | 16,001 | 113,390 |
| ஏனைய வருமானங்கள் | 80,989 | 2,143 | 176,402 | 8,192 | - | 373 | 173,041 | 10,708 |
| **பிரிவு வாரியாக மொத்த செயற்படு வருமானம்** | 792,952 | 1,032,771 | 409,290 | 181,338 | - | 373 | 1,202,242 | 1,214,483 |
| சேதநட்டங்கள் | (238,689) | (281,375) | 12,917 | 3,182 | - | - | (225,772) | (278,193) |
| **தேறிய செயற்பாட்டு வருமானம்** | 554,262 | 751,396 | 422,208 | 184,520 | - | 373 | 976,470 | 936,290 |
| ஆளணி மற்றும் ஏனைய செயற்பாட்டுச் செலவுகள் | (680,261) | (587,742) | (8,047) | (7,404) | - | - | (688,308) | (595,146) |
| தேய்மானம் மற்றும் பணப் பெறுமதி நீக்கம் | (81,676) | (82,080) | (33) | (47) | - | - | (81,709) | (82,127) |
| **மொத்த செயற்பாட்டுச் செலவுகள்** | (761,937) | (669,822) | (8,080) | (7,451) | - | - | (770,017) | (677,273) |
| **பிரிவு வாரியான செயற்பாட்டு இலாபம்/(நட்டம்)** | (207,674) | 81,574 | 414,127 | 177,070 | - | 373 | 206,453 | 259,017 |
| நிதிச் சேவைகள் மீதான வற் வரி | (97,069) | (85,119) | - | - | - | - | (97,069) | (85,119) |
| **பிரிவு வாரியாக வரிக்கு முந்திய இலாபம்/(நட்டம்)** | (304,743) | (3,544) | 414,127 | 177,070 | - | 373 | 109,384 | 173,898 |
| வரிச் செலவுகள் | | | | | | | (62,847) | (67,432) |
| **காலத்திற்குரிய இலாபம்/(நட்டம்)** | | | | | | | 46,537 | 106,466 |
| **திகதியன்று** | 31-03-2024 | 31-12-2023 (கணக்காய்வு செய்த) | 31-03-2024 | 31-12-2023 (கணக்காய்வு செய்த) | 31-03-2024 | 31-12-2023 (கணக்காய்வு செய்த) | 31-03-2024 | 31-12-2023 (கணக்காய்வு செய்த) |
| ஏனைய விபரங்கள் | | | | | | | | |
| பிரிவுக்கான சொத்துக்கள் | 50,963,307 | 47,473,794 | 20,401,232 | 22,268,670 | - | - | 71,364,539 | 69,742,464 |
| பிரிவுக்கான பொறுப்புக்கள் | 56,551,555 | 54,032,441 | 2,652,719 | 3,767,240 | - | - | 59,204,274 | 57,799,681 |

## தெரிவு செய்யப்பட்ட செயற்பாட்டுக் குறிகாட்டிகள்

| திகதியில் உள்ளவாறு | 31-03-2024 | 31-12-2023 |
|---|---|---|
| **ஒழுங்குபடுத்தும் மூலதனம் ரூ. 000** | | |
| பொது உரிமையாண்மை படி 1 | 10,910,720 | 10,910,720 |
| மொத்த படி 1 மூலதனம் | 12,410,720 | 12,410,720 |
| மொத்த மூலதனம் | 12,693,941 | 12,693,941 |
| **ஒழுங்குபடுத்தும் மூலதன நிறைவு விகிதம் (%)** | | |
| பொது உரிமையாண்மை படி 1 மூலதன விகிதம் (ஆகக்குறைந்தது தேவை - 7%) | 19.07 | 19.89 |
| மொத்த படி 1 மூலதன விகிதம் (ஆகக்குறைந்தது தேவை - 8.5%) | 21.69 | 22.63 |
| மொத்த மூலதன விகிதம் (ஆகக்குறைந்த தேவை - 12.5%) | 22.18 | 23.15 |
| **மாற்று விகிதம் - ஆகக்குறைந்த தேவை 3%** | 14.37 | 14.67 |
| **ஒழுங்குபடுத்தும் திரவத்தன்மை** | | |
| நியதிச்சட்ட திரவச்சொத்து, ரூ. '000 - வங்கித்தொழில் பிரிவு | 20,231,192 | 19,717,993 |
| நியதிச்சட்ட திரவச்சொத்து உள்ளடக்க வீதம், % (ஆகக்குறைந்த தேவை, 20%) - வங்கித்தொழில் பிரிவு | 38.27 | 39.82 |
| உயர் தர திரவ சொத்து முழுத் தொகை ரூ. '000 | 21,231,568 | 19,149,507 |
| நியதிச்சட்ட திரவச்சொத்து உள்ளடக்க விகிதம், % - ஆகக்குறைந்தது தேவை - 100%) | | |
| ரூபா, % | 345.35 | 359.50 |
| ஏனைய பண அலகு, % | 285.86 | 289.04 |
| மதிப்பீட்டு விகிதம் (%) - ஆகக்குறைந்த தேவை - 100%) | 121.09 | 123 |
| **சொத்துக்களின் தரம் (கடன்களின் தரம்)** | | |
| 3ஆம் கட்டக் கடன்கள் (3ஆம் கட்ட பெறுமதி சீராக்க நிகர தொகை) மொத்தக் கடன்களுக்கு | 8.31 | 8.63 |
| 3ஆம் கட்ட கடன்களுக்கான 3ஆம் கட்டக் கடன்களின் பெறுமதி சீராக்கம் (3ஆம் கட்ட ஒதுக்கீட்டு அளவு) | 47.91 | 46.69 |
| **இலாபம்** | | |
| வட்டி எல்லை % | 4.60 | 5.61 |
| சொத்துக்கள் மூலமான வருமானம் (வரிக்கு முன்),% | 0.58 | 1.10 |
| பங்கு மீதான வருமானம்,% | 1.54 | 4.12 |

## பங்குதாரர்கள் தொடர்பான விபரங்கள்

| | 2024 மார்ச் 31 இல் உள்ளவாறு இருபத்தி ஆறு பெரிய பங்குதாரர்கள் | பங்குகள் | % |
|---|---|---|---|
| 1 | கார்கில்ஸ் (சிலோன்) பீஎல்சீ * | 350,696,905 | 37.09 * |
| 2 | சீ.டீ. ஹோல்டிங்ஸ் பீஎல்சீ * | 223,345,953 | 23.62 * |
| 3 | இலங்கை நாணயச் சபை - ஈ.பி.எப். | 44,000,000 | 4.65 |
| 4 | மியுலிடெக்ஸ் இன்வெஸ்மன்ட் லிமிடட் | 30,800,000 | 3.26 |
| 5 | எம்.ஜெ.எஃப் அறக்கட்டளை முதலீடுகள் (பி) லிமிடட் | 28,000,000 | 2.96 |
| 6 | சொப்ட்லொஜிக் லய்ஃப் காப்புறுதி நிறுவனம் | 26,600,000 | 2.81 |
| 7 | MAS எமாலியா (பி) லிமிடட் | 22,000,000 | 2.33 |
| 8 | ரோஸ்வுட் (பி) லிமிடட் | 17,477,900 | 1.85 |
| 9 | அமின்திரி ஹோல்டிங்ஸ் (பி) லிமிடட் | 11,000,000 | 1.16 |
| 10 | ஏஜஏ ஹோல்டிங்ஸ் லங்கா (பி) லிமிடட் | 11,000,000 | 1.16 |
| 11 | சொப்ட்லொஜிக் ஹோல்டிங்ஸ் பீஎல்சீ | 10,000,000 | 1.06 |
| 12 | டிஸ்டிலரீஸ் கம்பனி ஒப் ஸ்ரீலங்கா பீஎல்சி | 9,593,555 | 1.01 |
| 13 | கார்தியா லொகுகே ஹெரிஸ் பிரேமரத்ன | 9,089,000 | 0.96 |
| 14 | மெரில் ஜோசப் பிரனாந்து | 7,800,000 | 0.82 |
| 15 | சொப்ட்லொஜிக் கெபிடல் பீஎல்சீ | 7,400,000 | 0.78 |
| 16 | ஜி.எஃப் கெபிடல் குளோபல் லிமிடட் | 7,210,900 | 0.76 |
| 17 | மெல்ஸ்டாகார்ப் பீஎல்சி | 5,854,200 | 0.62 |
| 18 | வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் - ஆயுள் நிதியம் | 5,086,470 | 0.54 |
| 19 | வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் - பொது நிதியம் | 5,065,870 | 0.54 |
| 20 | லலான் ரபர் ஹோல்டிங்ஸ் (பி) லிமிடட் | 4,400,000 | 0.47 |
| 21 | இஷார சின்தக நாநயக்கார | 4,400,000 | 0.47 |
| 22 | பெரியசாமிபிள்ளை பாரதகுமார் | 4,400,000 | 0.47 |
| 23 | பெரியசாமிபிள்ளை முருகானந்தன் | 4,400,000 | 0.47 |
| 24 | பெரியசாமிபிள்ளை ஆனந்தராஜா | 4,400,000 | 0.47 |
| 25 | பெரியசாமிபிள்ளை தேவராஜ் | 4,400,000 | 0.47 |
| 26 | பெரியசாமிபிள்ளை பாரதமாணிக்கம் | 4,400,000 | 0.47 |
| | உப தொகை | 862,820,753 | 91.24 |
| | ஏனைய பங்குதாரர்கள் | 82,822,105 | 8.76 |
| | முழுத்தொகை | 945,642,858 | 100 |

* கார்கில்ஸ் (சிலோன்) பீஎல்சீ மற்றும் சீ.டீ. ஹோல்டின்ஸ் வரையறுக்கப்பட்ட பொது நிறுவனத்திற்கு வங்கியின் வாக்கு உரிமையுள்ள பங்கு மூலதனம் 30% க்கு அதிகமாக வழங்கப்பட்டுள்ள மேலதிக பங்குகளுக்காக வாக்குரிமை செயல்படுத்த முடியாது.

## பொது இருப்பு சதவீதம்

| உள்ளவாறு | 2024 மார்ச 31 | 2023 டிசம்பர் 31 |
|---|---|---|
| சீராக்கம் செய்யப்பட்ட மிதக்கும் சந்தை மூலதனம் ** [(மொத்த சந்தை மூலதனம் - வர்த்தகத்திற்குக் கிடைக்காத பங்கு) *பங்கு விலை] | 2,923,237,398 | பொருத்தமற்றது |
| பொது இருப்பு சதவீதம் (%) | 39.13% | 39.13% |
| பொதுப் பங்குதாரர்களின் எண்ணிக்கை | 2,323 | 2247 |
| இதன் கீழ் பட்டியலிடப்பட்ட நிறுவனங்கள், குறைந்தபட்ச பொது இருப்புத் தேவைக்கு இணங்குவதற்கான பொருத்தமான விருப்பம் | விருப்பம் 4 | பொருத்தமற்றது |

* 2024 ஜனவரி 09 அன்று, கொழும்பு பங்குச் சந்தையின் பிரதம சபையினால் சாதாரண பங்குகள் பட்டியலிடப்பட்டன. வங்கியின் மேற்கோள் பங்குகள் இலங்கை ஷரூபாயில் மட்டுமே வர்த்தகம் செய்யப்படுகின்றன.

## பங்கு விலைத் தகவல்

| உள்ளவாறு | 2024 மார்ச 31 | 2023 டிசம்பர் 31 |
|---|---|---|
| பங்குகளின் எண்ணிக்கை | 945,642,858 | 945,642,858 |
| உச்ச விலை | 7.90 | பொருத்தமற்றது |
| குறைந்த விலை (ரூபா) | 8.20 | பொருத்தமற்றது |
| இறுதியாக வர்த்தகம் செய்யப்பட்ட விலை (ரூபா) | 7.50 | பொருத்தமற்றது |

## 2024.03.31 க்கு அமைய, கார்கில்ஸ் வங்கி பீஎல்சி யின் பங்குகளில் பணிப்பாளர்களின் அக்கறை

| | பணிப்பாளர்களின் பெயர் | பங்குகளின் எண்ணிக்கை 2024 மார்ச 31 இல் உள்ளவாறு | பங்குகளின் எண்ணிக்கை 2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறு |
|---|---|---|---|
| 1 | ரிச்சர்ட் இபெல் - தலைவர் * | 48,300 | 48,300 |
| 2 | அசோக பீரிஸ் (2023 ஜனவரி 20 இல் நியமனம்) | இல்லை | இல்லை |
| 3 | செனரத் பண்டார - முகாமைத்துவப் பணிப்பாளர்/பிநிஅ | 112,500 | 112,500 |
| 4 | திருமதி மரியன்னே பேஜ் | இல்லை | இல்லை |
| 5 | யுகிஷ்டிரன் கணகசபை | இல்லை | இல்லை |
| 6 | புவனேக பெரேரா | இல்லை | இல்லை |
| 7 | ரவீந்திர அஜந்தா ஜயவர்தன | இல்லை | இல்லை |
| 8 | திருமதி ஷாந்தி ஞானப்பிரகாசம் | இல்லை | இல்லை |
| 9 | அர்ஜுன ஹேரத் | இல்லை | இல்லை |

* திருமதி எம்.ரீ.எல். இபெல் (மனைவி) மற்றும் திருமதி ஜே.எம்.விஜேநாயக்க (மகள்) ஆகியோருடன் கூட்டாக இடம்பெற்றது.

www.skillsads.com

**விளக்கக் குறிப்புகள்**

1) இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் (CA Sri Lanka) வழங்கிய இலங்கை கணக்கியல் தர நியமங்களுக்கு (ஸ்ஸுகுசுளுள/டுமுயுளு) இணங்க, வங்கியின் நிதி அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. 2023 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை வெளியிடப்பட்டதிலிருந்து, கணக்கியல் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு முறைகளில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.
2) வங்கியின் இந்த இடைக்கால நிதி அறிக்கைகள், இலங்கை கணக்கியல் தர நியமங்களான டுமுயுளு 34 இன் தேவைகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளதோடு, 'இடைக்கால நிதி அறிக்கையிடல்' மற்றும் கொழும்பு பங்குச்சந்தை என்பவற்றின் 7.4 ஆம் இலக்க விதியின் அடிப்படையில் தேவையான தகவல்களையும் வழங்குகின்றன்.
3) 2025 ஆம் ஆண்டின் இறுதிக்குள், குறைந்தபட்ச மூலதனத் தேவையான ரூபா 20 பில்லியனுக்கு இணங்கும் வரை, மொத்த அடுக்கு 1 மூலதன விகிதம் 250 அடிப்படைப் புள்ளிகள் பொருந்தும் வகையில், குறைந்தபட்ச அளவை விடவும் கூடுதலாக வங்கி பராமரிக்க வேண்டும்.
4) வங்கி 2024 மார்ச 31 வரை அதன் தனித்தனியாகக் குறிப்பிடத்தக்க கடன் நிதிச் சொத்துப் பட்டியலை மீள்மதிப்பீடு செய்ததோடு, ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து, அதிகரித்த கடன் இடரைப் பிரதிபலிக்கும் வகையில், அடையாளம் காணப்பட்ட வாடிக்கையாளர் பிரிவுகளில் போதுமான குறைபாடுள்ள ஏற்பாடுகளை இணைத்தது. அதன்படி, கடன் பெறுவோரின் உயர்ந்த இடர் விவரங்களை மதிப்பிடுவதில் அதிக குறைபாட்டுக் கட்டணங்கள் ஒரு விவேகமான நடவடிக்கையாகக் கருதப்படும் முகாமைத்துவ மேலடுக்குகளையும் குறைபாட்டு வழங்கல் உள்ளடக்கியது.

   இதற்கு மேலதிகமாக, வங்கியானது, முன்னர் பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கான பணப்புழக்க அனுமானங்களைத் திருத்தியதுடன், அத்தகைய வாடிக்கையாளர்களின் கடன் தரத்தில் ஏதேனும் சரிவு ஏற்பட்டால், அந்த காலகட்டத்தில் சரியான முறையில் நிவர்த்தி செய்யப்பட்டதையும் உறுதிசெய்தது.

   2023 டிசம்பர் 31 இல் புதுப்பிக்கப்பட்ட இயல்புநிலை ஓட்ட விகிதங்களின் நிகழ்தகவு மற்றும் 31 இல் உள்ளவாறான பொருளாதார காரணிகளைச் சீர்செய்தல் (EFA) மற்றும் இழப்பு அளிக்கப்பட்ட இயல்புநிலை (LGD) பெறுமதிகள் ஆகியவற்றின் அடிப்படையில் அறிக்கையிடல் திகதியில் கூட்டுக் குறைபாட்டிற்கான அதன் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பை (ECL) 2024 மார்ச் மாதத்தில் மதிப்பீடு செய்துள்ளது.

   அந்நியச் செலாவணியில் குறிப்பிடப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான குறைபாட்டுக் கட்டணங்களுக்கான பரிமாற்ற தாக்கம் ஏனைய நிகர செயற்படு வருமானத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டதோடு, தொடர்புடைய பரிமாற்ற நட்டங்களும் அங்கீகரிக்கப்படுகின்றன.
5) வருமான வரி - மதிப்பீட்டு ஆண்டு 2013/2014.

   உள்நாட்டு இறைவரி திணைக்கள ஆணையாளர் நாயகம் (CGIR) 2013/2014 மதிப்பீட்டு ஆண்டிற்கான அறிக்கையை வெளியிட்டுள்ளார். வங்கி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்துள்ளதோடு, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் மேல்முறையீட்டு விசாரணைக்காக அது காத்திருக்கிறது.

   வருமான வரி - மதிப்பீட்டு ஆண்டு 2017/2018

   2017/2018 மதிப்பீட்டு ஆண்டிற்கான மதிப்பீட்டு அறிக்கையை, உள்நாட்டு இறைவரி திணைக்கள ஆணையாளர் நாயகம் வெளியிட்டுள்ளார். இந்த மதிப்பீட்டிற்கு எதிராக வங்கி மேன்முறையீடு செய்துள்ளது. மேன்முறையீடு தற்போது ஐசுனு விசாரணைக் கட்டத்தில் உள்ளது.

   இதன் விளைவு, நிதிநிலை அறிக்கைகளில் தாக்கத்தை ஏற்படுத்தாது என்பது முகாமைத்துவத்தின் கருத்தாகும்.
6) இங்கு வெளிப்படுத்தப்பட்டவை தவிர, காலாண்டில், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் / அல்லது தற்செயலான பொறுப்புக்கள் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் காணப்படவில்லை.
7) வங்கிக்கு எதிராக பொருள் சார்ந்த வழக்குகள் எதுவும் நிலுவையில் இல்லை.
8) இந்த இடைக்கால நிதி அறிக்கையில், முகாமைத்துவக் கட்டணம் மற்றும் அதனையொத்த செலவுகள் உட்பட அறியப்பட்ட செலவுகள் யாவும் செலுத்தப்பட்டுள்ளன.
9) அறிக்கையிடல் திகதியிலிருந்து, நிதிநிலை அறிக்கைகளில் சீராக்கம் அல்லது வெளிப்படுத்தல்கள் தேவைப்பாடுகள் எதுவும் எழவில்லை.

இல. 696, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 0117 640 000 www.cargillsbank.com


Trusted Marketplace of Classified Advertisers

Sunday Observer adz it's what you want Classified




For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-

077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office

Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

# டி20 உலகக் கிண்ணம்: இலங்கை குழாத்தில் வெள்ளாலகேவுக்கு இடம்

டி20 உலகக் கிண்ணப் போட்டிக்கான 15 பேர் கொண்ட இலங்கை குழாத்தில் பின்வரிசை வீரர்களுக்கு இடையில் இருந்து வந்த போட்டியில் துனித் வெள்ளாலகே வெற்றி பெற்று இறுதி அணியில் இடம்பிடித்துள்ளார். வலது கை சுழற்பந்து வீச்சாளரான வெள்ளாலகேவின் துடுப்பாட்ட திறன் மற்றும் மைதானத்தில் எந்த ஓர் இடத்திலும் களத்தடுப்பில் ஈடுபடும் திறனும் அணியில் இடம்பிடிக்க வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.



உலகக் கிண்ணப் போட்டியில் பங்கேற்பதற்கான இலங்கை அணியின் 15 பேர் குழாம் தேர்வு செய்யப்பட்டு அந்தப் பெயர் பட்டியல் விளையாட்டு அமைச்சரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் விசாவுக்கு விண்ணப்பித்திருக்கும் எஞ்சிய 10 வீரர்களில் மூவர் அல்லது நால்வர் மேலதிக வீரர்களாக தேர்வு செய்யப்படவுள்ளனர்.

டி20 உலகக் கிண்ணப் போட்டிக்கு அணியை தேர்வு செய்வதில் தேவையான சந்தர்ப்பத்தில் துடுப்பெடுத்தாடி வேகமாக ஓட்டங்களை குவிக்கும் திறமையைக் கொண்ட சிறப்பு துடுப்பாட்ட வீரர் ஒருவரை பின் வரிசையில் பயன்படுத்துவது பற்றியே தேர்வுக் குழுவினர் அவதானம் செலுத்தினர். இதில் இலங்கை டெஸ்ட் அணித் தலைவர் தனஞ்சய டி சில்வா தனது இடத்தை தக்க வைத்துள்ளார். இடது கை துடுப்பாட்ட வீரரான குசல் ஜனித் பெரேராவுக்கு இடம் கிடைக்கவில்லை.

தற்போது நடைபெற்று வரும் பயிற்சி டி20 முக்கோண போட்டித் தொடரில் பெரேரா 3 போட்டிகளில் 56 ஓட்டங்களை பெற்றிருப்பதோடு, அவர் டி20 சர்வதேச போட்டிகளில் கடந்த ஓர் ஆண்டுக்குள் அரைச்சதம் ஒன்றையேனும் பெறறதில்லை. டி20 சர்வதேச போட்டிகளில் அவர் கடைசியாக 2023 ஏப்ரல் மாதம் நியூசிலாந்துக்கு எதிராக ஒக்லாந்தில் 53 ஓட்டங்களை பெற்றிருந்தார்.

இந்தப் பயிற்சி போட்டிகளில் 4 ஆட்டங்களில் 8 விக்கெட்டுகளை வீழ்த்திய வெள்ளாலகே இதுவரை டி20 சர்வதேச போட்டிகளில் ஆடியதில்லை. எனினும், வெள்ளாலகே எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்து போட்டிகளில் மாற்றங்களை கொண்டுவரக் கூடிய பின் வரிசை துடுப்பாட்ட வீரராக உள்ளார்.

டி20 உலகக் கிண்ண போட்டி எதிர்வரும் ஜூன் 1 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரை அமெரிக்கா மற்றும் மேற்கிந்திய தீவுகளில் நடைபெறவுள்ளது. தொடரின் ஆரம்பச் சுற்றுப் போட்டிகளில் சில அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெறவுள்ளதோடு இலங்கை அணியின் மூன்று போட்டிகள் அமெரிக்காவில் நடைபெறவுள்ளன. நெதர்லாந்துக்கு எதிரான போட்டி மேற்கிந்திய தீவுகளில் நடைபெறவுள்ளது.

டி20 உலகக் கிண்ணத்திற்கான 25 பேர் கொண்ட ஆரம்ப அணியை இலங்கை அறிவித்தபோதும் இறுதிக் குழாம் இன்னும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

உலகக் கிண்ணத்தில் பங்கேற்பதற்காக இலங்கை அணி எதிர்வரும் மே 14 ஆம் திகதி அமெரிக்க நோக்கி புறப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை குழாம்: வனிந்து ஹசரங்க (தலைவர்), சரித் அசலங்க, பெத்தும் நிசங்க, குசல் மெண்டிஸ், சதீர சமரவிக்ரம, தசுன் ஷானக்க, அஞ்சலோ மத்தியூஸ், தனஞ்சய டி சில்வா, மஹீஷ் தீக்ஷன, கமிந்து மெண்டிஸ், துனித் வெள்ளாலகே, துஷ்மந்த சமீர, டில்ஷான் மதுஷங்க, நுவன் துஷார மற்றும் மதீஷ பதிரண.

# லங்கா கால்பந்து கிண்ணம்: அரையிறுதி நாளை ஆரம்பம்

ஸ்ரீ லங்கா ஸ்போட்ஸ் குரூப் தனியார் நிறுவனம் ஏற்பாடு செய்துள்ள 'லங்கா கால்பந்து கிண்ண' தொடரின் அரையிறுதிப் போட்டிகள் நாளை (11) மற்றும் நாளை மறுதினம் (12) நடைபெறவுள்ளன.



கொழும்பு சிட்டி லீக் மைதானத்தில் நடைபெற்று வரும் இந்தத் தொடரில் நாளை நடைபெறும் முதல் அரையிறுதிப் போட்டியில் கண்டி மற்றும் யாழ்ப்பாண அணிகள் மோதவுள்ளன. யாழ்ப்பாண அணி ஆரம்ப போட்டியில் களுத்துறை அணியை 3–2 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியே அரையிறுதிக்கு முன்னேறியமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து இரண்டாவது அரையிறுதிப் போட்டி காலி மற்றும் கொழும்பு அணிகளுக்கு இடையே நடைபெறவுள்ளது. இந்தத் தொடரின் இறுதிப் போட்டி எதிர்வரும் மே 18ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்தத் தொடரில் மொத்தம் 8 அணிகள் பங்கேற்றதோடு சம்பியன் அணிக்கு ஒரு மில்லியன் ரூபா மற்றும் இரண்டாம் இடம் பிடிக்கும் அணிக்கு 5 இலட்சம் ரூபா பரிசு வழங்கப்படவுள்ளது.

# பாடசாலை கால்பந்து நாளை



நெஸ்ட்லே மைலோ நிறுவனத்தின் அனுசரணையில் இலங்கை பாடசாலை கால்பந்து சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான கால்பந்து தொடர் நாளை (11) குதிரைப்பந்தய திடல் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இளம் வீர, வீராங்கனைகளை ஊக்குவிக்கும் வகையில் இந்தத் தொடர் நடத்தப்படுகிறது.

இதில் சுமார் 800 ஆண்கள் மற்றும் 600 பெண்கள் வரை பங்கேற்கவுள்ளனர்.

## ஈரான் அணு எச்சரிக்கை



இஸ்ரேல் தமது இருப்புக்கு அச்சுறுத்தலாக இருந்தால் ஈரான் அணு ஆயுதம் தயாரிக்கும் நிலைக்குத் தள்ளப்படும் என்று ஈரான் உயர்மட்ட தலைவரின் ஆலோசகரான கமால் சராசி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

'அணு ஆயுதம் தயாரிக்கும் முடிவை நாம் எடுக்காதபோதும் ஈரானின் இருப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளானால், எமது இராணுவ கோட்பாட்டில் மாற்றத்தை கொண்டுவருவதைத் தவிர வேறு வழி இருக்காது' என்று உயர்மட்டத் தலைவர் அயதுல்லா அலி கமனேவின் ஆலோசகர் கூறினார்.

'சியோனிச அரசு எமது அணுசக்தி வசதிகள் மீது தாக்குதல் நடத்தினால் எமது நிலை மாறிவிடும்' என்று ஈரானிய மாணவர் செய்தி வலையமைப்புக்கு அவர் தெரிவித்தார்.

அமைதி நோக்கத்திற்காகவே அணுத் திட்டத்தை செயற்படுத்துவதாக ஈரான் கூறி வரும் நிலையிலேயே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. 2000களின் ஆரம்பத்தில் அணு ஆயுதம் தயாரிப்பதை தடை செய்து உயர்மட்டத் தலைவர் மத ஆணை அல்லது பத்வா ஒன்றை பிறப்பித்திருந்தார். எனினும் மேற்குலக அழுத்தம் ஈரான் அணு ஆயுதங்களை தயாரிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதாக 2021 இல் அப்போதைய உளவுத் துறை அமைச்சர் குறிப்பிட்டிருந்தார்.

அணு ஆயுதம் தயாரிப்பதற்கு யுரேனியத்தை 90 வீதம் செறிவூட்ட வேண்டும் என்ற நிலையில் ஈரான் அதனை 60 வீதம் செறிவூட்டியுள்ளது. சர்வதேச அணுசக்தி அமைப்பின் உத்தியோகபூர்வ அளவுகோலின் படி, தற்போது கையிருப்பில் உள்ள அணுசக்தி பொருட்கள் மேலும் செறிவூட்டப்பட்டால், அது இரண்டு அணு ஆயுதங்களுக்கு போதுமானதாக இருக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## இந்தோ–பசுபிக் பாதுகாப்பு: அமெரிக்க தளபதி உறுதி



சுதந்திரமானதும் திறந்த அடிப்படையிலானதுமான இந்தோ–பசுபிக் பிராந்தியத்தின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் என்று அமெரிக்காவின் இந்தோ–பசுபிக் பிராந்திய புதிய கட்டளைத் தளபதி சமுவேல் பப்பரோ தெரிவித்துள்ளார்.

இதன் நிமித்தம் எமது நண்பர்களோடும் கூட்டணியினருடனும் இணைந்து செயற்படுவோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஹவாயில் நடைபெற்ற அமெரிக்க கடற்படையினரின் வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ள அவர், எந்தவொரு நெருக்கடி மற்றும் மோதலின் போதும் நாம் அமைதியான தீர்வுகளுக்காக உழைப்போம் என்றார்.

# சர்வதேச செய்திகள்

## ரபா மீதான படையெடுப்பு திட்டம்

# இஸ்ரேலுக்கான ஆயுதங்களை இடைநிறுத்த பைடன் எச்சரிக்கை: தொடர்ந்தும் தாக்குதல்

தெற்கு காசா நகரான ரபா மீது இஸ்ரேல் படையெடுப்பு ஒன்றை மேற்கொண்டால், இஸ்ரேலுக்கான ஆயுதங்கள் இடைநிறுத்தப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் முதல் முறையாக வெளிப்படையாக எச்சரிக்கை விடுத்துள்ளார். எனினும் ரபா உட்பட காசாவில் இஸ்ரேலின் உக்கிர தாக்குதல்கள் தொடர்ந்ததோடு எகிப்து தலைநகர் கெய்ரோவில் நேற்றும் (09) போர் நிறுத்த பேச்சுவார்த்தைகள் நிடித்தன.

'அவர்கள் ரபாவுக்குள் சென்றால் நான் ஆயுதங்களை வழங்க மாட்டேன் என்பதை தெளிவாகக் கூறிக்கொள்கிறேன்' என்று சி.என்.என். தொலைக்காட்சிக்கு பேட்டி அளித்த பைடன் குறிப்பிட்டார். ரபா மீதான இஸ்ரேலின் திட்டத்தில் பொது மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று அமெரிக்கா தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகிறது.



இஸ்ரேலுக்கு வழங்கப்பட்ட அமெரிக்க குண்டுகள் ஹமாஸை அழிப்பதற்காக ஏழு மாதங்களாக நடத்தப்பட்ட தாக்குதலில் காசா பொது மக்கள் கொல்லப்பட்டதை பைடன் ஒப்புக்கொண்டார்.

காசாவில் தொடரும் தாக்குதல்கள் காரணமாக இடம்பெயர்ந்து வந்த ஆயிரக்கணக்கான மக்கள் அடைக்கலம் பெற்றுள்ள ரபா மீது படை நடவடிக்கை ஒன்றை முன்னெடுப்பதற்கு இஸ்ரேல் தீவிரமாக முயன்று வரும் நிலையில் அதற்கு எதிராக சர்வதேச அழுத்தங்களும் அதிகரித்துள்ளன. இதில் பைடனின் கருத்து இதுவரை இல்லாத அளவுக்கு இஸ்ரேலுக்கு விடுக்கும் வெளிப்படையான எச்சரிக்கையாக அமைந்துள்ளது.

பைடனின் இந்தக் கருத்துக்கு இஸ்ரேல் தரப்பில் இருந்து உடன் எந்த பதிலும் வெளியிடாதபோதும் ரபா மீதான படை நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு குறிப்பிட்டுள்ளார். ரபா மீது தாக்குதல் நடத்தி அங்கிருப்பதாகக் கூறும் ஆயிரக்கணக்கான ஹமாஸ் போராளிகளை தோற்கடிப்பதாக இஸ்ரேல் குறிப்பிடுகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை எகிப்துடனான ரபா எல்லைக் கடவையை கைப்பற்றி பிரதான உதவிப் பாதையை துண்டித்த இஸ்ரேல், ரபா மீது தொடர்ந்து வான் மற்றும் பீரங்கி தாக்குதல்களை நடத்தி வருகிறது. காசாவில் தொடரும் போருக்கு சக ஜனநாய கட்சியினர் எதிர்ப்பு வெளியிட்டு வருவது மற்றும் பல்கலைக்கழக ஆர்ப்பாட்டங்களுக்கு மத்தியில் பைடன் நிர்வாகம் உள்நாட்டில் கடும் அழுத்தத்தை எதிர்கொண்டு வருகிறது. குறிப்பாக இஸ்ரேலுக்கு ஆதரவை அளித்து வரும் பைடன் இந்த ஆண்டில் இரண்டாவது தவணைக்காக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ளார்.

எனினும் இஸ்ரேலுக்கு மிகப்பெரிய ஆயுத உதவிகளை வழங்கும் நாடாக இருக்கும் அமெரிக்கா, ஒக்டோபர் 7 இல் போர் வெடித்த பின்னர் அந்த உதவிகளை மேலும் அதிகரித்தது.

ஏவுகணை எதிர்ப்பு அமைப்பான அயர்ன் டோம் போன்ற இஸ்ரேலிய தற்காப்புக்கான ஆயுதங்கள் தொடர்ந்து வழங்கப்படும் என்றும் பைடன் குறிப்பிட்டார்.

முன்னதாக இஸ்ரேலுக்கு வெடிகுண்டுகளை வழங்குவதை அமெரிக்கா நிறுத்தி வைத்திருப்பதாக வெளியான செய்தியை அமெரிக்க அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர். காசா பொதுமக்கள் மீதான அச்சுறுத்தல் காரணமாகவே அமெரிக்கா இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

இந்த முடிவு பெரும் ஏமாற்றத்தை தருவதாக குறிப்பிட்டிருக்கும் ஐக்கிய நாடுகளுக்கான இஸ்ரேலிய தூதுவர் கிளார்ட் ஏர்டன், இஸ்ரேலுக்கான ஆயுத விநியோகத்தை அமெரிக்கா நிறுத்தும் என்று நம்பவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

### ரபாவில் குண்டு மழை

ரபாவில் நேற்றுக் காலையும் கடுமையான செல் தாக்குதல்கள் இடம்பெற்றதாக அங்கிருக்கும் ஏ.எப்.பி. செய்தியாளர் குறிப்பிட்டதோடு, காசாவின் வடக்கு மற்றும் மத்திய பகுதிகளிலும் ஹமாஸ் நிலைகள் மீது தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் இராணுவம் கூறியது.

கடந்த இரண்டு நாட்களில் இல்லாத அளவுக்கு ரபாவில் கடுமையான குண்டு தாக்குதல்கள் இடம்பெற்று வருவதாக அங்குள்ள உதவிப் பணியாளர் ஒருவர் பி.பி.சி. செய்தி நிறுவனத்திற்கு குறிப்பிட்டுள்ளார். ரபாவில் நேற்று (09) காலை குண்டு சந்தங்கள் தொடர்ந்து கேட்டு வந்தன என்று பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா. உதவி நிறுவனத்தின் தொலைத்தொடர்பு அதிகாரி லுவிஸ் வோட்டரிட் குறிப்பிட்டார்.

மேற்கு ரபாவில் தாம் இருக்கும் கட்டடம் அருகில் விழும் குண்டுகளால் அதிர்ந்து வருகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ரபாவில் இடைவிடாது குண்டு விழுந்ததாக அங்கிருக்கும் பிரிட்டன் நாட்டு மருத்துவர் ஜேம்ஸ் ஸ்மித் விபரித்துள்ளார். 'பத்து விநாடிக்கு ஒருமுறை குண்டு வெடிக்கும் சத்தத்தை கேட்டேன்' என்றார்.

மறுபுறம் வடக்கு காசாவின் செய்தூன் பகுதியில் நேற்று கடுமையான வான் மற்றும் பீரங்கி தாக்குதல்கள் இடம்பெற்றதாக பலஸ்தீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இதில் பல டஜன் பேர் கொல்லப்பட்டிருப்பதாக பலஸ்தீன உத்தியோகபூர்வ செய்தி நிறுவனமான வபா தெரிவித்துள்ளது.

ஹசன் அல் பன்னா பள்ளிவாசல் மற்றும் காசா பல்கலைக்கழகத்தை சூழ பல வீடுகள் மற்றும் கட்டடங்கள் இலக்கு வைக்கப்பட்டுள்ளன. பல கட்டடங்கள் தீப்பற்றி எரிந்தன என்று அந்த செய்தி நிறுவனம் கூறியது.

இந்நிலையில் காசாவில் கடந்த எட்டு மாதங்களாக தொடரும் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 34,904 ஆக அதிகரித்திருப்பதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் மேலும் 78,514 பேர் காயமடைந்துள்ளனர்.

ரபாவின் கிழக்கு பக்கமாக இஸ்ரேலிய டாங்கிகள் மற்றும் துருப்புகள் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் முன்னேறி வரும் நிலையில் அங்கிருந்து இதுவரை சுமார் 80,000 பேர் வெளியேறி இருப்பதாக பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா நிறுவனம் தெரிவித்துள்ளது.

ரபாவில் இயல்பு வாழ்வு முழுமையாக நின்றுவிட்டது என்று இடம்பெயர்ந்த பலஸ்தீனர் ஒருவரான மர்வான் அல் மஸ்ரி குறிப்பிட்டார். 'நகரின் மேற்குப் பகுதியில் வீதிகள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன' என்று 35 வயதான அந்த ஆடவர்கள் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திடம் தெரிவித்தார்.

'நாம் கடுமையான அச்சத்திலும் முடிவில்லாத கவலையிலும் இருக்கிறோம்' என்று 29 வயதான முஹனத் அஹமது கிஷ்தா என்பவர் தெரிவித்தார். 'இஸ்ரேல் இராணுவம் பாதுகாப்பானது என்று கூறும் இடங்களிலும் குண்டு தாக்குதல்கள் இடம்பெறுகின்றன' என்றும் குறிப்பிட்டார்.

எல்லைகள் மூடப்பட்டிருப்பதால் தெற்கு காசா மருத்துவமனைகளில் வெறும் மூன்று நாட்களுக்கு மாத்திரமே எரிபொருள் எஞ்சி இருப்பதாக உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதனொம் கெப்ரியேசுஸ் குறிப்பிட்டுள்ளார். 'எரிபொருள் இல்லாவிட்டால் அனைத்து மனிதாபிமான நடவடிக்கைகளும் நின்றுவிடும்' என்றும் அவர் கூறினார்.

### தொடரும் பேச்சு

இழுபறி நீடித்து வரும் போர் நிறுத்த முயற்சியில் உடன்பாடு ஒன்றை எட்டுவதற்கு கெய்ரோவில் பேச்சுவார்த்தைகள் நீடித்தன. எகிப்து, கட்டார் மற்றும் அமெரிக்காவின் மத்தியஸ்தத்தில் இடம்பெறும் இந்த பேச்சில் ஹமாஸ் பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனர்.

இதில் ஹமாஸுடன் இணைந்து போரிட்டு வரும் இஸ்லாமிய ஜிஹாத் மற்றும் பலஸ்தீன விடுதலை அமைப்பின் பிரதிநிதிகளும் பங்கேற்றிருப்பதாக எகிப்து உளவுப் பிரிவுடன் தொடர்புபட்ட அல் கெஹெரா செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

எனினும் இந்தப் பேச்சுவார்த்தைகள் தொடர்பில் இஸ்ரேல் மற்றும் பிராந்திய ஊடகங்களில் முரண்பாடான செய்திகள் வெளியாகி வருகின்றன. இடைவெளி குறைந்து வருவதாக கெய்ரோவில் இருந்து வரும் செய்திகள் கூறும் அதேநேரம் பிரதான இடைவெளிகள் தொடர்ந்து நீடிப்பதாக இஸ்ரேல் தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த திங்கட்கிழமை ஒப்புக்கொண்ட போர் நிறுத்த முன்மொழிவுக்கு அப்பால் தமது அமைப்பு செல்லப்போவதில்லை என்று கட்டாரில் உள்ள ஹமாஸ் அரசியல் அலுவலக உறுப்பினரான இஸ்ஸத் எல் ரெஷிக் குறிப்பிட்டுள்ளார்.

'இஸ்ரேல் உடன்படிக்கை ஒன்றை எட்டுவதில் தீவிரம் காட்டுவதில்லை. அது ரபா மற்றும் எல்லைக் கடவை மீதான ஆக்கிரமிப்பு பேச்சுவார்த்தைகளை ஒரு மறைப்பாக பயன்படுத்துகிறது' என்று ரெஷிக் தெரிவித்துள்ளார்.

மத்தியஸ்தர்களின் மூன்று கட்ட போர் நிறுத்த முன்மொழிவொன்றுக்கே ஹமாஸ் கடந்த திங்கட்கிழமை ஒப்புதல் அளித்தபோதும் ஹமாஸ் அதனை நிராகரித்தது.

இந்நிலையில் அமெரிக்க உளவுப் பிரிவான சி.ஐ.ஏ. வின் தலைவர் பில் பர்ன்ஸ் கடந்த புதன்கிழமை இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவை சந்தித்து போர் நிறுத்தம் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தியதாக இஸ்ரேலிய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தமது பிடியில் இருக்கும் பணயக்கைதிகளை விடுவிப்பதற்கு கெய்ரோ பேச்சுவார்த்தையே இஸ்ரேலுக்கான கடைசி வாய்ப்பு என்று ஹமாஸ் முன்னதாக எச்சரிக்கை விடுத்திருந்தது.

இப்பத்திரிகை அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 மே மாதம் 10ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.